# பயிற்சி மூலம்
# பாஷைத் தேர்ச்சி

ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா, M.A., M.Litt.,



சுன்னாகம்:
வட - இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்

உரிமை பதிவு] 1949 [விலை ரூ. 1-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி மூலம் —
# பாஷைத் தேர்ச்சி

*ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா M.A., M.Litt.,*



சுன்னாகம் :

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

*Copy-right* ] 1949 [ விலை ரூ. 1-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு 1948
இரண்டாம் பதிப்பு 1949

எனது தந்தை அவர்கட்கு
அன்பார்ந்த சமர்ப்பணம்

41076

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | மதிப்புரை ... ... ... | vi |
| | முன்னுரை ... ... ... | vii |
| | **வசன பாகம்** | |
| 1. | குழந்தைத் தன்மை ... ... | 1 |
| 2. | பல்லக்குச் சுமக்கிறது உங்கள் கடமை | 3 |
| 3. | கல்வியின் சிறப்பு ... ... | 4 |
| 4. | சமதருமம் ... ... | 6 |
| 5. | சரித்திர பாடம் ... ... | 8 |
| 6. | பொருளின் தன்மைகள் [சம்பாஷணை] | 10 |
| 7. | இரட்டையர் ... ... | 13 |
| 8. | மெய் — பொய் ... ... | 15 |
| 9. | சங்கீத இன்பம் ... ... | 17 |
| 10. | மழைத்துளி சொன்ன கதை ... | 18 |
| 11. | விமலையின் சம்பவம் [சம்பாஷணை] ... | 22 |
| 12. | ஔவையார் ... ... | 25 |
| 13. | நெருப்பின் உபயோகம் ... ... | 27 |
| 14 | ஏழைக் குடியானவன் கதை ... | 29 |
| 15. | இயற்கை இன்பம் ... ... | 31 |
| 16. | வறுமையின் பெருமை ... ... | 33 |
| 17. | மக்கள் வாழ்க்கையின் ஒத்த தன்மை | 34 |
| 18. | புருவரசன் சித்திரக்கிரீவன் ... | 36 |
| 19. | கற்றறிந்தார் பெருமை ... ... | 38 |
| 20. | நத்தையின் வயிற்றிற் பிறந்த முத்து | 40 |
| 21. | களிமண்ணின் உபயோகம் ... | 42 |
| 22. | சோழநாட்டின் சிறப்பு ... ... | 44 |
| 23. | "தேமோ பிளாஸ்கு" (Thermos flask) | 46 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | பக்கம் |
|---|---|---|
| 24. | பொருளறிவும் புதிய வாழ்க்கையும் | 49 |
| 25. | புலவன் சந்தித்த வீரன் ... ... | 52 |
| 26. | கந்தகம் ... ... | 55 |
| 27. | இராமதாஸ் ... ... | 57 |
| 28. | தமிழ்நாட்டுப் பெண்பாலார் விளையாட்டுக்கள் ... | 58 |
| 29. | கவிஞர் வீரராகவர் ... ... | 62 |
| 30. | மணிமேகலை ... ... | 64 |
| 31. | கண்ணகி ... ... | 68 |
| 32. | ஈகை ... ... | 70 |
| 33. | வாழ்க்கையின் அதிசயம் ... ... | 72 |
| 34. | தமிழ் வசனமும் அதற்கு இலக்கணமும் | 74 |
| 35. | பண்டைத் தமிழரின் வியாபாரம் ... | 77 |
| 36. | வீரமாமுனிவர் ... ... | 79 |
| 37 | இசைக்கலை ... ... | 82 |
| 38. | புலவர் பெருமை ... ... | 85 |
| 39. | இரவீந்திரநாதரின் திடசித்தம் ... | 88 |
| 40. | திருக்குற்றால மலைச் சிறப்பு ... | 91 |


## செய்யுட் பகுதி


| | | |
|---|---|---|
| 1. | தெய்வங்கொள்கை ... ... | 95 |
| 2. | விடாமுயற்சி ... ... | 96 |
| 3. | மூர்க்கரியல்பு ... ... | 97 |
| 4. | தொழில் ... ... | 98 |
| 5. | பசுவின் துயரம் — பெரியபுராணம் ... | 99 |
| 6. | நன்னெறி ... ... | 101 |
| 7. | அவரவர் கடமை ... ... | 102 |
| 8. | குருட்டுப் பையன் ... ... | 103 |
| 9. | அரிச்சந்திர புராணம் ... ... | 104 |
| 10. | அரிச்சந்திர புராணம் ... ... | 105 |





| | | பக்கம் |
|---|---|---|
| 11. | "மனதி லுறுதிவேண்டும்......" ... | 106 |
| 12. | வாக்குண்டாம் ... ... | 107 |
| 13 | மலையும் அணிலும் ... ... | 108 |
| 14. | "நாராய் நாராய் செங்கால் நாராய்" | 110 |
| 15 | குறள் ... ... | 111 |
| 16. | தமிழர் அஞ்சா நெஞ்சம்! ... ... | 112 |
| 17. | பாஞ்சாலி சபதம் ... ... | 113 |
| 18. | பஞ்சதந்திரம் ... ... | 115 |
| 19. | குறள் ... ... | 117 |
| 20. | நளவெண்பா ... ... | 118 |
| 21. | நளவெண்பா ... ... | 119 |
| 22. | நட்பின் சிறப்பு ... ... | 120 |
| 23 | "வள்ளுவர் தந்த திருமறை" ... | 122 |
| 24. | கன்னன் நன்றியுரை ... ... | 124 |
| 25. | விபீடணன் அடைக்கலம் ... ... | 125 |
| 26. | பாஞ்சாலி சபதம் ... ... | 127 |
| 27 | இரங்கற் பாக்கள் ... ... | 129 |
| 28. | சிலப்பதிகாரம் ... ... | 131 |
| 29. | இராமாயணம் ... ... | 133 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

திரு. இரத்தினம் செல்லையா அம்மையார் பயிற்சி மூலம் பாஷைத் தேர்ச்சி என்ற நூலைத் தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்வது கண்டு தமிழர்கள் மனம் அறிவு ஒளியில் மூழ்கி எதிர்கால இன்பக் காட்சிகளை எல்லாம் காணும். நம் வாழ்வு நம்மோடு முடிவதில்லை. நம் குழவிகள் வழியே எதிர்காலத்தை நோக்கி முடிவின்றிச் செல்கிறது. அக்குழந்தைகள் வாழ அன்றோ நாம் வாழவேண்டும். ஒரு பெரியார் கூறியது போல இது குழவிகளின் நூற்றாண்டு. மேனாட்டில் இளங் குழவிகளேனும் இன்பமாகக் கற்று மகிழ்கின்றார்கள். இதற்கெனச் சில முறைகளைக் கையாண்டு வெற்றிபெற்றுள்ளார்கள் ஆனால் நாமோ அவற்றைக் கற்பதோடு நின்றுவிடுகின்றோம்; பழக்கத்திற் கொண்டு வருவதில்லை. இதன் பயனைப் பள்ளிக்கூடம் என்றாலேயே அஞ்சி நடுங்கும் குழந்தைகளே பலர். நம் பள்ளிக்கூடங்களைக் கண்ணன் குழவிகளோடு விளையாடிய பிருந்தாவனங்களாக மாற்றி யமைத்தாலன்றி நாம் உயர முடியாது.

இத்தகைய கடவுள் தொண்டில் திரு. செல்லையா அம்மையார் ஈடுபட்டுள்ளார். யான் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபோது அவர் கையாளும் முறைகளைப் பல பள்ளிக்கூடங்களில் யான் கண்டு களிக்குமாறு செய்தார். அனைவருக்கும் பயன்படுமாறு பாட புத்தகங்களாக அம்மையார் எழுதி உதவினால் நன்று என்று என் பேரவாவினைத் தெரிவித்தேன். "முன்னரே எழுதி முடித்தேன். அச்சிடவேண்டும்" என அம்மையார் கூறியபோது எனக்குப் பொங்கிய மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஆங்கிலத்தில் பலார்ட் (Ballard) முதலியோர் இத்தகைய நூல்களால் தாய்மொழி கற்பதனைக் குழந்தைகள் மிக விரும்பும் விருந்தாக அமைத்துள்ளார்கள். அம்மையார் நூல்களும் அந்த வகையிற் பேருதவி செய்யும் எனக் கருதுகிறேன்.

(Sgd.) தெ. பொ. மீனாக்ஷி சுந்தரனார்
Ex Professor of Tamil
Annamalai University

'தமிழகம்'
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை

உ

# முன்னுரை

தமிழிலக்கியத்தை ஆழ்ந்து கற்றலிலும் சுவைத்து மகிழ்தலிலும் அதிக ஊக்கங்கொள்ளவேண்டுமென அறிஞர் வற்புறுத்துவதை ஆசிரிய உலகம் நன்கறியும். இம்முறையில் தேர்ச்சி பயக்கும் வசன பாகங்களும் செய்யுட்பாகங்களும் அமைந்த நூல்கள் உவப்புடன் போற்றப்படுதலைக் காண்கின்றோம். பல நூல்களிலிருந்து தொகுக்கப்பட்ட தமிழ் மஞ்சரிகளைக் கசடறக் கற்றல், தமிழ்ப் பாஷையிலும் மாணவர்க்குச் சிறந்த பயிற்சியைக் கொடுக்கும் என்ற கொள்கை நெடுநாளாக நிலவி வருகின்றது. ஆதலின், இத்தேவைக்கு அமைந்த தமிழ்மஞ்சரி யொன்றைப் பாடசாலை மாணவரின் உபயோகத்தின் பொருட்டு இயற்றி உதவுதல் பொதுநலச் சேவையாமன்றி வேறாகாது.

ஆகவே, கலாசாலை மேல்வகுப்பு மாணவர்க்குத் தமிழிலக்கியங்களின் முக்கியாம்சங்களிற் பயிற்சியளிக்கவல்ல பாடக் கிரமங்களை வகுத்து உதவும் இம்மஞ்சரியில் பலதுறைப்பட்ட பயிற்சி வினாக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில், பகிரங்க சோதனைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் குறித்த இலக்கியப் பகுதிகளை, அவற்றின் அமைப்பையும் பொருளையும் உணர்ந்து சுவைக்கப் பழகியிருத்தல் அவசியம் வேண்டப்படுவதாகும். எட்டாம் வகுப்பு முதலாகவுள்ள மேல்வகுப்பு மாணவர்களெல்லாம் தாம் கற்கும் இலக்கியத்தை நன்கு விளங்கவும், கலை மதிப்பின் முக்கியாம்சங்களை உபயோகப்படுத்தவும் ஆற்றல் பெற்றவர்களாக வேண்டும் என்பதும் இக்காலக் கொள்கை. அதற்கிசைய அத்துறைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க தேர்ச்சி பயக்கத்தக்க பல திறப்பட்ட விஷயங்களை நல்குவதே இம்மஞ்சரியின் நோக்கமாகும்.

இம்மஞ்சரியில் மொழியாட்சிக்குத் தேவையான முக்கியாம்சங்கள் அமைந்த பாடக் கிரமங்களும், சொற்களின் இலக்கண அமைதி சொல்லாட்சி பொருள் விரித்தெழுதல் பொருளைச் சுருக்கியெழுதல் என்பவற்றை அடக்கிய அப்பியாச வினாக்களும் தொடர்புறவும் வளர்ச்சி முறையை அநுசரித்தியலவும் பொருத்தமுறச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும், கட்டுரையமைப்பு முறையும் இலக்கியத்தைச் சுவைக்கும் முறையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மாணவர்களைச் சுவபுத்தியும் சுவ ஆற்றலுங் கொண்டு ஆராயச் செய்விப்பதற்கு முயல்வதே இந்நூலின் முதல் நோக்கமாகும். சிரத்தையோடு தெரிந்தெடுத்த பல திறப்பட்ட அப்பியாச பாடங்களின் மூலமாக மாணவரை உரிய வழியில் நடாத்துவதே இந் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் வழியாகும்.

இம்மஞ்சரியைத் தொகுப்பதற்கு, இயன்றமட்டும் பல திறப்பட்ட நூல்களிலிருந்து விஷயங்களை ஆய்ந்தெடுக்க முயன்றுளேன் அங்ஙனம் முயன்றது முற்காலத்திலும் இக்காலத்திலும் உள்ள தமிழ்ப் புலவர்களின் ஒப்புமையையும் வேற்றுமையையும் சீர்தூக்கித் தெளிவதற்குச் சாதகமாகும்.

இப்பகுதிகளைத் தெரிந்தெடுத்தற்கு ஆதாரமான நூல்களின் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுங் கடப்பாடுடையேன். அன்றியும், இந்நூலைத் தொகுப்பதற்கு மதிக்கொணு உதவியும் ஒத்துழைப்பும் உவந்தளித்த யாழ்ப்பாண நகரப்பகுதி ஆசிரியர்களுடைய நன்றியும் மதிக்கத்தக்கதாகும்.

இரத்தினம் - செல்லையா

# பயிற்சி மூலம் பாஷைத் தேர்ச்சி

## 1

வயதேறலை எவரும் எதிர்த்து நிறுத்தல் இயலாது. ஆயினும், உடல் அதற்கேற்பத் தளர்தலைத் தடுக்கலாம். குழந்தைத் தன்மையோடு உலகில் வாழப் பழகல் வேண்டும்; துன்பந் தரத்தக்க எண்ணங்களை மனத்துள் நுழைய விடலாகாது; எந்நாளும் இன்பமும் மன அமைதியுமே மனத்தில் நிலவுதல் வேண்டும்; குழந்தைகளோடு பெரும் பொழுதைக் கழித்தல் வேண்டும்.

காந்தி அடிகள் இன்பநிலையில் இருந்து வந்ததற்குக் காரணம் அவரது குழந்தைத் தன்மையேயாகும். அவர் எங்குச் சென்றாலும் குழந்தைகள் அவரைச் சூழ்ந்துகொண்டு "காந்தித் தாத்தா" என மகிழ்ச்சியுறல் வழக்கம்.

ஒருவன் தான் நாடோறும் வயதில் முதிர்ச்சி பெறுவதை அறவே மறந்துவிடல் வேண்டும். எத்தொழிலைச் செய்யினும் அதனைச் சந்தோஷத்துடன் செய்து அச்செயலில் இன்பம் நுகர்பவனே குழந்தைத் தன்மை எய்தியவனாவான்.

**விடை எழுதுக:**

1. உடல் தளர்ந்துபோகாமல் எவ்வாறு தடுக்கலாம்?
2. குழந்தைத் தன்மையாவது யாது?
3. இப்பகுதிக்கு ஏற்றதோர் தலையங்கம் குறிப்பிடுக.
4. வாக்கியங்களில் அமைக்க:— வயதேறல், உடல் தளர்தல், குழந்தைத் தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தளர்ச்சி, வளர்ச்சி, அதிர்ச்சி, முதிர்ச்சி, கழித்தல், களித்தல் என்னும் சொற்களை அவற்றின் கருத்துத் தெளிவாகப் புலப்படும்படி வசனங்களில் வழங்குக.
6. இரு பக்கத் தொடர்களையும் பொருட் பொருத்த முற இயைத்து வசனங்கள் அமைக்க:-

| | | |
|---|---|---|
| i | இன்பமும் மனஅமைதியும் | மனத்துட் கொள்ளுதலாகாது |
| ii | உடல் தளர்தலை | தடுக்க முடியாது |
| iii | துன்பந் தரத்தக்க எண்ணங்கள் | மனத்தில் நிலவுதல் வேண்டும் |
| iv | வயதேறலை | நிறுத்த இயலும் |

7. மேற்குறித்த பகுதியில் வந்துள்ள மூன்று தொழிற் பெயர்களை எடுத்துக் கூறி அவைகள் ஒவ்வொன்றும் எவ் வினையடிகளிலிருந்து தோன்றியன என்றும் எழுதுக.
8. இப்பகுதியில் வந்துள்ள செயப்படுபொருள் குன்றா வினை ஒன்றும் எதிர்மறை வினை ஒன்றும் எழுதுக.
9. இரண்டு பண்புப் பெயர்கள் எழுதுக.
10. காந்தியடிகளின் வாழ்க்கை யிலட்சியம் (கட்டுரை வரைக).
11. தேசிய சுதந்திரத்தைப்பற்றி வீர முழக்கஞ் செய்த கவிஞர் ஒருவரின் வரலாறு எழுதுக.

## 2

ஒருநாள் ஒரு செல்வன் தன் பல்லக்குச் சுமக்கும் ஆட்களை அழைத்து, "பசுக் கன்றைக் காணவில்லை; அதைத் தேடிப் பிடித்து வாருங்கள்" என்று சொன்னான். அதற்கு அவர்கள், "நாங்கள் 



பல்லக்குச் சுமக்கிறவர்களோ? மாடு மேய்க்கிறவர்களோ?" என்றார்கள். அதைக்கேட்ட தனவான் அவர்களுக்குப் புத்திவரச் செய்யவேண்டுமென்று யோசித்து, மத்தியான வேளையில் பல்லக்கைக் கொண்டுவரச் சொன்னான். பின் தான் அதில் ஏறிக்கொண்டு கன்றைத் தேடும்படி நெரிஞ்சில் முள் இருக்கிற காட்டுமார்க்கமாகப் போகச்சொன்னான். அவர்கள் அப்படியே போய்த் திரிந்து வருந்துகையில் செல்வனிடம் முறையிட்டார்கள். அதற்கு அவன் "பல்லக்குச் சுமக்கிறது உங்கள் கடமை; கன்றைத் தேடுகிறது என் கடமை" எனக் கூறினான்.

**விடை எழுதுக:**

1. பல்லக்குச் சுமக்கும் ஆட்கள் கன்றைத் தேட மறுத்ததற்குக் காரணம் யாது?
2. தனவான் அவர்களுக்கு எப்படிப் புத்தி வரச் செய்தான்?
3. பல்லக்குச் சுமப்போர் செல்வனிடம் யாது முறையிட்டார்கள்?
4. கீறிட்ட இடங்களை நிரப்புக:
   i. முற்காலத்துப் பல்லக்குக்குச் சமமாக இக்காலத்தில் இருந்து வருவது ______
   (புகைரதம், ஆகாயக்கப்பல், றிக்சோவண்டி, மோட்டார்வண்டி.)
   ii. கன்றைத் தேடிச்சென்ற செல்வன் ______
   (அன்பில்லாதவன், புத்தி உடையவன், மோட்டார் வண்டி உடையவன்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. நெருஞ்சில் முள் ________ (பல்லுக் குத்த உதவும், வேலி அடைக்க உதவும், ஒன்றுக்கும் உதவாது.)

5. மேற்குறித்த பந்தியில் தற்கூற்ருயமைந்திருக்கும் வசனங்களை அயற்கூற்ருக மாற்றி எழுதுக.

6. வாருங்கள், மார்க்கம், கடமை என்பன எவ்வகைச் சொற்கள்?

7. பல்லக்கு ________ கொண்டுவரும்படி சுமப்போர் ________ தனவந்தன் ________ கூறப்பட்டது. (கு, ஆல், ஐ: இவ்வுருபுகளை ஏற்ற இடத்தில் வைத்தெழுதுக.)

8. "மாணவர் கடமை" என்பதைப்பற்றி ஐந்து வசனங்களுக்குக் குறையாமல் எழுதுக.

9. இக்கதையில் வரும் சம்பவங்களைப் பல்லக்குச்சுமப்பவர்களில் ஒருவன் தனது நண்பன் ஒருவனுக்குக் கடிதமூலம் அறிவிப்பதாயின் எழுதும் மாதிரிக் கடிதத்தை எழுதுக.

## 3

செல்வப் பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசன் என்னும் இவர்களாலே கொள்ளப்படும்; கல்விப் பொருளோ ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. செல்வப் பொருள் வெள்ளத்தாலாயினும் அக்கினியாலாயினும் அழியும்; கல்விப் பொருளோ ஒன்ருலும் அழியமாட்டாது. செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைந்துகொண்டே வரும்; கல்விப் பொருளோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக்கொண்டே வரும். செல்வப் பொருள் சம்பாதித்தல், காப்பாற்றல், இழத்தல் என்னும் இவைகளாலே துன்பஞ் செய்து பலரையும் பகையாக்கும். கல்விப் பொருளுடையவர் இம்மையிலே சொற் சுவை பொருட் சுவைகளை அனுபவித்தலானும் புகழும் பொருளும் அடைதலானும் பின்னே தருமத்தையும் முத்தியையும் அடைதலானும் இடையருத இன்பத்தை யனுபவிப்பர். ஆதலினுலே செல்வப் பொருளினும் கல்விப் பொருளே சிறப்புடையது.



**விடை எழுதுக:**

1. செல்வப் பொருளிலும் கல்விப் பொருளே சிறப்புடையது ஏனெனில்,
   1. ..........
   2. ..........
   3. ..........

2. எதிர்ச்சொற்கள் எழுதுக: வலியவர், குறைவு, இழத்தல், பகை, இம்மை.

3. பின்வருவனவற்றை ஏற்ற இடங்களில் அமைக்க.

   சம்பாதித்தல் குறைந்து கல்விப்பொருள்
   அழியும் செல்வப்பொருள் இன்பம்
   துன்பம் பெருகி

   ________ ஒன்ருலும் அழியாது. செல்வப்பொருள் ________ காப்பாற்றல் இவைகளால் ________ தரும் ________ இடையருத ________ தரும். செல்வப்பொருள் அக்கினியினுல் ________. கொடுக்குந்தோறும் ________ கொண்டே வரும்; ________ கொடுக்குந்தோறும் ________ கொண்டே வரும்.

4. இப் பந்தியில் வந்துள்ள ஏ, ஓ, உம் என்னும் இடைச்சொற்களுள் ஒவ்வொன்று எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி அவை இன்ன பொருளைத் தருகின்றன எனவுங் கூறுக.

5. செல்வப்பொருள், கல்விப்பொருள், சொற்சுவை பொருட்சுவை என்பவற்றைப் பிரித்து எழுதுக.

6. இப் பந்தியில் வந்துள்ள குணப்பெயர், தொழிற் பெயர், ஒவ்வொன்று எடுத்துக் காட்டுக.

7. இப் பகுதியிலுள்ள செயப்பாட்டு வினையுள்ள வாக்கியங்கள் எழுதுக. அவற்றைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

8. "கல்விப் பொருளினாற் செல்வப் பொருளையுந் தேடலாம்" :– ஐந்து வரிக்கு மேற்படாமற் சுருக்கமாக எழுதுக.

9. கல்வி, செல்வம், இவற்றின் சிறப்புக்களைப்பற்றி உமக்கும் உமது நண்பரொருவருக்கும் நடை பெற்றதாக ஒரு சம்பாஷணை எழுதுக.

## 4

உலகம் எல்லாருக்கும் பொது. சாதி மத வேறுபாடெல்லாம் பொய். ஏழை, பணக்காரன், வெள்ளை, கறுப்பு, இந்து, கிறீஸ்தவன் என்ற வேறுபாடில்லை. எல்லாருக்கும் சூரியன் ஒளிதரும்; வானம் மழை தரும்; யார் உழுது பயிரிட்டாலும் நிலம் பயன் தரும். எல்லாரும் உழைத்தே உண்ண வேண்டும்; பாடுபட்டே பிழைக்க வேண்டும். மனிதனுக்கு மனிதன் அடிமை அல்லன். வறுமை, மடமை, அடிமைத்தனம் ஒழியவேண்டும். யாரும் சோம்பேறியாயிருக்கக்கூடாது. ஆண் பெண் இரு பாலாரும் தாராளமாகக் கல்வி கற்கவேண்டும். அவரவர் திறமைக்கேற்ற தொழில் பழகவேண்டும். சுகாதார வழியில் எல்லாரும் நன்ருக நீடூழி வாழவேண்டும். பிறருக்குத் தீமையில்லாமல் உலகுக்கு உபகாரமாக வாழவேண்டும். இவைகளே சமதருமத்தின் அடிப்படையான கொள்கைகள்.



**விடை எழுதுக :**

1. ஆண் பெண் இருபாலார்க்கும் அவசியமானவை யாவை?

2. மனிதர் எப்படி வாழ வேண்டும்?

3. வெள்ளை, கறுப்பு எனக் குறிக்கப்பட்டுள்ளன யாவை?

4. அடிமையாயிருத்தல், கல்வி கற்றல், தொழில் கற்றல், உழைத்தல் இவைகளுள் தகுதியான தொடரைக் கீறிட்ட இடங்களிலமைத் தெழுதுக.
வறுமை பெரும்பாலும் மடமையாலுண்டாவது. ஆதலால் வறுமையை நீக்க __________ வேண்டும். மடமையைப் போக்க __________ வேண்டும்.

5. பின் வருவனவற்றின் கருத்தமைந்த பழமொழிகள் தருக: உழுது பயிரிடல், உழைத்துண்ணல், சுகாதார வழியில் வாழ்தல்.

6. உலகுக்கு உபகாரமாக வாழவேண்டும். இதில் "உலகு" என்பது எவ்வகைச் சொல்; இங்கு என்ன பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது?

7. மேற்குறித்த பந்தியிலமைந்துள்ள பால்பகா அஃறிணைப் பெயர்களைக் குறிக்க.

8. சமதருமவாழ்க்கையைப்பற்றி இரு நண்பர்கட்கிடையில் நடந்த சம்பாஷணையைத் தருக.

9. ஏழை பணக்காரனின் அடிமை. பணக்காரன் சாதிக்கடிமை :– இவ்வாக்கியங்களாற் குறிக்கப்பட்டுள்ள கருத்தைப் பற்றிய உமது அபிப்பிராயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

சரித்திரப் பாடங்களையெல்லாம், சிறுவர், சிறுமியர்களுக்கும், பெரியவர்களுக்குங்கூட விபரீதமாகக் கற்றுக்கொடுக்கிறார்கள். கேவலம் அரசர்களுடைய பெயர்களையும், மற்றவர்களுடைய பெயர்களையும், சண்டைகள் நடந்த தேதிகளைப்போன்ற விஷயங்களையுமே அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். சண்டைகளைப் பற்றியாவது, சில அரசர்களைப் பற்றியாவது, சேனாதிபதிகளைப் பற்றியாவது கூறுவது மாத்திரம் சரித்திரமாகாது. சரித்திரம் என்றால், ஒரு தேசத்தின் ஜனங்களைப் பற்றியும், 'அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் சிந்தையில் வளர்ந்த எண்ணங்கள் யாவை?' என்ற இவ்விஷயங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லவேண்டும். அவர்களுடைய சுகதுக்கங்கள், கஷ்ட நிஷ்டூரங்கள், அவற்றை அவர்கள் எப்படி வென்றார்கள் என்பவற்றையும் சரித்திரம் சொல்லவேண்டும். இந் நோக்கத்துடன் நாம் சரித்திரத்தைப் படித்தால் அதினின்றும் நாம் பல விஷயங்களை அறிந்து கொள்ளலாம். ஒரு நாட்டினருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப்போல நமக்கும் கஷ்டம் ஏற்பட்டால் சரித்திரத்தைப் படிக்கலாம். அவர்கள் அக் கஷ்டத்தை எங்ஙனம் தீர்த்துக்கொண்டார்களென்பதை யறிந்து அவ்விதமே நாமும் நம் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ளச் சரித்திரம் நமக்கு வழி காட்டும். முக்கியமாக, நாம் பண்டைக்கால வரலாறுகளைப் படிப்பதால், ஜனங்கள் நாளுக்கு



நாள் முன்னேற்றம் அடைந்து வந்தார்களா, இல்லையா என்பதை அறியலாம்.

**விடை எழுதுக:**

1. சரித்திர பாடத்தைச் சிறுவர் சிறுமியர்களுக்கும் பெரியவர்களுக்கும் எங்ஙனம் கற்றுக்கொடுக்கிறார்கள்?
2. எவற்றைப் பற்றிக் கூறுவது சரித்திரமாகாது?
3. சரித்திரம் எவ்விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டும்?
4. நல்ல முறையிற் கற்ற சரித்திரம் எங்கட்கு வழி காட்டும் முறையை உதாரணமூலம் விளக்குக.
5. பண்டைக்கால வரலாறுகளைப் படிப்பதால் எவற்றை அறிந்துகொள்ளலாம்?
6. பின் வரும் சொற்களைப் பொருள் விளங்கும்படி உமது நடையில் தனித்தனி வாக்கியங்களிலமைக்க: விபரீதமாக, சேனாதிபதி, சிந்தை, நிஷ்டூரங்கள்.
7. மேற்படி பகுதியில் 1-ம் வாக்கியத்தைப் பங்கீகரணம் செய்க.
8. பின்வரும் தொடர்களைப் பிரித்தெழுதுக: பாடங்களையெல்லாம், சரித்திரமாகாது, சுகதுக்கங்கள், பண்டைக்காலம்.
9. சொல்லிலக்கணம் கூறுக: வளர்ந்த, நாம், நாள், அறிந்துகொள்கிறார்கள்.
10. நீவிர் அறிந்த பெரியார் ஒருவருடைய சரிதையை எழுதி அவருடைய சரித்திரத்தை யறிவதாலுண்டாகும் நன்மைகளையும் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6
## பொருளின் தன்மைகள்

"சர்க்கரை கரையும்; உப்பும் அப்படித்தான். கண்ணுடி நொறுங்கும்; கற்கண்டும் அப்படித் தான். மண்சட்டி உடையும்; கற்சட்டியும் மேற் படியே. செங்கல் பொடியாகும். சாம்பல் தண் ணீரை உறிஞ்சும்; கடற் பஞ்சும் அப்படியே. பிரம்பு வளையும்; றப்பர் நீளும். தங்கம் தகடா கும்; வெண்கலம் துண்டாகும். வெந்த பருப்பு மெதுவாயிருக்கும்; பச்சைப் பருப்புக் கடுக்கென் னும்" என்று தன் வாய்பாடுகளை யெல்லாம் ஒப்பித்துக்கொண்டே "நான் கண்டு பிடித்தவை சரியா சுந்தரா?" என்று கண்ணன் வந்து நின்றுன்.

**சுந்தரன்** :— அவையெல்லாம் சரிதான். நீ சொல் லும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு குண முள்ளது. அதைப் பொறிகளாலும் கருவிகளா லும் கண்டறிகிறேம். நீ இப்போது சொன்னவை ஒவ்வொன்றுக்குஞ் சிறப்பாயுள்ள தன்மை. இன்று நாம் பொருளின் பொதுத் தன்மையைப் பற்றி ஆராய்வோம். இது கல்; இது கட்டை. இரண்டுக்கும் பொதுவான குணமென்ன? சொல்.

**கண்ணன்** :— இரண்டும் கட்டிப் பொருள்கள். இரண்டும் ஒவ்வோரிடத்தை அடைத்துக் கொண் டிருக்கின்றன. ஒரு போடு போட்டால் இரண்டுந் துண்டு துண்டாக உடையும்,

**சுந்தரன்** :— பேஷ்! இவையெல்லாம் இரண் டிற்கும் பொதுவாயிருப்பதால் பொதுத்தன்மைகள்



எனலாம். இனி, கல்லிற்கு இல்லாத தன்மை கள் சில கட்டைக்குண்டு. அவை யென்னவென்று யோசித்துச் சொல், பார்ப்போம்.

**கண்ணன்** :— கல் கடினம்; கட்டை மெது; கட்டை எரியும்; கல் எரியாது. கட்டையை எளிதாக இரம்பம் போட்டு அறுக்கலாம். கல்லை உளிவைத்து 'லொட்டு, லொட்டு' என்று அடித் துச் செதுக்க வேண்டும்.

**சுந்தரன்** :— நன்ருகச் சொன்னுய்! இவை யெல்லாம் சிறப்புத் தன்மைகள். அதாவது கட் டைக்கு எரிவது விசேஷமான குணம். அந்த மாதிரியே பார்த்துக்கொள். இன்று பொதுவாகப் பொருள்களின் குணம் இன்னதென்று தெரிந்து, சில சிறப்பான பொருள்களைக்கொண்டு சோதனை செய்து பார்க்கப் போகிறேம். ஒவ்வொரு பொரு ளுக்கும் நீளம், அகலம், பருமன், பாரம் இவை யுண்டு. இவற்றை அளக்கலாம்.

**பொருள்களின் தன்மைகள் :**

1. பின் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக. தன்மை, ஆராய்ச்சி. கட்டிப்பொருள், இன்னதென்று.
2. பின் வரும் பொருள்களின் சிறப்பான தன்மைக ளெவை? சூரியன், நெருப்பு, மின்சார விளக்கு, ஊற்றுப்பேனு, எழுத்தாணி, கடிகாரம், திசை யறிகருவி.
3. பின் வருவனவற்றைப் பொதுவான குணங்கள் கொண்டு வகைப்படுத்துக: புஸ்தகம், பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரை, ஏடு, தேநீர், கொத்து, பத்திரிகை, சாராயம், கட்டில்.

4. ஒவ்வொரு பொருளினதும் சிறப்பான குணங்களைக் கற்பதோ, அல்லாவிட்டால் பொதுவான குணங்களைக் கொண்டு கூட்டமாகச் சேர்த்து அறிவதோ இலேசான காரியம்? ஏன்?

5. பொதுவான குணங்கொண்டு ஒவ்வொரு தொடரிலும் கீறிட்ட இடங்களுக்கு ஏற்ற சொல் வைத்து நிரப்புக.

i. பால் கொக்கு வெண்கட்டி ______ ______
மிளகாய் மிளகு சுக்கு ______ ______
பாம்பு தேள் கொடுக்கன் ______ ______

6. நீர்ப் பதார்த்தம், கட்டிப் பதார்த்தம், வாயு பதார்த்தம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணம் கூறுக.

7. இக் கட்டுரையிலிருந்து மூன்று செயப்படுபொருள் குன்றாத வாக்கியங்களும், மூன்று செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்களும் கூறுக.

8. இதிலுள்ள மூன்று வினையெச்சங்கள் தெரிந்து அவற்றை வைத்துத் தனித்தனி வசனம் அமைக்க.

9. சொல்லிலக்கணம் கூறுக: சுந்தரா, ஆராய்வு, உறிஞ்சும், இரண்டு.

10. சுந்தரனுக்கும், கண்ணனுக்கும் நடந்த சம்பாஷணையின் பொழிப்பைத் திரட்டி ஒரு பந்தி வரைக.



# 7

இற்றைக்குச் சற்றேறக் குறைய நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழவள நாட்டின்கண் ஆமிலந்துறை என்னும் ஊரிலே செங்குந்தர் மரபிலே இரட்டையர் எனப் பெயரிய இருவர் தோன்றினர். இவ்விருவரும் ஒருவரையொருவர் எவ்வாற்றானும் ஒத்திருந்தமையானும் ஒருங்கு சேர்ந்து செய்யுள் பாடி வந்தமையானும் இரட்டையர் என வழங்கப்பட்டனர். இவர்தம்முள் ஒருவர் முடவர்; மற்றவர் குருடர். முன்னை வினைப்பயனாலே கால் முடம்பட்டாரேனும் அறிவான் முடம்பட்டிலர் முடவர்; முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றார் குருடர். இவ்விருவருக்கும் முதுசூரியர் என்றும் இளஞ்சூரியர் என்றும் முறையே பெயர் வழங்கலாயின. முடவர், குருடர் தோள்மீது இவர்ந்து அவருக்கு வழி காட்டுவர். குருடர் முடவரைச் சுமந்து செல்வர். இவ்விருவரும் உறவு முறையில் ஒருவருக்கொருவர் அம்மான் சேயாகவும் அத்தை மகனாகவும் அமைந்தனர். இவர் திருவருட் செல்வம் பெற்றவராய்க் கல்விவளம் பழுத்த இனிய செந்தமிழ்ப் பாக்களை முயற்சியும் கஷ்டமுமின்றி எளிதிற் பாடிய காரணத்தாலே தெய்வப் புலவர் எனவும் சிறப்பித்தோதப் பெறுவர்.

**விடை எழுதுக :**

1. ஆமிலந்துறை எங்குளது?

2. இரட்டையர் என்ற பெயர் அமைந்தவாற்றை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இரட்டையர்கள் எக்காலத்திற் சீவித்தனர்?

4. இரட்டைப் புலவர்களுக்கு வழங்கும் மறு பெயர்களை எழுது.

5. "கால் முடம் பட்டாரேனும் அறிவான் முடம் பட்டிலர்." "முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றார்." இவற்றின் பொருளை விளக்குக.

6. இடப் பெயர் மூன்று தெரிந்தெழுதுக.

7. 'சேய்' எனப் பொருள்படும் இளமைப் பெயர்களை எழுதுக.

8. பின் வரும் வாக்கியங்களிற் பிழையுளவேல் நியாயம் காட்டித் திருத்துக :—

   a. முன்னற் சோளவழ நாட்டிலே ஆமிலந்துறை என்னும் ஊரிலே இரட்டையர் இருவர் தோற்றினர்.

   b. முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விழங்கப்பெற்றார்.

   c. முதுசூரியர் இளஞ்சூரியர் என்றும் முறையே பெயர் வளங்கலாயின.

   d. ஒருங்கு சேர்ந்து கவி பாடி வந்தமையால் இரட்டையர் என வழங்கப்பட்டது.

   e. கல்விவளம் பழுத்த பாக்களைப் பாடியமையால் தெய்வப் புலவர் எனச் சிறப்பித்தோதப்படும்.

9. இரட்டையர் வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்வன யாவை?

10. நீவிர் அறிந்த தெய்வப் புலவர் ஒருவரைப்பற்றி மாணவர் சங்க விரிவுரை தருக.



# 8

பொய்யாவது உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் சொல்லல். பொய் மிக இழிவுள்ளது. ஒரு பொய் சொன்னவன் அதைத் தாபிக்கப் புகின், ஒன்பது பொய் சொல்லல் வேண்டும். நான் சொன்ன பொய்யைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும் என்பானுயின், ஒன்றுடனுழியும். பொய் சொல்லத் துணிகின்றவன் களவு முதலிய தீமைகளைச் செய்தற்கு அஞ்சான். பொய் சொல்லலாகிய பாவமொன்றை ஒழிப்பின் அதுவே வழியாக மற்றைப் பாவங்களெல்லாம் தாமே ஒழிந்துவிடும். பொய்யன் மெய்யைச் சொல்லுகிற பொழுதும் பிறர் அதனை நம்பார். ஆதலால் விளையாட்டுக்காயினும் பொய் சொல்லலாகாது.

மெய் சொல்லுகிறவனுக்கு அதனுல் ஒரு கேடு வந்ததாயினும் அவனுள்ளத்திலே மகிழ்ச்சியுண்டாகும். அவன் பகைவர்களும் அவனை நன்கு மதிப்பார்கள். பிறராலே நன்கு மதிக்கப்படவும் தன் காரியம் சித்தி பெறவும் விரும்புகின்றவன் எப்பொழுதும் தன் மனத்தோடு பொருந்த மெய்யே பேசல் வேண்டும். ஒருவன் தன் மனம் அறிந்ததொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய் சொல்லாதிருக்கக் கடவன். பொய் சொன்னுயின் அவன் மனமே அப் பாவத்துக்குச் சாக்ஷியாய் நின்று அவனைச் சுடும்.

**விடை எழுதுக :**

1. பொய் சொல்லலாகிய பாவமொன்றை ஒழிப்பதனுல் வேறு என்ன நன்மைகளுண்டாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மெய் சொல்லுகிறவனுக்கு அதனால் கேடு வந்தாலும் அவனுள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாவதேன்?
3. பிறராலே நன்கு மதிக்கப்படவும் தன் காரியம் சித்தி பெறவும் விரும்புகின்றவன் யாது செய்ய வேண்டும்?
4. பொய் சொன்னவன் மனம் அவனை யாது செய்யும்?
5. மேற்படி பகுதியில் எத்தனை வாக்கியங்களுள?
6. எதிர்ச் சொல் எழுதுக: துணிகின்றவன், தீமை அஞ்சான், பிறர், சித்தி.
7. சொல்லிலக்கணம் கூறுக: பொய், நம்பார், அவன், பொறுத்து.
8. "விளையாட்டுக்காயினும் பொய் சொல்லலாகாது": — இவ்வுண்மையை விளக்க நீவிர் அறிந்த கதையொன்றை அழகிய நடையி லெழுதுக.

9 மெய்யதைச் சொல்வா ராகில்
விளங்கிடும் மேலாம் நன்மை;
வையகம் அவரைக் கொள்ளும்;
மனிதரில் தேவர் ஆவர்;
பொய்யதைச் சொல்வா ராகில்
போசனம் அற்ப மாகும்;
"நொய்யவர் இவர்கள்" என்று
நோக்கிடார் அறிவு ளோரே.

--விவேகசிந்தாமணி

a. இச் செய்யுளின் பொழிப்பை எழுதுக.

b. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறுக.



# 9

இளந்தென்றல் இனியது; புதுப்பூவின் நறுமணம் இனியது; நிர்மலமான நீரோடை இனியது; நீலவானிற் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் இனியன. இம்மாதிரி எத்தனையோ இனிய இன்பங்களை இறைவன் நமக்கு அளித்திருக்கிறான். 'இந்த இன்பங்களை அனுபவிப்பதற்கு எல்லாருக்கும் முடியுமா?' என்றால், அதுதான் இல்லை. "தண்ணீரிலும் பூவிலும் என்ன மண்ணாங்கட்டி இருக்கிறது?" என்று இவ்வியற்கை யின்பங்களை வெறுத்துப் பேசுவோர்கள் இந்த உலகில் என்றும் இருக்கிறார்கள்.

கடவுள் மனித குலத்துக்கே கொடுத்திருக்கும் இன்பங்களுள் சங்கீத இன்பமே தலைசிறந்ததாகும். சங்கீதம் உயர்ந்ததாயும், உணர்ச்சியோடு கலந்ததாயும் அமைந்து விட்டால், அதனால் ஏற்படும் ஆனந்தம் சொல்லுந் தரத்ததன்று. சங்கீதத்தை அனுபவிப்பதற்குச் சங்கீத அறிவு அவசியமில்லை. ஆனால், சங்கீதத்தைக் கேட்டு அனுபவிப்பது எல்லாராலும் முடியும்.

**விடை எழுதுக:**

1. இறைவன் நமக்கு அளித்திருக்கும் இன்பங்கள் மூன்று எழுதுக.
2. மனித குலத்துக்குக் கொடுத்திருக்கும் இன்பங்களுள் எது சிறந்தது?
3. எவ்வித இன்பங்களை எல்லாரும் அனுபவித்தல் முடியாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மேற் குறித்த பகுதியில் முதற் பந்தியிலுள்ள சிறிய வாக்கியங்களை ஒருங்கு சேர்த்து, ஒரே தொடர் வாக்கியமாக அமைத்து எழுதுக.

5. ; என்று இடப்படும் தொடரிசைக் குறிகட்குப் பதில் வேறு எக்குறியீட்டை உபயோகிக்கலாம்?

6. ஏற்ற அடைமொழிகள் சேர்த்து எழுதுக:—
உ – ம்: புதுப்பூ.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | பூ | ____நீலம் | iv. | களி | ____நிர்மலம் |
| ii. | நீரோடை | ____புதுமை | v. | மணம் | ____இளமை |
| iii. | வான் | ____நறுமை | vi. | கொடி | ____இனிமை |

7. புதுமை, இனிமை, இளமை என்னுஞ் சொற்கள் எவ்வகையைச் சார்ந்தன?

8. தொடர் மொழியிலக்கணங் கூறுக: இளந் தென்றல், நீரோடை, மேலான இன்பம், மனிதகுலம்.

9. இனிய இன்பங்களை வெறுத்துப் பேசும் உமது நண்பர் ஒருவருக்குச் சங்கீத இன்பத்தின் சிறப்பை விளக்கி ஒரு கடிதம் எழுதுக.

10. இயற்கை இன்பங்களைப்பற்றிப் பதினைந்து வரிகளுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

---

## 10

## மழைத்துளி சொன்ன கதை

பரந்த இந்துமகா சமுத்திரத்தின் ஒரு சிறு துளியாக இருந்தவன் நான் என்று சொல்வதற்கு எனக்கு மிகவும் ஆசையுண்டு. அந்த ஆழ்ந்த நீலமான கடலில் எனக்குப் பல நண்பர்களிருந்தனர். எங்களையெல்லாம் நசுக்கிக்கொண்டு எங்களுக்கு மேலேயும் பல நண்பர்களிருந்ததினால் பாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகமேறி நாங்கள் சுருங்கி ஒரு சிறு பிராணியின் முட்டையினளவாயிருந்தோம். நாங்கள் மங்கலான நீல ஒளியைத் தவிர வேறு வெளிச்சத்தைக் கண்டதேயில்லை.

பலகாலம் (— நூற்றாண்டுகளா யிருக்கலாம்) சென்றபின், நான் என்மேலிருந்த பாரம் குறைவதாக அறிந்தேன். அதனுடன் மேலே மேலே போகிறேனெனத் தெரிந்ததும், நான் எங்கும் உலாவலாமென எண்ணி ஆனந்தித்தேன். ஆஹா! சிலகாலஞ் செல்ல நாங்கள் மேலே வந்தோம். அலைகள் எங்களை மேலும் கீழும் வீசின ஆனந்தமாகப் புரண்டுருண்டோம். படகுகள், பாய்மரக் கப்பல்கள், நீராவிக் கப்பல்கள் எல்லாம் எங்களுக்குமேல் இரைந்து கொண்டு விரைந்து சென்றன. அவைகளின் எண்ணிக்கையோ அநந்தம்.

எல்லாப் பாரமும் பொறுப்பும் நீங்கி கங்கு கரையின்றிக் களிப்புற்றிருந்தோம். மேலே என்ன நடக்கும் என்பதைக் கொஞ்சமும் நாங்கள் அறியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகச் சூரியன் மேலே கிளம்பியதைக் கண்டோம். சூடும் அதிகரித்துக் கொண்டே போனது. நேரம் ஆக ஆகச் சூடு தாங்காமல் புரண்டு விழுந்தோம். மத்தியானம் ஆயிற்று. துடித்தோம். பித்துப் பிடித்தவர்போற் சுழன்றோம். ஆனந்தமெல்லாம் பறந்துவிட்டது. தாங்கமுடியாத சூட்டினால் தவித்தோம். 'ஆ! முடிவுகாலம் ஏற்பட்டதோ' என்று இரைந்தோம். இஃதென்ன ஆச்சரியம்! மந்திரமுமில்லை; தந்திரமுமில்லை. மாயமான மாற்றம். அசரீரிகளென்று சொல்லும்படி நுண்ணிய பாரமற்ற உடல் பெற்றோம்.

இறக்கைகளுமில்லை; வாலுமில்லை; ஆனால் பறக்கத் தொடங்கிவிட்டோம். ஒருவரும் எங்களைக் காண முடியாத உருவம். விண்ணுலகத்துக்கே மேலெழுந்தோம். சிறிது நேரத்தில் பழைய நண்பர்களைக் கண்டோம். அவர்கள் 'நாம் இனி உலகம் முழுவதும் சுற்றி அதியற்புதக் காட்சிகளைக் காணலாம்' என்றனர். 'சபாஷ்! நம்மைப்போல் பாக்கியம் படைத்தவரில்லை', என்று ஆர்ப்பரித்தோம்.

ஓரிரவு. எங்கும் இருள் பரந்தது. ஒருவரையொருவர் காண முடியவில்லை. இருட்டி விடிபட்டோம். இடிச் சத்தம் மலைகளில் உதைத்து அதிர்ந்தது. 'டும்ம் — டும்ம் — டுடு — டுடு — டோம்ம்' என்ற முழக்கம். பகீரென ஒரு வெளிச்சம். 'ஜில்' என்ற குளிர். ஒருவிதப் பைசாசமென்னும்படி எங்களை ஏதோ ஒன்று ஊடுருவிச் சென்றது. திகைத்து மயங்கினோம். ஆ! பழையபடி அச் சமுத்திரத்திலிருந்த துளிகள் போலானோம். எங்களை ஊடுருவிச் சென்றது மின்சாரமெனப் பின்னரறிந்தோம். ஆ! பாரம் மிகுந்தோம். பறக்கவே முடியவில்லை. அலறி இரைந்துகொண்டு பின்னுந் தாய் மடியில் விழுந்தோம். நாங்கள் விழுவதைக் கண்ட சிறுவர் 'மழையே! மழையே! மெத்தப் பெய்' என்று பாடினார்கள். பேரிரைச்சல் போட்டுக் கொண்டு 'சோ' வென்று விழுந்தோம்.

**விடை எழுதுக:**

1. பின்வரும் பதங்கட்குப் பொருள் கூறுக:
   மகா, அநந்தம், கங்குகரை, பித்துப்பிடித்தவர் ஆர்ப்பரித்தல், விண்ணுலகு.



2. எதிர் மொழி கூறுக:
   பாரம், மங்கல், களிப்பு, நுண்ணிய, உருவம்.
3. (அ) "ஆஹா" இப்பதம் எவ்வகையான மெய்ப்பாட்டைக் குறிக்கின்றது?
   (ஆ) இது போன்று இவ்வியாசத்தில் வந்துள்ள வேறு பதங்களெவை?
4. மழைத் துளிக்குச் சமுத்திரத்திலிருந்த பல நண்பர்களும் யாவர்?
5. மழைத் துளிக்கு மங்கலான நீல ஒளி எங்கிருந்து வந்தது?
6. மழைத் துளியின் பாரங் குறைந்தது எக்காரணத்தால்?
7. மழைத் துளி, தான் மத்தியானத்தில் பல கஷ்டம் அடைந்ததாகக் கூறுகின்றது:—
   உண்மையில் நடந்த நிகழ்ச்சி என்ன?
8. அசரீரியைப்பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக?
9. விண்ணுலகிற் காணப்பட்ட பழைய நண்பர் என்ன தோற்றத்துடன் காட்சியளித்தனர்?
10. "தாய் மடியில் விழுந்தோம்" எனும் வாக்கியத்தில் "தாய்மடி" என்றது எதனை?
11. 3-ம் பந்தியில் வந்துள்ள ஏதும் மூன்றுவகை வினைமுற்றுக்களைக் கூறி, அவற்றிற்கு இலக்கணமுங் கூறுக.
12. கடைசிப் பந்தியில் நேர்கூற்று வாக்கியங்கள் இரண்டு எழுதி, அவற்றை அயற்கூற்று வாக்கியங்களாக மாற்றி எழுதுக.
13. இவ் விஷயத்தை வாசித்ததினால் நீர் அறிந்து கொண்டதைச் சுருக்கி எழுதுக.
14. "இராக் காலத்தில் மின்னல் இடிமுழக்கத்தோடு பெய்யும் ஒரு மழை":—இதைப் பற்றி வர்ணித்து ஒரு பந்தி எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

மகததேசத்திலிருந்து புறப்பட்ட ஒரு கப்பலில் சுதாகரனும் விமலையும் பிரயாணஞ் செய்தனர். இவரிருவரும் அன்னை வயிற்றில் ஒருங்கு தங்கியிருந்து பிறந்த இரட்டைப் பிள்ளைகள். மொழி, உருவம், உயரம் முதலியவற்ருல் ஒருவரையொருவர் முற்றும் நிகர்த்தவர். கப்பல் ஈழநாட்டுக் கரைக்குச் சமீபமாகச் சேதப்பட்டுப் போயிற்று. ஒரு மாலுமியினது உதவியாற் கரைசேர்ந்த விமலை தன்னைக் காப்பாற்றிய மாலுமியை நோக்கி, "நண்பா! இஃதென்ன நாடு?" என்றனள்.

**மாலுமி:** அம்மணி! இஃது ஈழநாடு.

**விமலை.** என் அண்ணன் பொன்னுட்டுக்குப் போய்விட்டான்; எனக்கு ஈழநாட்டிலென்ன வேலை? ஒருவேளை நீரிலமிழ்ந்தாது தப்பியிருக்கவுங்கூடும்.

**மாலுமி.** அம்மணி! தாங்கள் தப்பியதே பேரதிஷ்டம்.

**விமலை:** இந்நாட்டினை அரசுபுரிகின்ற மன்னன் பெயரென்ன?

**மாலுமி:** மாசேனன்.

**விமலை:** அவர் பெயரை என் தந்தை குறிப்பிடக் கேள்வியுற்றிருக்கிறேன்; அவர் அக்காலத்தில் விவாகமாகாதவராக இருந்தார்.



**மாலுமி:** ஆம், அவருக்கு இன்னும் விவாகமாகவில்லை. ஒரு மாதத்துக்கு முன்பு இவ்விடமிருந்து நான் போனபொழுது இந்த வூரிலுள்ள பெரியார் ஒருவரின் புதல்வியாகிய கமலை யென்னுஞ் சீமாட்டிமீது மன்னன் காதலுற்றிருப்பதாக நகரத்து ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

**விமலை:** இந்தப் பெருமாட்டி எப்படிப்பட்டவள்?

**மாலுமி:** மிக நல்லொழுக்கம் வாய்ந்தவள். இவளது தந்தை இறந்து இன்னும் ஓர் ஆண்டு நிறையவில்லை; இதற்கிடையிற் றமையனு மிறந்து போயினன். இந்நிகழ்ச்சிகளினல் மனமறுகித் துன்புற்று ஆடவர் முகத்தையே பார்ப்பதில்லை யென்னும் விரதத்தோ டிருக்கிருள்.

**விமலை:** இந்தச் சீமாட்டியிடம் நான் வேலைக் கமருதல் கூடாதா?

**மாலுமி:** துன்பத்தினல் வருந்துகிற அந்தச் சீமாட்டி யாரையும் அடுப்பதில்லை யென்று தெரிகிறது.

**விமலை:** நல்லது. மாலுமி! நீ யெனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்; யான் ஆண் பிள்ளை வேடத்தோடு போய் மாசேன மன்னனுடைய சேவகத்திலமரக் கருதுகிறேன்; என் சகோதரனுடைய உடைகளைப் போன்ற உடைகள் சில நீ தயாரித்துக்கொண்டு வருதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலை ஆண்பிள்ளை யுடைதரித்துச் சேவகன் எனப் பெயரிட்டுக் கொண்டு மன்னனுடைய சமஸ்தானத்துக்குப் போய் அவனிடத்தில் வேலைக்கு அமர்ந்தனள். —மதங்கசூளாமணி

**விடை எழுதுக:**

1. சுதாகரனும் விமலையும் எத்தகைய உறவினர்?
2. இவ்விருவருக்கும் இடையிலுள்ள பொதுத்தோற் றத்தைப் பற்றி யாது அறிவாய்?
3. விமலை யாரால் காப்பாற்றப்பட்டாள்?
4. காப்பாற்றப்பட்ட விமலை எந்நாட்டை யடைந் தாள்?
5. "என் அண்ணன் பொன்னுட்டுக்குப் போய்விட் டான்" இதில் பொன்னுடென்றது எந்நாட்டினை?
6. "மாசேனன்" எந்நாட்டரசன்?
7. கமலையின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஈண்டு யாது கூறப்பட்டிருக்கிறது?
8. மாசேன மன்னனுடைய சேவகத்திலமரக் கருதிய விமலை ஆண்பிள்ளை வேடம் தரிக்கவிரும்பியதேன்?
9. பின் வருவனவற்றின் எதிர்ச்சொல் லெழுதுக: நிகர்த்தவர், சேதப்பட்டு, பேரதிர்ஷ்டம், அடுப்ப தில்லை.
10. மேற்படி பகுதியில் கடைசி வாக்கியத்தைப் பங்கீ கரணஞ் செய்க?
11. அவ்வாக்கியத்திலுள்ள பதங்களுக்குச் சொல் லிலக்கணம் கூறுக:—

    நாடு, என்றனள், மாசேனன், ஆடவர், மறுகி.
12. மேற்படி பகுதியை வாசித்து,அதில் வந்த நிகழ்ச்சி களை மாலுமி தன் நண்பனெருவனுக்குக் கூறிய முறையாக மாற்றியெழுதுக.



# 12

## ஔவையார்

ஔவையாரைப் பற்றிய பல செய்திகள் நமக் குக் கிடைக்கின்றன. அவருடைய பெருமை அளவற்றது. அவருடைய பெயரை வைத்துக் கொண்டு பெருமை பெற்றோர் பிற்காலத்திலும் இருந்தனர். சங்க காலத்து ஔவையார், கபிலர், பரணர் என்பவர்களைப் போன்ற பெருமை வாய்ந் தவர். அவருடைய மனோதைரியம் ஆச்சரியப் படத்தக்கது. அவரை ஆதரித்த அதியமான் என்னும் அரசன் ஒருமுறை அவரைத் தொண் டைமானிடம் தூதாக அனுப்பினான். அவர் தொண்டைமானிடம் போன காலத்தில் அவன் தன்னுடைய பெருமையைப் புலப்படுத்த வேண்டு மென்று தன் அரண்மனையைக் காட்டினான். தன் னுடைய ஆயுதசாலையைக் காட்டி 'எப்படி இருக் கிறது?' என்று கேட்டான். அவன் போர்செய் தறியான் என்பதையும், படைக்கலப்பயிற்சிக்கும் அவனுக்கும் நெடுந்தூரமென்பதையும் ஔவையார் தெரிந்துகொண்டார். அவர் சொல்ல ஆரம்பித் தார். "என்ன அழகு! இவை எவ்வளவு ஒழுங் காகத் துடைத்து எண்ணெய் பூசி மாலையணிந்து நன்ருக வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் அதிய மான் வேல் எவ்வளவோ குறையுடையதாகவிருக் கிறது. அவன் ஆயுதங்கள் பகைவரைக் குத்தி நுனி ஒடிந்து இரத்தக் கறையுடன் கொல்லன் பட்டடையிற் கிடக்கின்றன" என்ருர். அவ்வரசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு துணிவாகப் பரிகாசஞ் செய்வதற்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும்.

ஒரு சமயம் 'நாஞ்சில் வள்ளுவன்' என்ற ஓர் உபகாரியை ஒளவையார் பார்க்கப் போயிருந்தார். அவன் தன்னிடம் வரும் புலவர்களுக்கு யானையைப் பரிசாகக் கொடுக்கும் இயல்புடையவன். அதைக் கண்ட ஒளவையார் நகைச்சுவையுண்டாக ஒரு செய்யுள் கூறினார். அது யானைப் பரிசுபெற்ற பாணன் ஒருவன் கூறியதாக அமைந்தது. "இந்த நாஞ்சில் வள்ளுவன் ஒன்றும் அறியாதவன். 'எங்கள் வீட்டில் அரிசியில்லை. கொல்லையிற் கொய்த கீரையைச் சுண்டி அதற்கு மேல் தூவும் மாவுக்காகச் சிறிது அரிசி வேண்டும்' என்று கேட்டேன். அவன் ஒரு மலையைப் போன்ற யானையைத் தந்தான். இப்படிப் பைத்திய காரத்தனமான கொடைகூட உலகத்திலுண்டா? அவன் தன் பெருமைக்குத் தக்கபடி தந்தான்" என்பது அதன் பொருள்.

**விடை எழுதுக :**

1. பின் வரும் பதங்களை வைத்துத் தனித்தனி வசனம் அமைக்க:— மனோதைரியம், ஆச்சரியம், தூது, புலப்படுதல், அளவற்றது
2. பொருள் கூறுக:— உபகாரி, பரிசு, நகைச்சுவை, படைக்கலப் பயிற்சி
3. எதிர்மொழி கூறுக:— பெருமை, தைரியம், அழகு, ஒழுங்கு, உபகாரம்.
4. சங்கப் புலவர் சிலரின் பெயர் கூறுக
5. ஒளவையாரை யாரிடம், யார் தூதாக அனுப்பினார்?



6. தொண்டைமான் படைக்கலப் பயிற்சி அற்றவனென்பது ஒளவையாருக்கு எப்படித் தெரியும்?
7. சிலவேளையில், புகழ்ந்துகூறும் உரை இகழ்ச்சியையும், இகழ்ந்து கூறும் உரை புகழ்ச்சியையும் கொடுத்தலை ஒளவையாரின் பேச்சிலிருந்து எடுத்துக் காட்டுக.
8. இவ் வியாசத்திலிருந்து மூன்று வேற்றுமையுருபுகளை, அவை சேர்ந்து வந்துள்ள பெயர்களோடு கூறி, அவை எவ்வெப் பொருளில் வந்தன என்றும் கூறுக?
9. இதில் வந்துள்ள மூன்று வினையெச்சங்களை எழுதி, அவை கொண்டு முடிந்த வினைகளையும் கூறுக.
10. 'நாஞ்சில் வள்ளுவன் கொடையை ஒளவையார் நகைச்சுவையுண்டாகச் செய்யுள் செய்தனர்': இச் செய்யுட் பொழிப்பைச் சுவை தோன்றும்படி உமது வசன நடையில் எழுதுக.

## 13

தண்ணீரைத் தொட்டாற் குளிர்ந்திருக்கிறது நெருப்பைத் தொட்டாற் சூடாயிருக்கின்றது. நெருப்பு உண்டுபண்ண என்ன செய்கின்றோம்? தீக்குச்சிகளைத் தேய்க்கிறோம். குச்சியில் நெருப்புப் பிடித் தெரிகிறது. உடனே விளக்கிலுள்ள திரியில் பற்றவைக்கிறோம். பிறகு ஓலை, சுள்ளி, விறகு, கரி முதலியவற்றைப் பற்றவைத்து நெருப்பு உண்டுபண்ணுகிறோம். நெருப்பு என்பது தனியாக ஓரிடத்திலுமில்லை. அது சில பொருள்களைப் பற்றி யெரிகிறது. சில வஸ்துக்கள் தீப்பிடித்து எரிவதில்லை. தீப்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியாத பொருள்கள் கண்ணாடி, கல், முட்கம்பி, பீங்கான், செங்கல் முதலியன.

நெருப்பாலென்ன உபயோகம்? நமது ஆகாரம், பொருள் இவற்றை வேகவைக்க நெருப்பு உதவுகின்றது. நெருப்பால் தங்கத்தை உருக்கி நகைகள் செய்கிறார்கள். இரும்பைக் காய்ச்சியடித்துப் பல சாமான்கள் செய்கிறார்கள். நெருப்பு நமக்குப் பலவிதங்களில் உபயோகமாகின்றது. ஆனால் வெகுகாலத்துக்கு முன்பு வசித்த சனங்களுக்கு நெருப்பு என்பது தெரியாது. அவர்கள் தங்கள் ஆகாரப் பொருள்களைப் பச்சையாகவே தின்றுவந்தார்கள். ஒரு சமயம் காட்டிலுள்ள மூங்கில்கள் ஒன்றோடொன்று உரோஞ்சி தீப்பற்றி யெரிவதைக் கண்டார்கள். பின்புதான் நெருப்பையும் அதன் உபயோகத்தையும் கண்டு கொண்டார்கள்.

**விடை எழுதுக :**

1. மேலேயுள்ள பகுதிக்கு என்ன தலையங்கமிடலாம்?
2. பூர்வகாலத்துச் சனங்கள் நெருப்பை எப்படி உண்டாக்கினார்கள் ?
3. நெருப்புப் பற்றியெரியக்கூடிய ஐந்து பொருள்களும் நெருப்புப்பிடிக்காத ஐந்து பொருள்களும் கூறுக.
4. நெருப்பின் உபயோகங்களெவை?
5. பின்வருஞ் சொற்களைத் திருத்தியெழுதுக.
   குளிந்து, விழக்கு, உபையோகம், உரிக்கி, காச்சி.
6. குளிர்ந்து + இருக்கும், நெருப்பு + பெட்டி. ஆகாரம் + பொருள்கள், காட்டில் + உள்ள, ஒன்றோடு + ஒன்று :— புணர்த்தியெழுதுக.



7. தீக்குச்சிகளைத் தேய்க்கிறோம், குச்சியில் நெருப்பு, நெருப்பு உதவுகிறது, சனங்களுக்குத் தெரியாது:— இவையொவ்வொன்றும் என்ன வேற்றுமைகள் ?
8. சொல்லிலக்கணங் கூறுக:
   நெருப்பு, எரிகிறது, வசித்த காலம்.
9. வீடு தீப்பற்றிய நிகழ்ச்சியைக் குறித்து, பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏற்றபடி எழுதுக.

## 14

ஒரு கிராமத்தை யடுத்த பாதையில் பெரிய கற்பாறை ஒன்று கிடந்தது. பகற்காலங்களில் ஜனங்கள் பாதையிற் போகும்போது, அந்தக் கற்பாறையைச் சுற்றிக் கொண்டு விலகிப் போவார்கள். ஒருவரேனும் அதை அப்புறப்படுத்த வேண்டும் என்று நினைக்கவில்லை. அந்தப் பாறையோ வழியின் குறுக்கே கிடந்ததால், அவ்வழியில் வருவோர்க்கெல்லாம் மிக்க சிரமத்தைக் கொடுத்தது. இராக் காலங்களில் அங்கே அக் கல் இருப்பதை அறியாத சிலர் இடறி விழுந்து கை கால்களை முறித்துக் கொண்டதுமுண்டு. வண்டிகளும் மாடுகளும் அவ்வழியிற் பட்ட பாட்டை உரைக்க முடியாது.

இங்ஙனம் இருக்க, ஒரு நாள் அவ்வழியே சென்ற ஏழைக் குடியானவன் ஒருவன் அக் கல்லைக் கண்டான். "ஐயோ ! இஃது இங்கே கிடந்து இத்தனை பேரைக் கஷ்டப்படுத்துகின்றதே ! இதை அப்புறப்படுத்தி விடுவோம்' என்று நினைத்து, இரண்டு மூன்று நாழிகையாக வெகு பாடுபட்டு ஒருவர் உதவியுமின்றித் தனிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவே அதைப் புரட்டிச் சாலையோரத்திற் சேர்த்தான்; கல் இருந்த இடத்திலே குனிந்து பார்த்தான். அங்கு ஆயிரம் ரூபாய் அடங்கிய பண மூட்டை யொன்றும், அதன்மேல் ஒரு சீட்டும் இருக்கக் கண்டான். அந்தச் சீட்டில் "இந்தக் கல்லைப் புரட்டி ஓரத்திற் சேர்ப்பவருக்கு இது வெகுமதியாகும்" என்று எழுதப் பட்டிருந்தது. அதைப் பார்க்க அங்கே கூடிய ஜனங்கள் அக் குடியானவனுடைய நல்லதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து பாராட்டிச் சென்றுர்கள்.

**விடை எழுதுக :**

1 கற்பாறையை அப்புறப் படுத்தாத ஜனங்களைப் பற்றி யாது அறிவாய்?

2. இராக் காலங்களில் அக் கற்பாறை வழிப்போக்கருக்கு எத்தகைய கஷ்டங்களை விளைத்தது?

3. கல்லைக் கண்ட குடியானவன் தன் மனத்தில் எவற்றை நினைத்தான்?

4. கல்லைச் சாலையோரத்திற் சேர்த்த அவன் மனநிலையைப் பற்றி யாதறிவாய்?

5. குடியானவன் பெற்ற வெகுமதி என்ன?

6. பின் வரும் சொற்களை உபயோகித்து உமது நடையில் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக:

சிரமம், இடறி, இத்தனை, சீட்டு, வெகுமதி

7 முதலாம் பந்தியை வாசித்துப் பொருள் சிதையாமல் ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக.

8. பின்வரும் வினைச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன காலத்தில் வந்தன என்று கூறி, அவைகளை ஏனைய இரு காலங்களிலும் மாற்றி எழுதுக.



கிடந்தது, விழுந்து, போவார்கள், விடுவோம், அடங்கிய.

9. மேற்படி கதையை ஆதாரமாகக் கொண்டு அந்தக் கற்பாறை சொன்ன சுவசரிதை ஒன்று எழுதுக.

10 பின் வருவனவற்றுள் ஒன்றைப் பற்றிய வியாசக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்"

(ஆ) பரோபகாரம்

(இ) "முயற்சி திருவினை ஆக்கும்."

## 15

மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலுங் கீழும் பார்ப்பேன்; சுற்று முற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும். அமைதி பொருந்திய மனத்துடன் மலையை நோக்குவேன். என் அருமை மலையே! உன்னை அடைந்ததும் மனம் அமைதி உறுவானேன்? உன் வரலாறென்னை? நீ எப்படி அமைந்தாய்? 'உன்னிடத்தில் எப்படி அருவிகள் அணைந்தன? வண்டுகள் சூழ்ந்தன? மயில்கள் வந்தன? குயில்கள் கூடின?' மக்கள் உன்னை நாடி வருவானேன்? மலை எளிதில் வாய் திறக்குமோ? மலையை முன்ன முன்ன வாய்மை தவழும்.

பறவைகள் பாடுகின்றன; ஆடுகின்றன; பாம்புகள் நடமாடுகின்றன. விலங்குகள் உலாவுகின்றன. வண்டுகாள்! உங்களில் பாட்டு எப்படி அமைந்தது? மயில்காள்! உங்களிடம் நடம் எங்ஙனம் புகுந்தது? குயில்காள்! நீங்கள் இனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலை எங்கிருந்து பெற்றீர்கள்? பாம்பே! நல்ல பாம்பே! உன் படம் அழகாய் இருக்கிறதே! உன்னிடம் நஞ்சு இருப்பது உண்மையா? மானே! உன் விழியில் ஏன் மருட்சி நிகழ்கிறது?

பருவ நல்லாள் எதிர் தோன்றுகிறாள். "நீ கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய அறுவகையாக ஏன் பிரிந்து நிற்கிறாய்?"

**விடை எழுதுக:**

1. மலையைக் கண்டவுடன் எழும் கருத்துக்கள் யாவை?
2. அறுவகைப் பருவங்களும் எவை?
3. மலையை முன்ன முன்ன வாய்மை தவழக் காரணமென்ன?
4. மலை நாட்டுச் சீவியம் மக்கள் மனத்தை அமைதியுறச் செய்வதேன்?
5. பின்வருஞ் சொற்களின் பொருளை விளக்குக: இவர்வேன், மருட்சி, நடம், நல்லாள்.
6. பின்வருவனவற்றை ஒரே வாக்கியமாக்குக:—
   அ. மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலுங் கீழும் பார்ப்பேன்; சுற்று முற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும்
   ஆ. பறவைகள் பாடுகின்றன; ஆடுகின்றன; பாம்புகள் நடமாடுகின்றன; விலங்குகள் உலாவுகின்றன; இவற்றை நாம் பார்க்கிறோம்.
7. மேற்படி பந்தியில் முதலாம் வாக்கியத்தைப் பங்கீகரணம் செய்க.
8. "குறிஞ்சி நிலச் சிறப்பு" என்ற தலையங்கத்தில் ஓர் அழகிய வருணனைக் கட்டுரை வரைக. [குறிஞ்சி நிலம் – மலையும் மலை சார்ந்த நிலமும்.]



## 16

உலகிலுள்ள பல நாடுகளிலும் மொழிகள் வளம் பெற்றுக் காவியச் செல்வம் பெற்று விளங்குவது தம்மை மறந்து உலகிற்கு உழைத்த புலவர்கள் முயற்சியாலாகும். அப் புலவர் முயற்சியெல்லாம் அவரை வாட்டிய வறுமையால் எழுந்தனவே யென்பது சரித்திரவுண்மை. செல்வப் பெருக்கில் மயங்கி வாழ்ந்த எவரும் உலகிற்குப் பொதுவில் உதவும் அரிய நூல்களை இயற்றி உதவவில்லை. உலகப் பொது அற நூலாகிய திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் வறுமையே பெருமையாகக் கொண்டவர். புலவர்கள் அரசர் ஆதரவுகளைச் சில காலம் பெற்றிருப்பினும் பெரும்பாலும் வறுமையில் வாழ்ந்தவர்களே. இறவாப் புகழுடம்பு படைத்த நம் முன்னோராகிய புலவர் பெருமக்களுக்குப் பெருமையை விளைத்த வறுமை வாழ்விற் சிறப்பு இல்லை என்று எவரே கூறத் துணிவர்?

புடம் இட்ட பொன்னே ஒளிபெறும். வறுமை வாழ்க்கை மனிதர் குணத்தைப் புடமிட்டு விளக்கும். ஆகையால், வறுமையை இகழாதிருக்க முயலுதல் நன்றாம்.

**விடை எழுதுக:**

1. மேற்படி பகுதியை வாசித்து ஏற்ற ஒரு தலையங்கமிடுக.
2. மொழிகள் வளம் பெற்றுக் காவியச் செல்வம் பெற்று விளங்குவது எதனால்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. புலவர் முயற்சியெல்லாம் எதனால் எழுந்தன?
4. திருவள்ளுவர் எதனைப் பெருமையாகக் கொண்டவர்?
5. நம் முன்னோரில் இறவாப் புகழுடம்பு படைத்தவர் யாவர்?
6. மனிதர் குணத்தைப் புடமிட்டு விளக்குவது எது?
7. மேற்படி பகுதியில் 1-ம் வாக்கியத்தை இரு வாக்கியங்களாக மாற்றி யெழுதுக.
8. பின் வரும் சொற்களுடன் அவற்றின் எதிர்ச் சொற்களும் வரத் தனித்தனி வசனங்களாக்குக:
   செல்வம், உண்மை, பொது, பெருமை.
9. சொல்லிலக்கணம் கூறுக:—
   உழைத்த, புலவர், வறுமை.
10. "புடம் இட்ட பொன்னே ஒளி பெறும்." இதனைத் தலையங்கமாக வைத்து ஒரு சிறிய கட்டுரை வரைக.

## 17

'உலகமெல்லாம் ஒரு வெண்குடை நீழலில் வைத்து அரசு செலுத்தும் வேந்தனேயானாலும், தான் பயிர் செய்த ஒரு தினைப்புனத்தில் விளைவைக் காட்டு யானைகளுங் காட்டுப் பன்றிகளும் புகுந்து அழித்துவிடாமல் இரவும் பகலுங் கண்ணுறக்கங் கொள்ளானாய் அதனைப் பாதுகாக்கும் ஒரு கானவனேயானாலும் எல்லாரும் ஒரு நாளைக்குக் கொள்ளும் உணவு ஒரு நாழியே யாகும்; அவர் உடுப்பன இரண்டு ஆடைகளே



யாகும்; இவையே யன்றிப் பிறப்பும் இறப்பும் நோயுங் கவலையுந் துன்பமும் இன்பமும் எல்லாம் எல்லார்க்கும் உள்ளனவேயாகும்; ஆதலாற் செல்வத்தாற் பெற்ற பயன் ஈகையறங்களைச் செய்தலேயாகும்; செல்வத்தைப் பிறர்க்குக் கொடாமல் யாமே நுகர்வமெனில், அது கை கூடாமல் தவறுதல் பலவாகக் காணப்படுகின்றன' என்னும் இச் செய்யுட் பொருள் மக்கள் வாழ்க்கையின் ஒத்த தன்மையினைப் பசுமரத்தாணி யறைந்தாற் போல் எவ்வளவு திறமாகத் தேற்றுகின்றது!

**விடை எழுதுக:**

1. எதிர்க் கருத்துடைய பல சொற்களுள்ள வசனமெழுதுக.
2. கானவன் ஏன் கண்ணுறக்கங் கொள்ளான்?
3. அரசரின் "வெண்குடை" என்ற சின்னம் சுட்டிக் காட்டும் பொருள்களைத் தருக.
4. இலங்கையின் "சிங்கக் கொடி" என்ற சின்னம் எவற்றைச் சுட்டிக் காட்டும்?
5. வேந்தனும் கானவனும் எத்தன்மைகளில் ஒரே மாதிரியாயிருப்பார்?
6. செல்வத்தைப் பெற்றவர் என்னசெய்யவேண்டும்?
7. "பசுமரத்தாணி யறைந்தாற் போல்" என்றதன் கருத்தென்ன?
8. பிறப்பளவில் மக்களெல்லாம் ஒரு தன்மையினரே என வோதும் ஒரு தமிழ்ப் பா எழுதுக.
9. மறைமலையடிகள் எழுதிய இவ் வசன நடையைப் பற்றி யாதறிவீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

கோதாவரிக் கரையிலிருக்கிற ஒரு பெரிய வன்னி மரத்தில் இலகுபதனன் என்னுங் காகம் வாசஞ் செய்துகொண்டிருக்கையில், ஒரு நாள் விடியற் காலத்தில் அங்கே யமனைப்போல மிகவும் பயங் கரனாய் ஒரு வேடன் வந்தான். இலகுபதனன் அவனைப் பார்த்துப் பயங்கொண்டு "இந்தத் துராத்துமா என்ன செய்வானோ தெரியவில்லை; ஆகையால் இதைச் சோதிக்க வேண்டும்" என்று இரை தேடுகிற எத்தனத்தை விட்டிருந்தது. இதற்குள் அவ் வேடன் வலையை விரித்துப் பல வகைப்பட்ட தானியங்களைத் தெளித்து அங்கே ஒரு செடிமறைவிற் பதுங்கிக்கொண்டிருந்தான். அதன் பிறகு தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின சித்திரக்கிரீவன் என்னும் புருவரசு, அங்கே இறைந்திருந்த தானியத்தைப் பார்த்துத் தன் பரிவாரப் புருக்களுடனே "இந்த நிர் மானுஷியமான காட்டில் தானியம் எப்படி வரும்? யாராகிலுங் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும்; இது நமக்குத் தெரிந்தாலல்லாமல் இதைப் பக்ஷிக்கலாகாது; ஒரு பிராமணன் பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியினால் எப்படி மரணமடைந்தானோ, அப்படியே நாமுந் துன்ப மடையவேண்டி நேரிடுமெனத் தோற்றுகிறது; ஆகையால் மிகவும் ஆலோசனை பண்ணி ஏதொன்று செய்யத்தக்கதோ அதனைச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது" என்று இங்ஙனஞ் சொன்ன வார்த்தையைக் கேட்டு, ஒரு புரு கர்வத்தோடு, "இப்படி ஆலோசித்தால் நமக்கு இரையகப்படாது; மேலும் வெட்க முறுகின்றவன், பொறுமையுள்ளவன், சந்தோஷ மடையாதவன், குரோத முள்ளவன், தீராச் சந்தேக முள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கின்றவன் ஆகிய இந்த ஆறுபேருந் துக்கத்தையே அனுபவிப் பார்கள்" என்றது. இதைக் கேட்டுப் புருக்க ளெல்லாந் தானியத்தைத் தின்னும்படி போன விடத்து வலையில் அகப்பட்டன. புருவரசன் அதைப்பார்த்து, "எல்லோரும் என் சொல்லைக் கேளாமற் போனார்கள், இப்போது நான் ஒன்றியா யிருப்பதிற் பயனில்லை" என்று சொல்லி, தானும் வலையில் வந்து அகப்பட்டது.



**விடை எழுதுக:**

1. வேடனின் பயங்கரத் தோற்றத்துக்கு உவமை யாக யாது கூறப்பட்டிருக்கிறது?
2. இலகுபதனன் இரை தேடுகிற எத்தனத்தை விட்டிருந்ததேன்?
3. வேடன் செடி மறைவிற் பதுங்கியிருக்கக் கார ணம் யாது?
4. புருவரசு, அத் தானியத்தை உண்ணலாகாது என்று ஏனைய புருக்களைத் தடுத்ததேன்?
5. எத்தகையோர் துக்கத்தை யனுபவிப்பவராவர்?
6. புருவரசன் தானும் போய் வலையிலகப்பட்ட தேன்?
7. பின் வரும் சொற்களை யுபயோகித்து அவற்றின் பொருள் விளங்க உமது சொந்த நடையில் வசனங்களாக்குக. துராத்துமா, எத்தனம், பரிவாரம், நிர்மானுஷியம், குரோதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மேற்படி பகுதியில் பின் வருவனவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் காட்டுக:
   (அ) "அ" அகச் சுட்டாக வர.
   (ஆ) 7-ம் வேற்றுமை 'இல்' உருபு இடப் பொருளில் வர.
   (இ) இறந்த காலப் பெயரெச்சம்.
   (ஈ) பால்பகா அஃறிணைப் பெயர்.
9. மேற்படி பகுதியை வாசித்துப் பொருள் சிதையாமல் புருக்களுக் கிடையில் நிகழ்ந்த சம்பவத்தைச் சம்பாஷணை நடையி லெழுதுக.
10. "எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவமென்ப திழுக்கு." இதனை விளக்கும் ஒரு சிறு கட்டுரை வரைக.

## 19

இந் நிலவுலகு கற்றறிந்தாராலேயே எக்காலமும் நடைபெறுவது. அவரே உலகுக்குக் கண்ணெனக் கருதப்படுவர். உலக இயற்கையில் தோன்றும் பொருள்களின் உண்மை அவர்தம் நுண்ணறிவிற்குப் பொள்ளெனப் புலப்படும். இறந்த காலத்தில் நிகழ்ந்ததைக் கொண்டு எதிர் காலத்தில் நடப்பதை உணர்ந்துரைக்கும் வன்மை அவருக்கு இயல்பின் அமைந்தது. மக்கள் ஒழுகலாறு இதுவென நம்முணர்வுக்கு இயைந்த வண்ணம் இனிய மெல்லிய சொற்களால் நமது புலத்தில் நன்கு பதியுமாறு அழகுறக் கூறும் பெருமைதான் என்னே! அவர் உறுதிப் பொருளாகிய தெள்ளமுதத்தைத் தீஞ்சுவை கனிந்த சொற் குழுவாகிய வலம்புரிச் சங்கானே ஊட்டி, நமது உடம்பைப் பெரிதும் பேணி வளர்க்கும் நற்றாயைப் போன்று, நமது அறிவை வளர்ப்பவராவர். அவருக்கு இவ்வுலகு என்றுங் கடமைப்பட்டுள்ளது. அவர் தம் அறிவின் மாட்சியானும் சொல் வன்மையானும் உலக நிலையை ஒரு கணத்தில் மாற்றத்தக்க ஆற்றல் படைத்தவராவர். அவர் இயற்றிய அரும் பெருநூல்களேயன்றி அச் செல்வர் வாழ்க்கையில் ஒழுகியவாறும் பெரிதும் சுவை பயப்பனவாம். எவ்வாறாயினும் நமக்கு அவை பேரின்பமும் விழுப்பயனும் பயப்பனவே.



**விடை எழுதுக:**

1. உலகுக்குக் கண்ணெனக் கருதப்படுபவர் யாவர்?
2. நமக்குப் பேரின்பமும் விழுப்பயனும் பயப்பன எவை?
3. பொள்ளெனப் புலப்படுவ தென்ன?
4. சொற் குழுவாகிய வலம்புரிச் சங்கானூட்டுவ தென்ன?
5. உலக நிலையை ஒரு கணத்தில் எவற்றால் மாற்றலாம்.
6. எமது உடம்பைப் பேணி வளர்ப்பவர் யார்? அறிவைப் பேணி வளர்ப்பவர் யார்?
7. இப் பகுதியிலிருந்து
   (அ) பெயர்ச் சொற்கள் ஐந்து எழுதுக.
   (ஆ) வினைமுற்று மூன்று எழுதுக.
8. அமைந்தது: இச் சொல் என்ன காலம் காட்டுகிறது? மற்ற இரு காலங்களிலும் அமைக்க.
9. மென்மை, சிறுமை: இச் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் இப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.
10. மேலே கூறிய கட்டுரைக் கருத்தமைந்த செய்யுட்கள் சில எழுதுக.
11. "கற்றறிந்தார் பெருமை" என்ற தலையங்கத்தில் உமது நடையில் 10 வரிக்கு மேற்படாத சிறு கட்டுரை வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

### நத்தையின் வயிற்றிற் பிறந்த முத்து

சுத்தமான நல்ல முத்து இயற்கையில் எப்படி யுண்டாகிற தென்பதைக் கவனிப்போம். மனிதன் உட்பட எல்லா ஜீவ செந்துக்கள் மேலும் — மரத்தின் மேல் புல்லுருவி போல் — ஒட்டுணியாக வசித்து வாழும் இதர ஜெந்துக்களைக் கடவுள் சிருஷ்டித்துள்ளார். நமது வயிற்றில் நாக்குப் பூச்சிகளும், தலைமயிரில் பேனும், இரத்தத்தில் நோயை உண்டுபண்ணக் கூடிய மலேரியாப் பூச்சிகளும் ஒட்டுணிகளே (Parasites). முத்து நத்தைக்கும் இவ்வித உபத்திரவம் உண்டு. இந் நத்தைகளின் கூட்டிற்குள் புகுந்து நத்தையைப் புசிக்க ஒருவகைப் புழுக்கள் வந்து சேரும். அப்பொழுது, நத்தை தனது உடலிலிருந்து சுக்தி புடமாகிற முத்துரேக்கைப் புழுக்களின்மேற் பூசிக் கொன்று விடுவதுமல்லாமல், மேன்மேலும் பூச்சுப் பூசுவதால் அப் புழுக்கள் முத்துக்களாக மாறி விடுகின்றன. எனவே முத்தானது புழுவின் சமாதியாகின்றது. நத்தைக் கிளிஞ்சிற்குள் புகுத்தப்படுகிற மணல் சிறு கல் முதலிய அந்நிய வஸ்துக்கள் எதுவும் மேற்கூறிய விதம் முத்தாக்கப்படும். என்றாலும் புழுக்களின் மேல் பூச்சு ஏறுவதால் ஆக்கப் பெறும் முத்துக்களே விலை யுயர்ந்தவை. பரிசுத்தமான நல்ல முத்தென மதிக்கப் பெறுவனவும் அவைதாம்.

முத்து நத்தைகள் சமுத்திரத்திற் பற்பல இடங்களிலும் வசிக்கின்றன. ஆஸ்திரேலியாக் கண்டத்தின் வடக்கேயுள்ள சமுத்திரத்தில் இவை காணப்படுகின்றன. பார்சியா தேசத்துக் கருகிலுள்ள பார்ஷியன் வளை குடாவில் முத்துச் சலாபம் வருஷந்தோறும் நடக்கிறது. இலங்கைத் தீவில் முத்துச் சிப்பிகள் சில வருஷங்களில் மட்டுமே சலாபம் செய்யப்படுகின்றன. தென்னிந்தியாவில் தூத்துக்குடியிற் சென்ற இருபது வருஷங்களில் மூன்று வருஷந்தான் முத்துக் குளித்திருக்கிறார்கள். இலங்கைத் தீவில் நடத்தும் முத்துச் சிலாபத்தில் மிக விலையுயர்ந்த முத்துக்கள் கிடைப்பதுண்டு.



**விடை எழுதுக :**

1. பதப்பொருள் கூறுக: இதர, புடம், கிளிஞ்சில், வஸ்துக்கள், சலாபம்.
2. பின் வரும் பதங்களை அமைத்துத் தனித்தனி வசனங்கள் எழுதுக:
   ஒட்டுணி, சிருஷ்டிப்பு, அந்நிய, சமாதி, உபத்திரவம்.
3. எதிர்மொழி கூறுக: சிருஷ்டிப்பு, அந்நிய, மதித்தல்.
4. புல்லுருவி என்றால் என்ன? அதன் சீவியத்தைச் சுருக்கிக் கூறுக.
5. ஒட்டுணியாகச் சீவிக்கும் ஐந்து ஜெந்துக்களின் பெயர் கூறுக.
6. "புழுவின் சமாதியே முத்து" இதனை விளக்குக.
7. முத்து உண்டாவதற்கு இங்குக் கூறப்பட்ட காரணங்களைவிட வேறு காரணம் அறிந்திருப்பின் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இளமை, உலர்தல், கை, தரை, கலத்தல்: இச் சொற்களின் பொருள் தரும் வேறு ஒவ்வொரு சொற்கள் தருக.
6. இருக்கும், நிற்கிறது, தவறுது, துவைப்பார்கள், சுடுவார்கள் — இச் சொற்களுக்குப் பகுதி விகுதி கூறுக.
7. "அதிற் சிறிது தண்ணீரை ஊற்று"— இவ் வாக்கியத்திலுள்ள நாலு சொற்களுக்கும் தனித் தனியே அவற்றெழுத்துக்களின் மாத்திரைகளைக் கணக்கிட்டுக் கூறுக.
8. "குயவர் சட்டி பானைகளைச் சூளையில் வைத்துச் சுடுவார்கள்"— எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் எழுதுக.
9. ஐயுருபு ஏற்ற ஐந்து சொற்கள் எழுதுக.
10. பிறவினைகளாக மாற்றி எழுதுக:—
ஊற்றினுன், விடுவார்கள், கலந்தது, சுட்டன.
11. "கலகலப்பு"— இதுபோன்ற இரட்டைக்கிளவி இப் பகுதியிலிருந்தால் எழுதுக.
12. "களி மண்ணில் நீர் அதிகமாய்ச் சுவறுது" என்பதற்கு ஒரு பரிசோதனை கூறுக.

## 22

சோழ நாட்டிலே "கோணிலை திரிந்து கோடை நீடினுந் தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை" யாகிய காவிரியாறு எக்காலத்தும் பெருக்கறுது நின்று பொன் கொழிக்கும். அந் நாட்டினர் கடவுள் வழிபாடு புரிவதிலும் தமிழாராய்ச்சியி லும் தமது காலத்தைச் செலவிட வல்லராயினர்; தமது நாட்டில் எங்கெங்குந் திருக் கோயில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டினர்; ஆங்காங்குத் திருக்குளங்கள் தொட்ட னர்; அன்னசாலை விடுதிச்சாலை முதலியன எடுத் தனர்; இளமரக்காவும், பயன்மரச் சோலையும் வைத்தனர்; தத்துவ ஆராய்ச்சியில் தலைக்கூடி நின்று புராணக் கேள்விகளை மக்கள் கேட்கு மாறு பட்டி மண்டபங்களை இயற்றுவித்து, ஆங்குப் புலவர் குழுமிப் பொருளுரை பொழியுமாறு செய்தனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சோழவள நாட் டிலே செல்வம் ஓங்கிய நகரங்களில் ஒன்ருகப் பொலியும் திருக்குடந்தையம்பதி என்பது கும்ப கோணம். அஃது எப்புறனும் அழகிய கோயில் களையுடையது அந்நகரிலே குளங்கள் நிறைந்து, சோலைகள் செறிந்து, பூக்கள் பொலிந்து, வயல் கள் மிகுந்து விளங்கும் காட்சி எவ்வெவர் மனத்தையும் கவர்ந்துகொள்ளும் நீர்மையது. அந்நகரம் கல்விச்செல்வம் கவின்று, புலவர் வதியும் பொன்னகராய்ப் பொலிந்தது. அதனுல் அங்குச் செந்தமிழ் மணம் சந்ததம் வீசிற்று.

**விடை எழுதுக:**

1. (அ) பொன் கொழிப்பது எது?
(ஆ) புலவர் வதியும் பொன்னகராய்ப் பொலிந்த தெது?
2. கும்பகோணச் சிறப்புக்களை யெழுதுக.
3. சோழ நாட்டினர் செய்யும் மேலான கிரியைகளிற் சிறந்த மூன்றை எழுதுக.
4. "கோணிலை.........பொன் கொழிக்கும்." இவ் வாக்கியக் கோவையை உமது உரைநடையி லெழுதுக.

5. "தத்துவ ஆராய்ச்சியில்......பொழியு மாறு செய்தனர்"—இதற்கு எழுவாய் பயனிலை கூறுக.
6. முதலாம் பந்தியிலுள்ள பயனிலை வினைகளை எதிர்மறையாக்குக.
7. 'பூ' என்னும் சொல்லை எட்டு வேற்றுமைகளிலும் வர வசனங்கள் அமைக்க.
8. உயிர்முன் உயிர் புணர்ந்து நின்ற சொற்றொடர்கள் மூன்று எழுதுக.
9. பின் வரும் சொற்களின் பொருள் விளங்க வசனங்களாக்குக.
   i. கோள்.
   ii. அன்னசாலை.
   iii. குழுமி.
   iv. நீர்மையது.
   v. சந்ததம்.
10. 'பண்டைக்கால அரசரும் புலவரும்' என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை வரைக.

## 23

## "தேமோ பிளாஸ்கு"

### (Thermos Flask)

இக் காலத்தில் "தேமோ பிளாஸ்கு" என்பதைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். சீமையிலே "றோயல் இன்ஸ்டிடியூஷன்" என்ற சங்கத்தின் ஆதரவிலே ஆராய்ச்சியாளராயிருந்த டீவார் என்ற துரை காற்றைத் திரவமாக்கிச் சில சோதனைகளைச் செய்தார். பனிக்கட்டியுருகும் நிலை (0 டிக்கிரி)க்கு மேல் 100 சதாம்ச



டிகிரியில் (100 C) ஜலம் கொதிக்கின்றது. பனிக்கட்டியுருகும் நிலை (0 டிக்கிரி) க்குக் கீழே 195 சதாம்ச டிக்கிரியில் (195°C) காற்றானது திரவமாக மாறுகிறது. அது மிகக் குளிர்ச்சியாயிருக்கும். அதைக் காப்பாற்றுவது மிகக் கஷ்டம். அத் திரவ நிலையில் அது சிறிது காலம் நிலைத்து நிற்பதற்காக 'டீவார்' ஒரு சூழ்ச்சி செய்தார். இரட்டைத் தகட்டில் கண்ணாடி ஏனம் ஒன்று செய்து தகடுகளுக்கு இடையில் இருக்கும் காற்றை வெளிவாங்கி விட்டு அதை மூடிவிட்டார். வெளித் தகட்டின் வெளிப்புறத்தைப் பளபளவென்று பூசி மினுக்கி விட்டார். இவ் வேனத்தில் திரவக் காற்றைப் பல காலம் வைத்துக் காப்பாற்றினர். அவர் எதிர்பாராதவண்ணம் அவர் சூழ்ச்சி இப்பொழுது எல்லாராலும் அவர் முறைக்கு நேர் விரோதமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. சூடுள்ள தேநீர், காப்பி, பால் முதலியவற்றின் சூடு காக்கப்படுகிறது. இவைகளின் சூடு இருபத்துநான்கு மணி நேரமாவது குறையாமல் காக்கப்படுகிறது. இக் கருவிக்கே 'தேமோ பிளாஸ்கு' என்று பெயர். இவைகளின் உள் தகட்டின் உட்பாகம் முலாம் பூசி மினுக்குண்டிருக்கும். உஷ்ணம் இவ்வுட்பக்கத்திற் பட்டுப் பிரதிபலித்து, உள்ளிருக்கும் சூடான திரவபதார்த்தத்தினின்றும் நீங்காமலிருக்கின்றது. இவ்வுபயோகம் வெப்பத்தை உட்புகச் செய்யாததாகிய வெற்றிடத்தின் குணத்தினாலே உண்டாகியது. கண்ணாடிகள் அடிக்கடி உடைந்து விடுவனவாதலின், 'தேமோ பிளாஸ்கு' மூடும் உறையாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஃகு ஏனங்களிற் பொருத்தி வைக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சாதனமில்லையாயின் பிரயாணிகளுக்கும் நோயாளிகளுக்கும் உஷ்ண பானங்கள் எச்சமயத்திலும் உடனே கிடைப்பது துர்லபமாய்விடும்.

**விடை எழுதுக :**

1. பின் வரும் பதங்களுக்குப் பிரதிபதம் கூறுக :— திரவம், ஏனம், சூழ்ச்சி, விரோதம், எஃகு, சாதனம், பானங்கள், துர்லபம்.
2. எதிர் மொழிகள் கூறுக ;— கஷ்டம், உஷ்ணம், அடிக்கடி.
3. பின் வரும் பதங்கள் வர வசனம் அமைக்க :— பிரதிபலித்தல், சாதனங்கள், துர்லபம், பளபளவென்று.
4. "தேமோ பிளாஸ்கு" என்பது தமிழில் எவ்வாறு வழங்கப்படுகிறது ?
5. "ரோயல் இன்ஸ்டிடியூஷன்" போன்ற நீர் அறிந்த இரு சங்கங்கள் கூறுக.
6. காற்றுத் திரவமாக மாறும்போது உஷ்ண நிலையென்ன ?
7. "தேமோ பிளாஸ்கு": இதன் இரு தகடுகளுக்கும் இடையில் உள்ள காற்றை எடுப்பதற்கும், உள்ளும் புறமும் மினுக்குக் கொடுப்பதற்கும் நியாயமென்ன ?
8. "டூவார் துரையுடைய முறைக்கு நேர் விரோதமாக இப்பொழுது நடைபெறுகிறது." இதனை விளக்குக.
9. "தேமோ பிளாஸ்கு" கண்டு பிடிக்கப்பட்டதற்கு நோக்கமென்ன ?



10. இவ் வியாசத்தில் வந்துள்ள ஐந்து வினைமுற்றுக்கள் கூறி அவற்றின் எதிர்மறைப் பதங்களையும் கூறுக.
11. பின் வரும் பதங்களைப் பிரித்தெழுதுக :— உட்டகடு, இவ்வுபயோகம், வெற்றிடம், மினுக்குண்டிருக்கும், எஃகேனங்கள்.
12. "தேமோ பிளாஸ்கின்" உபயோகத்தை விளக்கி ஒரு பந்தி எழுதுக.

## 24

## பொருளறிவும் புதிய வாழ்க்கையும்

எந்தத் தேசத்து ஜனங்களிடத்தில் பொருளறிவு ஆழ்ந்து பரவியிருக்கிறதோ, அந்தத் தேசத்து மக்கள் புதிய வாழ்க்கை நலன்களை அனுபவித்து நாகரிக மேம்பாட்டை அடைந்தவர்களென்று பொதுவாகப் பெரியோர்கள் கருதுகிறார்கள். பொருளறிவு என்பது என்ன ? பூமியிலும் மற்றச் சுற்றுப் புறங்களிலுமுள்ள பொருள்களை நமது ஐம்புலன்களின் மூலமாயறிந்து அவைகளின் குணங்களையும் உள் அமைப்பையும் உபயோகங்களையும் ஆராய்ந்து தெளிவு பெறுவதே பொருளறிவு எனப்படுகிறது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவீடன், ரூஷியா, இற்றலி முதலிய மேல்நாடுகளில் வசித்த அறிஞர்கள் பொருளறிவைப் பெரிதும் பெருக்கி முற்போக்கை யடைந்து சமூக வாழ்விலும் கைத்தொழில்களிலும் அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்களிலும் பல பெரு மாறுபாடுகளைச் செய்திருக்கின்றனர்.

பொருள்கள் பூமியிலிருந்தும் சமுத்திரத்திலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் கிடைக்கின்றன. பூமியை நன்றாய் உழுது பக்குவப்படுத்திப் பயிரிட்டால் பழுதில்லாத பல பொருள்கள் கிடைக்கின்றன. அவைகள் நெல், துவரை, பயறு, தினை, சாமை, கொள்ளு, எள்ளு, கடலை, உழுந்து ஆகிய நவதானியங்களும் கோதுமை, யவம், கரும்பு, கிழங்கு, காய், பழம், காப்பி, தேயிலை, புகையிலை, பருத்தி, றபர் முதலியவைகளும் பிறவும் ஆகும். பூமியில் இயற்கையாகவே பல பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன. அவைகளை அடைவதற்குப் பலர் முயற்சி செய்து ஐயாயிரம் அடிவரை பூமியைக் கீழே தோண்டிப் பயன் பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கின்றவைகளே தங்கம் வெள்ளி பாதரசம் முதலியனவும், ஈயம் தகரம் செம்பு இரும்பு அலுமினியம் நாகம் முதலிய மூலப் பொருள்களும், நிலக்கரி மண்ணெய் முதலியனவுமாகும். இவை தாதுப்பொருள், கனிஜப்பொருள், நிரசப்பொருள் என்று பல வகையாகச் சொல்லப்படுகின்றன.

**விடை எழுதுக :**

1. எவர்கள் நாகரிக மேம்பாட்டை அடைந்தவர்கள் எனப் பெரியோரால் கருதப்படுவார்கள் ?
2. ‘பொருளறிவு’ என்பது யாது ?
3. மேல் நாடுகளின் முன்னேற்றத்துக்குக் காரணம் யாது ?



4. முற்போக்கை யடைந்த மேல்நாட்டார் எவ்வெவ் விஷயங்களில் பெருமாற்றங்களைச் செய்திருக்கின்றனர் ?
5. பொருள்கள் எங்கிருந்து பெறப்படுகின்றன ?
6. பூமியின் உள்ளே இயற்கையாகக் கிடைக்கும் பொருள்கள் எங்ஙனம் சொல்லப்படுகின்றன ?
7. பின் வரும் சொற்களுடன் அவற்றின் எதிர்ச் சொற்களையும் சேர்த்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக :— அனுபவித்து, ஆராய்ந்து, அறிஞர்கள், பழுதில்லாத, பல
8. மேற்படி பகுதியை வாசித்துப் பின் வருவனவற்றுக்கு ஒவ்வோர் உதாரணங் காட்டுக.
   (அ) நிகழ்காலத் தெரிநிலை வினை முற்று.
   (ஆ) 2-ம் வேற்றுமை ‘ஐ’ உருபு
   (இ) பொருட் பெயர்
   (ஈ) இறந்த காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.
9. மேற்படி பகுதியின் முதலாம் வாக்கியத்தைப் பங்கீகரணஞ் செய்க.
10. மேற்படி பகுதியை உதவியாகக் கொண்டு ‘நாகரிகம்’ என்ற தலையங்கத்தில் சுருக்கமான ‘வானொலிச் சொற்பொழிவு’ ஒன்று எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25

ஒரு பெரிய மலையின் மேலுள்ள காட்டுவழியில் ஒரு புலவன் தன்னுடைய சுற்றத்தாருடன் நடந்து சென்ருன். அவனுடைய ஓய்ந்த நடையும் முகத்திலுள்ள வாட்டமும் பல நாளாக அவன் பட்டினி கிடந்த நிலையைப் புலப்படுத்தின. உடன் வந்த சுற்றத்தாருடைய நிலையும் அப்படியே யிருந்தது. அவனது இடையிலுள்ள ஆடை கறுப்படைந்தும் கிழிந்தும் மங்கியும் இருந்தது. குளிர் காலத்தில் மழைத் துளியால் நனைந்த பருந்தினது கரிய சிறகைப்போல அது தோற்றியது. அவனுக்கு நாமெங்கே போகிறேமென்ற நினைவு கூட இல்லை. யாரிடம் போகவேண்டுமென்ற குறிப்பும் இல்லை. கால் போன வழியே போய்க் கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து அந்தப் பட்டினிச் சுற்றத்தார் சென்றனர். கால்கள் ஓய்ந்தன. சிறிது இளைப்பாறலாம் என்ற எண்ணம் புலவனுக்குண்டாயிற்று. அம் மலைவழியிலே யிருந்த ஒரு பலாமரத்தடியில் அவனும் சுற்றத்தாரும் தங்கினுர்கள். "எங்கே போவது? என்ன செய்வது?" என்று திக்குத் தெரியாமல் அலைகின்ற அவர்களுக்கு எதிரே ஒரு வீரன் தோன்றினுன். அவன் அந்தக் காட்டில் வேட்டையாடிவிட்டு வந்தான். அவன் கையிலிருந்த வில்லைப் பார்த்தாலே ஒரே காலத்தில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும் அம்பை விடுபவன் அவன் என்று தோற்றியது. அவன் காலில் அழகிய வீரக்கழலிருந்தது. அவனுடைய உச்சியில் ஒரு சிறந்த நீலமணி ஒளி வீசியது. அவனுடைய தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே புலவனுக்கு அவனிடத்தில் ஒரு பெரு மதிப்பு உண்டாயிற்று. அஞ்சலி செய்தவண்ணமே புலவனெழுந்தான். பாவம்! நெடுந்தூரம் நடந்து வந்த வலியினுல் அவனது கால் அவன் சுவாதீனத்திலில்லை. நடுங்கியது. வீரன் பேசாமல் அப்படியே உட்காருங்கள் என்று கையமர்த்திப் புலவனை இருக்கச் செய்தான். அவனுடைய வார்த்தைகள் அன்பில் ஊறி வெளிவந்தன.



**விடை எழுதுக :**

1. நனைந்த பருந்தினது சிறகைப் போல எது இருந்தது? எப்படி?
2. வீரனது தோற்றப் பொலிவை உமது நடையில் வருணிக்க.
3. அன்பிலூறி வெளிவந்த வார்த்தைகள் எவை?
4. வேட்டையாடிவந்த அம்புமிக்க வில்வீரன் மேற்கொண்டு என்ன செய்திருப்பானென்று எண்ணுகிறீர்?
5. சுற்றத்தார் – புலப்படுத்தின – திக்கு – ஒளி – அஞ்சலி: இவற்றின் பொருள் தெளிவுபடும்படி தனித்தனி வாக்கியங்களி லமைத்துக் காட்டுக.
6. பின்வரும் வாக்கியங்களிற் பதங்களைத் தெளிவான பொருள் தரும்படி முறைப்படுத்தி யெழுதுக:

i. வழியே போன கால் போய்க்கொண்டிருந்தான்.
ii. காட்டில் ஒருவீரன் வந்தான் வேட்டையாடி விட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. அழகிய இருந்தது வீரக்கழல் காலில் அவன்.
iv. அவனுடைய அன்பில் வார்த்தைகள் ஊறி வெளிவந்தன.

7. ஓய்ந்த நடை, முகத்திலுள்ள வாட்டம், பட்டினிச் சுற்றத்தார், பெருமதிப்பு, அன்பிலூறிய வார்த்தைகள்—இவற்றை மறுதலையான பொருள் புலப்படும்படி வேறுபடுத்தி எழுதுக.

8. சுற்றத்தார் – ஆடை – சிறகு – தொடர்ந்து – அஞ்சலி: இவற்றின் பொருள் தரும்படி வேறு சொற்கள் தருக.

9. 'ஒரு புலவன் தன்னுடைய சுற்றத்தாருடன் நடந்து சென்ருன்' பங்கீகரணஞ் செய்க.

10. இப்பகுதியிலிருந்து மூன்று பெயரெச்சங்கள் தெரிந்தெடுத்து அவைகள் தனித்தனி வேறு பெயர்கள் கொண்டு முடிய வசனங்களாக்குக.

11. (அ) புணர்த்திக் காட்டுக: i. வேட்டை + ஆடி; ii. பல + பொருள்.

(ஆ) பிரித்தெழுதுக: i. பெருமதிப்பு; ii. ஊடுருவி.

12. எங்கே? யாரிடம்? என்ன? இவற்றில் வினைப் பொருளைத் தருதற்கான உறுப்புக்கள் எவை யெனப் பகுத்துக் காட்டுக.

13. உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவம உருபு இவையமைந்த ஒரு வாக்கிய மெழுதிக் காட்டுக.

14. மேலுள்ள கதைப் பகுதியைச் செறிவு குன்ருமல் மூன்றி லொரு பங்காகச் சுருக்கி யெழுதுக.



## 26

கந்தகம் பல வழியாலும் மக்கட்குப் பயன்பட்டு வரும் பொருளாகும். அது வளியில் எரியும் போது தோன்றும் கந்தக ஈருயிரியென்னும் ஆவி ஓர் அறையிலுள்ள நோய் முதல்களாகிய நச்சு நுண்ணுயிர்களைக் கொன்று, வளியைத் தூய் தாக்க வல்லது. வளியில் வாழும் நுண்ணிய நச்சுயிர்களைக் கொல்லுவதில் அது இணையற்ற தாகலின், தொற்று நோயாளர் உறைந்த அறையிற் கந்தகவர்த்தியை எரிப்பதுண்டு. அவ் ஆவி காளானையும் கொல்லும் தன்மையதாம். நாகரிகத்தில் நனி முதிர்ந்துள்ள மேலை நாட்டினர், 1914 – 1918 வரை நிகழ்ந்த பெரும் போரிற் பகைவரது உயிர்களை எளிதே வௌவுதற்கெனச் சமைத்த நச்சு வெடிக் குண்டுகட்கு வேண்டிய 'கடுகாவி' யின் இன்றியமையாத தொரு பகுதியும் கந்தகமே. பசியம் என்னும் ஆவியால் சலவை செய்யத் தகாத வைக்கோல் கம்பளி பட்டு முதலியவற்றைச் சலவை செய்தற்குப் பயன்படும் கந்தக ஈருயிரி, பண்படாக் கந்தகத்தை எரிப்பதனுல் ஏராளமாக உண்டாக்கப்படுகின்றது. நாம் அணியும் ஆடைகள், வீட்டுப் பொருள்கள், எழுதும் காகிதம், நாம் உண்ணும் சில செயற்கை உணவுகள் இவைகள் ஒவ்வொன்றையும் செய்தற்கு வேண்டிய கந்தகிகப் புளியமும் கந்தகத்தினின்றே ஆக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை எழுதுக:**

1. கந்தகத்தின் உபயோகங்களெவை?
2. கந்தகப் புளியத்தின் உபயோகங்களெவை?
3. அணி, உயிர், அறை, உறை — ஒவ்வொரு சொல்லையும் பெயராகவும் வினையாகவும் வைத்து வசனங்களெழுதுக.
4. பின் வரும் தொடர்களைப் பிரித்தெழுதுக:— ஈருயிர், ஒவ்வொன்று, வைக்கோல், நுண்ணுயிர்.
5. பிறவினைகளாக்குக: எழும்பு, செய், உருள், கல்.
6. 1-ம், 2-ம், 3-ம், 4-ம் வேற்றுமைகளின் சொற்கள் வர ஒரு வசனமெழுதுக:
7. பிழைகளைத் திருத்தி யெழுதுக:—
"அஞ்சு குடிகாறர் றேட்டால் போகையில் எதிரே சைக்கிளில் வாற பணக்காறனை மறித்துக் கொடுமொளிகள் கூறி யவன்றை முன்னூறு ரூபாய் பெறுமதியான களுத்துச் சங்கிலியை அவுத்துக் கொண்டு ஓட்டம் பிடிச்சான்கள்."
8. தொற்று நோய்களைத் தடுப்பதற்கு நீர் எவ்வித உபாயங்களைக் கையாளுவீர்?
9. "நோயில்லாத வாழ்க்கையே சிறந்தது" — இக் கருத்தமைந்த மேற்கோள்கள் சிலவற்றை நீவிர் கற்ற நூல்களினின்றும் தெரிந்தெழுதுக.
10. "இதுதான் விஞ்ஞானக் கலை" — வானொலி அஞ்சல் செய்வதற்கு ஒரு சொற்பொழிவு வரைக.



## 27

வீதியிலே பாடிக்கொண்டு வந்தவரே இராமதாஸ் என்னும் பெரியார். அவர் வடமப் பிராமணர்; இளமை முதலே சங்கீதம் பயின்றவர். சங்கீத அறிவோடு தெய்வ பக்தியுஞ் சேர்ந்தே அவர்பால் முதிர்ந்து வந்தது. அப்பால் அவருக்குக் காசி யாத்திரை செய்துவரவேண்டுமென்ற அவா உண்டாயிற்று. யாத்திரையாகப் புறப்பட்டு வடநாட்டிலுள்ள பல திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்தார். பல பெரியார்களோடு பழகினர். சங்கீத அறிவு மிக்கவராதலின் வடநாட்டுச் சங்கீதத்தையும் அப்பியாசம் செய்தார். அந்த நாட்டில் வழங்கும் பல உருப்படிகளையும் பாடம் பண்ணினர். பிறகு தஞ்சை முதலிய இடங்களுக்குச் சென்று அரசர்களுடைய சன்மானத்தை அவரடைந்தார். அங்கே பல வித்துவான்களுடைய பழக்கமும் உண்டாயிற்று. வெறும் சங்கீத அறிவு மாத்திரம் இருந்தால் அவர் ஒரு சமஸ்தானத்தில் வித்துவானாகவிருந்து விளங்கியிருப்பார். சங்கீதமாகிய சாதனத்தாலடையப்படும் சாத்தியமாகிய பரம்பொருளினிடத்தே அவர் தீவிரமான பக்தி பூண்டவராதலால், அவருக்கு அரசர்களுடைய சேவையும் வித்துவான்களுடைய பழக்கமும் நகர வாசமும் பிடிக்கவில்லை. நல்ல நதி தீரத்திலமைந்த ஸ்தலமொன்றிலிருந்து தம்முடைய பக்திக்கிடையூறின்றி வாழ்ந்து வர வேண்டுமென்று அவர் விரும்பினர். தம்முடைய சங்கீதத்தை அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணஞ் செய்வதைவிடப் பரம்பொருளுக்கு அர்ப்பண மாக்குவதே தக்கதென்ற கொள்கையை அவர் கொண்டார்.

**விடை எழுதுக :**

1. இராமதாஸ் என்னும் பெரியார் ஏனைய சங்கீத வல்லுநர்களைவிட எவ்வகையில் வேறுபட்டிருந்தார்?
2. இராமதாஸ் அறிஞருக்கு வடநாட்டுச் சங்கீதப் பயிற்சி ஏற்பட்டதெப்படி?
3. "பெரியார் இராமதாஸ் உண்மைத் தியாகி" என்பதற்கு மூன்று காரணங்கள் தருக.
4. இராமதாஸ் அவர்களிடமிருந்து நீர் பெறக்கூடிய நல்லறிவுகளெவை?
5. யாத்திரை – திவ்யஸ்தலங்கள் – சங்கீதம் – பூண்டவர் – இடையூறு – அர்ப்பணம்; மேலுள்ள ஆறு சொற்களினதும் பொருள் விளங்குமாறு உமது கற்பனையி லிணைத்தெழுதுக.
6. பெரியார், மிக்கவர், தீவிரம், இடையூறு, தக்கது : இச் சொற்களின் எதிர்மறையான சொற்களையெழுதுக.
7. இராமதாஸ், ஜென்மதேசம், திவ்யஸ்தலங்கள், ஸமஸ்தானம், ஜீவனம். இச் சொற்களிலுள்ள வடமொழிச் செறிவைக் கூடியமட்டும் தவிர்த்தெழுதுக.
8. கீறிட்ட இடங்கட்குத் தரப்பட்ட பகுதியிலுள்ள சொற்சொல்லை விடுத்து வேறு பொருத்தமான சொற்பெய்து பூரணமாக்குக.

இளமை முதலே சங்கீதம் ________, சங்கீத ஞானத்தோடு ________ சேர்ந்தேயவர்பால் ________



வந்தது. அவருக்குக் காசி ________ செய்துவர வேண்டுமென்ற ________ உதித்தது.

9. மேலைய பகுதிக்கு ஒரு மகுடநாம மிடுக.
10. சங்கீதம் பயின்றவர், தெய்வபக்தி, காசியாத்திரை, நதிதீரம், நகரவாசம் : இவை யொவ்வொன்றும் என்ன வேற்றுமையில் வந்த தொடரெனக் கூறி அவற்றை விரித்துக் காட்டுக.
11. பயின்றவர், வந்தது, உண்டாயிற்று, கொண்டார், விரும்பினர் : இச் சொற்களில் இறந்த காலம் காட்டும் உறுப்புக்களைப் பகுத்துக் காட்டுக.
12. வடநாடு, சங்கீதவறிவு, நகரவாசம், இடையூறின்றி : இவற்றை நிலைமொழி வருமொழியாக வகுத்தெழுதுக.
13. இடைச் சொற்களையும் பொருளையும் எழுதுக.
    - i. வந்தவரே இராமதாஸ்.
    - ii. சங்கீதத்தையும் அப்பியாசம் செய்தார்.
14. "கற்றதனா லாய பயன் தெய்வவழிபாடே" எனும் சான்றோர் கொள்கையை இராமதாஸ் அவர்கள் எங்ஙனம் உண்மைப்படுத்தினர்?

---

## 28

## தமிழ்நாட்டுப் பெண்பாலார் விளையாட்டுக்கள்

பெண்களுக்கென அமைந்த விளையாட்டுக்கள் அவர்களுடைய இயல்புக்கும் உடல் வளர்ச்சிக்கும் ஏற்றபடி இருந்தன. வீட்டில் இருந்தபடியே ஆடும் அம்மானை முதலியன அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புகளுக்கு உறுதியை உண்டாக்கின. பந்து விளையாடுதல் அக்காலத்தில் பெண்களுக்கே உரிய விளையாட்டாக இருந்தது. பெண்களை வருணிக்கையில் 'பந்தார் விரலி' என்றும், 'பந்தணை விரலி' என்றும் கூறுவது புலவர் வழக்கம்.

நகரங்களில் பூம்பொழிலில் மகளிர் கூடிப் பந்தாடும் இடங்கள் இருந்தன; கம்பர் கோசல நாட்டைப் பற்றி "பந்தினை யிளையவர் பயிலிடம்" என்று கூறுகிறார். அப்படியே அயோத்தியில் உள்ள பெண்கள் பந்தாடுதலை "பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடை, சிந்துவ முத்தினம்" என்றும், மிதிலையிலுள்ள மகளிர் பந்தாடுதலை "மையரி நெடுங்க ணேக்கம் படுதலுங் கருகி வந்து, கைபுகிற் சிவந்து காட்டும் கந்துகம் பலவுங் கண்டார்" என்றும் புனைந்துரைக்கின்றார்.

மகளிர் பந்தாடும்போது பாடிக்கொண்டே அடிப்பதுண்டு. அப்படிப் பாடும் பாட்டுக்குக் 'கந்துகவரி' யென்று பெயர். சிலப்பதிகாரத்தில் அவ்வகைப் பாட்டுக்கள் இருக்கின்றன. தத்துவராயர் நூல்களிலும் உள்ளன.

பந்தாடுதலேயன்றிச் சாழல், தெள்ளேணம், தோணோக்கம், கோலாட்டம், கும்மியடித்தல், உந்தி முதலிய மகளிர் விளையாட்டுக்களும் பல. அவற்றில் கும்மி, கோலாட்டம் என்பவற்றைத் தவிர மற்றவற்றை இக்காலத்திற் காணுதல் அரிது. பழந்தமிழ் நூல்களில் உள்ள செய்யுட்களால் அவ்விளையாட்டுக்களை அறிகிறோம். பெண்களுடைய சங்கீதப் பயிற்சிக்கும் தேகப் பயிற்சிக்கும் அவை உரியனவாக இருந்தன. அவற்றால் அவர்கள் நோயற்ற வாழ்வுடையராக இருந்தனர்.



**விடை எழுதுக:**

1. பின் வரும் பதங்கள் வரத் தனித்தனி வசனம் அமைக்க: வருணனை, புனைந்துரை, உறுதி, அம்மானை, கந்துகம்.
2. 'பண்டைக் காலத்தில் பெண்மணிகட்குப் பந்தாடுதல் சிறந்த விளையாட்டு' என்பதை ஆதாரங் காட்டி விளக்குக.
3. அக்காலத்துப் பெண்கள் பயின்ற விளையாட்டுக்கள் எவை?
4. "மையரி நெடுங்க ணேக்கம் படுதலும் கருகி வந்து, கைபுகிற் சிவந்து காட்டும் கந்துகம் பலவும் கண்டார்" — இச் செய்யுட் பகுதியின் பொருளை விளக்குக.
5. 'ஒரு தொழில் புரியும்போதும், விளையாடும்போதும் அதததற்கேற்ற பாட்டுக்கள் பாடுவது அன்றும் இன்றும் வழக்கமாக இருக்கிறது'. இதற்கு நீர் அறிந்த மூன்று உதாரணங்கள் கூறுக.
6. சிலப்பதிகாரத்தைப் பற்றி, மூன்று வசனம் எழுதுக.
7. மகளிர் விளையாடல்களைப் புனைந்துகூறும் மூன்று நூல்களின் பெயர் கூறுக.
8. பின் வரும் பதங்களைப் பிரித்தெழுதுக: மையரி, நெடுங்கணேக்கம், பைந்தமிழ், பூம்பொழில்.
9. மூன்று வேற்றுமைத் தொடர்கள் காட்டி அவை எப்பொருளில் வந்தனவென்றும் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சொல்லிலக்கணம் கூறுக: உண்டாக்கின, அரிது, நோயற்ற,
11. 'விளையாடலும் பாடலும்,' இதனை விளக்கி ஒரு பந்தி வரைக.
12. பெண்கள் விளையாட்டுக்களில் முற்காலத்துக்கும் இக்காலத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

---

## 29

அக்காலத்தில் இலங்கையை யாண்ட பரராசசேகரன் என்ற அரசர் தமிழ் நன்கு பயின்றவரென்றும், தமிழ் வித்துவான்களை அவர் தாய்போல் போற்றி வருபவரென்றும் வீரராகவ ரறிந்தார். அவ்வரசர் பரராசசிங்கமென்றும் வழங்கப்படுவர். அவரிடம் எங்ஙனமேனும் சென்று தங் கவிப்புலமையை வெளிப்படுத்தித் தக்க பரிசுகளைப் பெற்றுவரலாமென்று கவிவீரராகவ ரெண்ணினுர். எண்ணியபடியே மரக்கலமூர்ந்து கடல் தாண்டி இலங்கையை யடைந்தார். பரராசசேகரராஜும் இராசதானி சேர்ந்து அவரது அரண்மனையை நண்ணினுர். கற்றவர்கள் யார் வரினும், யாதொரு தடையுமின்றி, அவ்வரண்மனை அவர்களுக்கு இடங்கொடுக்கும். அரசருடைய கட்டளையின்படி அங்குள்ள ஏவலாளரும் அதிகாரிகளும் அவர்களுக்கு ஆவன செய்து உபசரித்தல் வழக்கம். அங்ஙனமே கவிஞராகிய வீரராகவருக்கும் உபசாரங்கள் நடைபெற்றன. "ஏவலாளர்களே இத்தகைய நல்லியல்பு உடையவர்களாக இருக்கையில் அரசர் எப்படியிருப்பாரோ? அவரோடு பழகுவதே யொரு பேருதியமாயிருக்கும்" என்ற எண்ணம் முதலியாருக்குண்டாயிற்று. அரசரோடு பேசவேண்டுமென்ற ஆவல் அவருக்கு வரவர அதிகரித்தது. முதலியாருடைய வரவை அரசருக்கு ஆங்குள்ளார் அறிவித்தனர். அவருக்குக் கண்ணில்லை யென்பதை யறிந்த பொருமைக்காரரான சில புலவர்கள் 'குருடர்களை அரசர் பார்த்தல் கூடாது' என்று கூறி அதற்குரிய சில ஆதாரங்களையும் காட்டினர். அரசருக்கோ புலவரைக் கண்டு பேசவேண்டுமென்ற விருப்பம் பெரிதாகவிருந்தது. தமிழருமை யறிந்தவராதலால் அவ்வரிய வித்துவானிடம் பேசி இன்புறுவதை யிழக்க அவர் விரும்பவில்லை. அப்பால் உடனிருந்த சிலர் இடையிலே திரையிட்டுப் பேசலாமென்று சமாதானமாக ஒருவழி சொன்ஞர்கள். அரசருக்கு அங்ஙனம் செய்வதில் முழு விருப்பமில்லாவிடினும் முதியோர் சிலர் பழைய வழக்கமென்று கூறவே அதற்கிணங்கினர்.

**விடை எழுதுக:**

1. வீரராகவ முதலியார் ஏன் இலங்கைக்கு வந்தார்?
2. பின் வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் காட்டுக.
   - i. ஏவலாளர்களே இத்தகைய நல்லியல்புடையவர்களா யிருக்கையில் அரசர் எப்படி யிருப்பாரோ?
   - ii. "குருடர்களை அரசர் பார்த்தல் கூடாது"
   - iii. இடையிலே திரையிட்டுப் பேசலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பயின்றவர், மரக்கலமூர்ந்து, நல்லியல்பு, பேரூ
தியம்: இச் சொற்களை உமது சொந்த வாக்கியங்
களி லமைத்தெழுதுக.

4. வாக்கிய ஒழுங்கு செய்க :—
   i. அரசருக்கு ஆங்குள்ளார் வரவை அறி
   வித்தனர் முதலியாருடைய.
   ii. வீரராகவர் கடல்தாண்டி இலங்கையை
   மரக்கலம் ஊர்ந்து அடைந்தார்.

5. அங்கனம்; ஊந்து; அறமனை; பளருதல்:
இவற்றில் பிழையுளவேல் திருத்துக.

6. இராசதானி சேர்ந்து — அரண்மனையை நண்ணி
னார் — அவரது அரண்மனை — தமிழ்நமை: இவை
என்ன தொடர்கள் ?

7. அரண்மனை இடங் கொடுக்கும் — அவருக்குக்
கண்ணில்லை: இவ்வசனங்களில் வந்த ஆகுபெயர்
களை எழுதுக

8. மேலைய பகுதியைப் பொருள் சிதையாமல் மூன்றி
லொரு பாகமாகச் சுருக்கி எழுதுக.

9. "யாழ்ப்பாணத் தமிழரசர்" என்ற தலையங்
கத்தில் சரித்திர சம்பந்தமாக நீவிர் அறிந்த
விஷயங்களைத் தொகுத்தெழுதுக.

---

## 30

மணிமேகலை மாதவி மகள். கோவலன் கொலை
யுண்ட பிறகு மாதவி விலைவாழ்வையும் கலை
வாழ்வையும் வெறுத்துத் துறவு பூண்டாள்.
தாயின் வைராக்கியம் மகளுக்கும் வந்தது. அற
வணவடிகளின் உபதேசம் கேட்பது, இறைவ
னுக்கு மலர்மாலை தொடுப்பது — இரண்டே
அவர்கள் வேலை.



ஒருநாள் மணிமேகலை சுதமதியுடன் புது
மலர் கொய்ய உபவனத்திற்குச் சென்றாள்.
சோழநாட்டிளவரசனும் வீரக்காளையுமாகிய உதய
குமரன் மணிமேகலையிடம் அடங்கா மையல்
கொண்டு உபவனத்திற்கு வந்தான். சுதமதி, "இள
வரசே! இந்த அற்ப உடலின்பத்திற்கு அடிமை
யாவது அறிவன்று; மண்ணுடல் மண்ணாகும். செய்
வினையோ உயிரைத் தொடரும். மணிமேகலை தவ
வொழுக்க முடையள். அவளைத் தீண்டினால்
சாபம் வரும்" என்று புத்தி சொன்னாள்.

மணிமேகலையும் சுதமதியும் அரச வீதிவழியாக
நடக்க அஞ்சி, சக்கரவாளக் கோட்டத்தின் வழியே
திரும்பினர். இரவை அங்கே கழிக்க எண்ணி இரு
வரும் கண்ணயர்ந்தனர். அப்போது, மணிமேகலா
தெய்வம் வந்து மணிமேகலையை மணிபல்லவத்
திற்குத் தூக்கிச் சென்றது. மணிமேகலை புத்த
பீடிகையைப் பணிந்து முற்பிறவியை அறிந்தாள்.
அங்கே ஒரு பொய்கையில் அக்ஷயபாத்திரம்
தோன்றி மணிமேகலை கைக்கு வந்தது. புத்த
பீடத்தைக் காக்கும் தீபதிலகை, "அம்மம்மா!
பசிப்பிணி கொடிது; உணவைத் தருவோர்
உயிரைத் தந்தவராவர். ஆதலால், இந்த அக்ஷய
பாத்திரத்தைக் கொண்டு, நீ அன்னதானஞ்
செய்துவா" என்றாள். மணிமேகலை பெண் துறவி
யாக ஊர் வந்து அவ்வாறே செய்தாள்.

உதயகுமரனாசை மீண்டும் மணிமேகலையைக்
கெஞ்சியது. மணிமேகலை, "ஐய! இந்த யாக்கை
பிறத்தலும் மூத்தலும் பிணிநோயால் இறத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைய இடும்பைக்கலன். இதன் பற்றைத் துறந்து நான் நல்லறம் புரிகின்றேன். நீ ஆசை யடக்கி அறவழிச் செல்" என்று உபதேசித்தாள். ஆசைக்கு அறவுரை ஏறுமா? மணிமேகலை காய சண்டிகைபோல் உருக்கொண்டு, இரவில் சம்பாபதி கோயிலில் ஒளிந்தாள். இளவரசன் அங்குஞ் சென்று குறையிரந்தான். இறுதியில் காயசண் டிகையின் கணவனால் கொலையுண்டிறந்தான். பழி மணிமேகலை தலையில் விழுந்தது. மணிமேகலையை அரசன் சிறையிட்டான். அவளது தூய்மையும் வாய்மையுங் கண்டபின் அரசன் அவளை விடுதலை செய்தான்.

**விடை எழுதுக :**

1. மாதவி எவற்றை வெறுத்துத் துறவு பூண்டனள்?
2. தாயும் மகளும் எம்முயற்சிகளைத் தங்கள் வேலையாக ஏற்றுக்கொண்டனர்?
3. மணிமேகலையும் சுதமதியும் சக்கரவாளக் கோட்டத்தின் வழிச் செல்லக் காரணம் யாது?
4. தீபதிலகை அன்னதானத்தின் மேன்மையை எங்ஙனம் எடுத்துரைக்கின்றாள்?
5. காயசண்டிகையின் கணவன் உதயகுமாரனைக் கொல்லக் காரணம் யாது?
6. மேற்படி கதைப் பகுதியிலிருந்து நீவிர் கற்றுக் கொள்ளும் உண்மைகள் யாவை?
7. பின் வரும் சொற்களைப் பொருள் விளங்கத் தனித்தனி வாக்கியங்களில் வைத்தெழுதுக:—
வைராக்கியம், இடும்பை, சாபம், அறவுரை.



8. இரண்டாவது பந்தியை ஒரு முற்றுவினை கொண்ட வாக்கியமாக மாற்றி எழுதுக.
9. மேற்படி பகுதியை வாசித்துப் பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் உதாரணங் காட்டுக:—
   (அ) 7-ம் வேற்றுமை 'இல்' உருபு இடப் பொருளில் வருதல்.
   (ஆ) எதிர்காலப் பெயரெச்சம்.
   (இ) 'ஆ' இடைச்சொல் வினாப்பொருளில் வருதல்.
   (ஈ) பெயர்ச்சொல் பயனிலையாக வருதல்.
10. ஐம்பெருங் காப்பியங்களு மெவை?
11. மேற்படி பகுதியிலிருந்து பின்வரும் தொடர்களை விளக்குக:—
   (அ) "செய்வினையோ உயிரைத்தொடரும்".
   (ஆ) "யாக்கை ஓர் இடும்பைக் கலன்".
   (இ) "வாய்மையும் தூய்மையும் உயிர் காக்க வல்லன".
12. பின் வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி ஒரு விரிவான கட்டுரை வரைக:—
   (அ) "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே".
   (ஆ) "ஆசையை அடக்கி அறவழிச் சேறல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31

கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையான உற்பாதங்கள் உண்டாயின. அதுகண்ட மாதரி முதலியோரால் உற்பாத சாந்தியாகத் திருமாலைக் குறித்துக் குரவைக் கூத்து ஆடப்பட்டது. அதன் முடிவில் மாதரி நீராடுதற்கு வைகையாற்றிற்குச் சென்றாள். அப்பொழுது சிலம்பு திருடியவனென்று துணிந்து, கோவலனை அரசனேவலாளர் கொன்ற செய்தியை, மதுரையிலிருந்து வந்த ஒருத்தி சொல்லக் கேட்டுக் கண்ணகி பதைபதைத்து மூர்ச்சித்துப் பலவாறு புலம்பினாள்.

"என்னுடை உயிரை வாளால்
ஈர்ந்தனர்; இனியென் செய்கேன்?
மன்னுடை மதுரை மூதூர்
வாழ்வெலாம் சுடுவேன்!" என்று
மின்னிடை மெல்லி யாளின்
மேனியின் ரோமம் எல்லாம்
புல்நுனி வாளா றற்போல்
பொங்கிய புகைந்த மாதோ.

ஊழியோ! ஊழித் தீயின்
உறுமலோ! உறுமி நிற்கும்
ஆழியோ! ஆழி தூர்க்க
அலைந்திடும் சூறைக் காற்றோ!
சூழிய பேய்கள் சுற்றும்
சூரியோ! என்றென்(று) அஞ்ச
ஏழினோ(டு) ஏழாம் அண்டம்
யாவையும் கலக்கும் சீற்றம்.

கற்பெனும் கனலின் நேரே
கடவுளின் வலியென் செய்யும்?
நிற்பன திரிந்த; மாறித்
திரிந்தன திகைத்து நின்ற;



கற்பமும் முடிந்த போலக்
கதிரவன் குருட னானான்;
அற்புதக் கற்பின் மேலோர்
அருந்தவப் பெருமை யுண்டோ?

விடை எழுதுக:

1. இப்பகுதிக்கு ஏற்றதோர் மகுட நாமம் இடுக.
2. ஆய்ச்சியர் குரவைக் கூத்து யாரைக் குறித்து எதற்காக, எப்பொழுது ஆடப் பெற்றது?
3. கண்ணகியது சீற்றத்தின் கொடுமை எவ்வாறு கூறப்பட்டது?
4. கண்ணகி யாது செய்யத் துணிந்தாள்?
5. இச் செய்யுட்களில் எவ்விதச் சுவை அமைந்துள்ளதென்று ஒரு பந்தி எழுதுக.
6. இப் பகுதியில் வந்துள்ள உவமைகளையும் அவற்றிற் கேற்ற உவமேயங்களையும் கூறுக.
7. உருபு மயக்கமாவது யாது? நீர்கற்ற நூலினின்று உதாரணம் எடுத்துக் காட்டுக.
8. பின் வரும் தொடர் மொழிகளைப் பிரித்தெழுதி, பொருள் கூறுக:—
   'மூதூர் வாழ்வெலாம்'
   'ஏழினோ டேழாம் அண்டம்'
   'அருந்தவப் பெருமை'
9. கற்புடைய பெண்ணின் கடமைகளையும் மகிமைகளையும் பற்றித் திருவள்ளுவர் எவ்வாறு கூறுகிறார்?
10. பத்தினிப் பெண்டிர் உலகத்தவரால் தெய்வமாகக் கொண்டு போற்றப்படுவர் என்பது பற்றிக் கண்ணகி வரலாறு கொண்டு ஒரு சிறு குறிப்புரை வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32

பண்டைக்காலத்து அரசர்களெல்லாரும் ஈகையிற் சிறந்திருந்தார்கள். பெருமிதம் அல்லது வீரத்திற்குரிய காரணங்களுள் கொடையுமொன்று. மூவகை முரசுகளிற் கொடைக்குரிய முரசு ஒன்று. கொடுத்துப் புகழ் பெற்ற பெருவள்ளல்களின் வரலாறுகள் பல பண்டைத் தமிழ் நூல்களில் விரிந்து கிடக்கின்றன. அவர்களுடைய ஈகையே உலகை நிலை நிறுத்திப் புலமையையும் நூல்களையும் அழியாது காத்ததென்பது மிகையாகாது. ஒரு மனிதனுக்குளவாகும் துன்பத்துள் இறத்தலே பெரிதாகும். அந்தத் துன்பத்தினும் பெரிய துன்பம் வேறில்லை. ஈதலியலாத் துன்பம் அதனினும் மிக்க துன்பமென்பது பண்டைத் தமிழர் கொள்கை. நாட்டை யிழந்திருந்த குமணனென்னும் ஒரு வள்ளலை ஒரு புலவர் சென்று இரந்த காலத்து, நாட்டையிழந்த துன்பத்தினும் அவர் தன்பால் ஒன்றும் பெறுது போதல் மிக்க துன்பத்தை அவனுக்கு விளைவித்தது. அதனால் தன் தலையைக் கொண்டு சென்று கொடுத்துத் தம்பிபாற் பரிசில் பெறும்படி அவன் தன் வாளை அப்புலவரிடம் கொடுத்தானென்பர். அரசர்கள் எவ்வாறு ஒழுகி வந்தனரோ அவ்வாறே குடிகளும் ஒழுகினர். அக்குடிகள் தம்பால் வந்தவர்களுக்கு வேண்டியன ஈந்து பாதுகாத்து வந்தனர். ஈதலுள்ளும் பசிக்கு உணவு ஈதல் தலை சிறந்த பேரறமென்று தமிழர் உணர்ந்திருந்தனர். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதனால் அன்னதானம் உயிரைக் கொடுத்தலோ டொப்பக் கூறப்பட்டது. பிறர் பசியைத் தீர்த்தவனுக்குப் பசிப்பிணியின் துன்பம் இல்லையென்பது அவர்கள் துணிபு.



**விடை எழுதுக:**

1. இப் பகுதியில் உமது உள்ளத்தைக் கவர்ந்த ஒரு கருத்தைத் தெரிந்து அதனை ஒரு வாக்கியத்தி லமைக்க.
2. குமணனென்னும் வள்ளலைப்பற்றி இங்கு நீர் அறிவதென்ன?
3. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" இதன் பொருளை எழுதுக. இது எந்நூலிலுள்ளதெனக் கூறுக.
4. "சாதலி னின்னாத தில்லை யினிததூஉம், ஈதலியையாக் கடை" — இக் குறட் பாவுக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிந்தெழுதுக.
5. ஈகை, துன்பம், இறத்தல், புலமை — இவற்றுக்கெதிர்மறையான பொருள் தரும் ஒவ்வொரு சொல் தருக.
6. பெருமிதம், பேரறம், வள்ளல், மிகையாகாது — இவற்றைப் பொருள் விளங்குமாறு தனித்தனி வாக்கியங்களி லமைக்க.
7. மூவகை முரசுகளு மெவை?
8. இப் பகுதியிலுள்ள ஆகு பெயர்ச்சொல் ஒன்று தெரிந்து இன்ன ஆகுபெயர் எனக் காட்டுக.
9. இப்பகுதியிலுள்ள இரண்டு ஏகார விடைச் சொற்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருளையும் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "அரசர்களெவ்வாறு ஒழுகி வந்தனரோ அவ்வாறே குடிகளும் ஒழுகினர்." கீறிட்ட இடங்கட்கு இலக்கணக் குறிப்பெழுதுக.
11. ஈகையைச் சிறப்பித்துச் சொல்லுகின்ற எவையேனும் இரண்டு செய்யுட்களைக் கூறுக.
12. "கொடையிற் சிறந்தவன் கன்னன்"—இதனைக் கதை மூலம் விளக்கி எழுதுக.

---

## 33

## வாழ்க்கையின் அதிசயம்

உயிர்ப் பொருள்களைப்பற்றி வேறோர் அதிசயமாவது, உயிர்ப் பொருளின் அமைப்பிற்காணும் நுண்மையாகும். நமது உடலிற் பல உறுப்புக்கள் உள்ளன. ஒவ்வோர் உறுப்பையும் பகுத்துப் பகுத்து ஆராய்ந்துகொண்டே போவோமாகில் தனித்தனியான சிறு பொருள்களைப் பார்க்கலாம். இப் பொருள்களை அரங்குகள் என்போம். சில அரங்குகள் மிக நுண்ணியனவாயிருக்கின்றன. அவைகளிற் பெரும்பாலானவை நமது கண்ணுக்குப் புலப்படாத நுட்பமானவையே. அரங்குகள் ஐஞ்ஞூற்றினை ஒரு வரிசையாக நெருக்கி யடுக்கினும் வரிசையின் நீளம் ஓர் அங்குலத்துக்கும் குறையும். இத்தகைய உயிரரங்குகள் கோடா கோடியினால் அமைக்கப் பெற்றது நம் உடல். நமது இரத்தம் செந்நிறமாயிருப்பதற்குக் காரணம் அந்நீர்ப் பொருள் செந்நிறமாயிருத்தலே யென்பது அல்ல. இரத்தத்தில் நிறமற்ற ஒரு நீர்ப்பொருளும் அதன்கண் சிவந்த துணுக்குகள் அநேகமும் காணப்படுகின்றன. இச் செந்நிறத் துணுக்குகள் மெல்லிய வட்டத் தகடுகள் போன்றவை. இவைகளே நமது வாழ்க்கைக்கு ஆதாரமான பிராணவாயுவை உறிஞ்சி, உடலெங்கும் திரிந்து வேண்டுமிடங்களிலெல்லாம் மீட்டும் கக்குகின்றன. இத் துணுக்குகளை மட்டமாகப் பரப்பி வரிசையாக நெருக்கி யடுக்குவோமாயின் நாலாயிரந் துணுக்குகள் ஓரங்குல நீளமுடையவையாகும். இவைகளை ஒன்றன்மேலொன்றாக அடுக்குவோமானால் பன்னீராயிரம் சேர்ந்து ஓரங்குலக் கனமுடையவையாகும்.



சாதாரண மனிதன் ஒருவனது வாழ்க்கையில் இத்தனை நரம்பரங்குகட்கும் வேலையுண்டோ என்பதும் சந்தேகத்துக்கிடமாகின்றது. இன்னும் இந்நரம்பரங்குகள் ஒவ்வொன்றிலும் மிகுதியான கிளைகள் உள்ளனவென்றும் ஒன்றன் கிளைகளோடு அடுத்ததொன்றன் கிளைகள் எத்தனையோ வழியாகப் பின்னிக்கொண்டு கிடக்குமென்றும் அறிஞர் ஆராய்ந்துரைக்கின்றனர்.

**விடை எழுதுக :**

1. பின் வரும் பதங்களின் பொருள் கூறுக :— துணுக்கு, அரங்கு, நுண்மை, அறிஞர்.
2. பின் வரும் பதங்களைப் பிரித்தெழுதுக : கோடா கோடி, செந்நிறம், நாலாயிரம், பன்னீராயிரம்.
3. "அரங்கு" என்னும் பதந் தரக்கூடிய பொருள்களை எல்லாம் விளக்கத் தனித்தனி வசனம் அமைக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மனித உயிர் ஒன்பது துவாரத்தையுடைய உடம்பில் சீவிக்கின்ற விநோதத்தைக் குறிக்கும் நன்னெறிச் செய்யுள் கூறுக.
5. உடலின் அரங்குகளைப்பற்றி நீர் யாது விளங்குகிறீர்?
6. தொடரிலக்கணம் கூறுக:— தனித்தனி, நம்முடல், பிராணவாயு, நீர்ப்பொருள்.
7. பகுபத உறுப்புக்கள் கூறுக: இருக்கின்றன, உள்ளன, மெல்லிய.
8. இதில் வந்துள்ள மூன்று வினையெச்சங்கள் கூறி, அவற்றின் வாய்பாட்டினையும் கூறுக.
9. மூளை, நரம்புமண்டலம் என்பன தபாற் கந்தோர், தந்திக்கம்பி, இவற்றை நிகர்க்கின்றமையை ஆராய்ந்து ஒரு பந்தி எழுதுக.
10. "உடலமைப்பின் மகிமை"—இதனை விளக்கி ஒரு சிறு கட்டுரை வரைக.

## 34

# தமிழ் வசனமும் அதற்கு இலக்கணமும்

'தமிழ் வசனநடை எப்படி இருக்க வேண்டும்?' என்பது கேள்வி. ஒவ்வோர் ஆசிரியனும் தனது நூலை ஒரு சில வகுப்பாரை மனத்தில் வைத்தே யெழுதுகிறான். யாரைக் குறித்து எழுதுகிறானோ அவர்களுக்குத் தக்கபடி வசன நடை வேறுபடுதல் இயல்பு. குழந்தைகளுக்குக் கதை சொல்லும் போது ஓர் ஆசிரியன் கையாளும் நடை வேறு; கற்றறிந்தோருக்குத் தன் கருத்தை



வெளியிடும்போது கையாளும் நடை வேறு; வழங்கும் சொற்களும் வேறு. இப்படியாக வாசகர்களுக்குத் தக்கபடி நடை மாறுகிறது. இனி, சொல்லக் கருதும் விஷயங்களுக்குத் தக்கபடியும் நடை மாறுபடும். சரித்திர நூல் எழுதும்போது கையாளுவது ஒரு நடை. விஞ்ஞான நூற் கருத்துக்களை வெளியிடும்போது கையாளுவது வேறொரு நடை. முறையும் வேறு. இதுவுமல்லாமல் சொல்லும் நோக்கத்துக்கு ஏற்றபடியும் நடை வேறுபடுதலியல்பு. தன் சொல் வன்மையால் வாசிப்போரை வசீகரித்து அவர்களை உற்சாகப்படுத்துவதற்குக் கொள்ளும் நடை வேறு. ஏதேனுமொன்றை விளக்கஞ் செய்வதற்கு மேற்கொள்ளும் நடை வேறு. இதற்கு மேலும், சொல்லும் முறைக்கு ஏற்றபடியும் வசன நடை மாறுபடும். சம்பாஷணை ரூபத்தில் எழுதும் நடையும் கடித ரூபத்தில் எழுதும் நடையும் வேறுவேறாம். கடைசியாக ஆசிரியர்களுடைய மனநிலைக்கு ஏற்றபடியும் நடை வேறுபடுவதுண்டு. அறிவாற்றல் மிக்க ஆசிரியனது நடை ஒரு வண்ணமாயிருக்கும். உணர்ச்சி வசத்தனாய் நிற்பவனது நடை வேறொரு வண்ணமாயிருக்கும். இவ்வாறாக வாசகர்களுக்கும் விஷயங்களுக்கும் நோக்கங்களுக்கும் மேற்கொள்ளும் முறைகளுக்கும் ஆசிரியர் மனநிலைகளுக்கும் ஏற்றபடி வசன நடைகள் மாறுபடும். இயற்கைத் தோற்றங்கள் ஒருபடியாய்க் காணுதலில்லை. அவை யொன்றுக் கொன்று வேறுபட்டே தோன்றுகின்றன. வசன நடைகளும் அத்தகையனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை எழுதுக :**

1. பின் வரும் பதங்களை வைத்துத் தனித்தனி வசனம் அமைக்க:
   மனக்கருத்து, விஞ்ஞானம், வசீகரம், வண்ணம், இயற்கை.
2 இவ்வியாசத்தில் வந்துள்ள ஐந்து வடமொழிப் பதங்கள் கூறுக.
3. கற்றறிந்தோர் வாசித்து உணரவேண்டுமென்று நூல் எழுதிய ஆசிரியர் மூவர் பெயர் கூறி, அவர் இயற்றிய ஒவ்வோர் நூலும் கூறுக.
4. தன் சொல்வன்மையால் வாசிப்பவரை வசீகரித்து உற்சாகப்படுத்தும் நூலொன்றின் பெயர் கூறுக.
5. சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய நூல்களும் வசன அமைப்புக்களும் எவ்வெந் நோக்கங்களைக் கொண்டனவாய் இருக்கின்றன?
6. ஔவையாருடைய நூல்களில் செய்யுட்களின் வசன அமைப்பு இலேசாயும், பொருளமைப்பு அரிதாயும் இருக்கின்றதன் நோக்கமென்ன?
7. கடிதம் எழுதும்போது வசன அமைப்புச் சம்பந்தமாக நீர் கவனிக்கும் மூன்று பிரதான விஷயங்கள் கூறுக.
8 சமய சம்பந்தமான நூல் எழுதியவர்கள், எவரும் இலேசாய் விளங்கமுடியாத வசனநடைகளில் விஷயங்களை எழுதினர். நீர் அதற்கு என்ன நியாயம் கூறுவீர்?
9. இவ்வியாசத்தில் வந்துள்ள ஐந்து வேற்றுமை உருபுகளும், அவற்றின் பொருளும் கூறுக.



10 மேல் வருவனவற்றிற்குச் சொல்லிலக்கணம் கூறுக: தோன்றுகின்றன, கருத்துக்கள், ஆசிரியனும், வகுப்பார்.
11. "புதினப் பத்திரிகைகளின் வசன அமைப்பு" இதைப் பற்றிச் சுருக்கமான பந்தி எழுதுக.
12. "இயற்கைத் தோற்றங்களும், வசன நடையும்" இதைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

---

## 35

அக் காலத்தில் உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் நன்றாக நடைபெற்றன. கப்பல் வியாபாரம் சிறந்திருந்தது. புகார், தொண்டி, முசிரி, கொற்கை முதலிய பல துறைமுகப்பட்டினங்களிருந்தன. அப்பட்டினங்களில் இடையறாது ஏற்றுமதி இறக்குமதி நிகழ்ந்துகொண்டிருந்தன. காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தைப் பற்றிய செய்தி 'பட்டினப்பாலை' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அங்கே கடற்கரையிலுள்ள தெருக்களில் பெரிய பண்டகசாலைகளிருந்தன. கப்பலிலிருந்திறங்கிய பண்டங்கள் மலைபோற் குவிந்திருந்தன. கப்பல்களுக்கு, ஊர் துறை சமீபத்திலிருப்பதைக் காட்டும் விளக்குண்டு. கலங்கரை விளக்கமென்பது அதன் பெயர் கடற்கரையிலிருந்த வீடுகளிலுள்ள விளக்குக்களை மரக்கலத்திலுள்ளாரறிந்து துறைமுகத்திற்கு வருதலும் உண்டு. பண்டகசாலையிலுள்ள பண்டங்களைக் காக்கும் காவலாளர்கள் தங்கள் கடமையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வனே ஆற்றிவந்தனர். இறக்குமதி செய்யும் பொருள்களுக்கும் ஏற்றுமதி செய்யும் பண்டப் பொதிகளுக்கும் சோழருடைய புலிப் பொறியாகிய முத்திரையையிட்டனர். அப் பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கி வந்தனர். உள்நாட்டு வியாபாரத்திற்குஞ் சுங்கவரியுண்டு. வியாபாரிகள் தங்கள் பண்டங்களோடு செல்லும் வழிகளில் அவர்களைப் பாதுகாத்தற்குரிய காவலாளர்கள் இருந்தனர். இத்தகைய நிலையில் வியாபாரம் இருந்தது. அதனை நடத்தும் வாணிகர் சிறந்த நிலையிலிருந்தனர். அவர்கள் இலாபத்தை வெளிப் படையாகச் சொல்லி விற்றனர். அரசர்களாற் பெரிதும் மதிக்கப் பெற்றனர். அன்றியு மவர்கள் 'எட்டி' யென்னும் பட்டத்தையும் அதற்குரிய பொற்பூவையுமடைந்தனர்.

விடை எழுதுக.

1. பழந் தமிழ் நாட்டிலிருந்த துறைமுகப் பட்டினங்கள் நான்கு எழுதுக.
2. சோழருடைய இலாஞ்சனை யாது?
3. உள்நாட்டு வியாபாரிகளை அரசன் எப்படிக் காத்தான்?
4. அரசன் வணிகர்களை எவ்வாறு கௌரவித்தான்?
5. பின்வருவனவற்றைத் தனித்தனி வாக்கியத்தி லமைக்க; வெளிப்படை, பட்டினப்பாலை, கலங்கரை விளக்கம், சுங்கவரி.
6. பிழையுளவேல் திருத்தியமைக்க:—
சோளர் — வெழிப்படை — யாவாரம் — குமிந்து — கார்க்கும்.



7. மேல்வருவனவற்றைப் புணர்த்தி விதிகாட்டுக:—
(அ) உள் + நாடு (ஆ) பொன் + பூ.
(இ) அ + காலம்
8. "பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்று மெய்" என்னும் சூத்திரத்தில் "ஆவியரமுன் வன்மைமிகா" என்பதற்கு ஓர் உதாரணந் தெரிந்தெழுதுக
9. கீறிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப் பெழுதுக:—
(அ) மலைபோல். (ஆ) பட்டினத்துத் துறைமுகம் (இ) வருதலுமுண்டு.
10. உருபும் பொருளும் எழுதுக:—
(அ) அரசர்களால் மதிக்கப்பெற்றனர்.
(ஆ) நூலிற் கூறப்பட்டுள்ளது.
(இ) கப்பலிலிருந்து.
(ஈ) முத்திரையையிட்டனர்.
11. மேற்படி பகுதியைப் பொருள் சிதையாமல் மூன்றிலொருபாகமாகச் சுருக்கி எழுதுக.
12. "காவிரிப்பூம்பட்டின வியாபாரச்சிறப்பு" என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை வரைக.

## 36

"தேன் தரும் விரைமலர்த் தேம்பாவணி" என்று தமிழறிஞர் தலைக்கொண்டு போற்றும் விழுமியநூல் வீரமாமுனிவரென்னும் வித்தகரால் இயற்றப்பட்டதாகும். எத்திசையும் புகழ்மணக்க இனிதிருந்த இத்தாலிய நாட்டிற் பிறந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திற் போந்து இயேசுமதத் தொண்டாற்றத் தலைப்பட்ட இவ்வறிஞர் அமிழ்தினுமினிய தமிழ் மொழியை அரிதின் முயன்று பயின்றார். நிறைந்த கல்வியும், சிறந்த சீலமும் வாய்ந்து விளங்கிய இம் முனிவரை,

> "மறைமொழி வாயினன் மலிதவத் திறைவன்
> நிறைமொழிக் குரவன் நிகரில் கேள்வியன்"

என்று தேம்பாவணிப்பதிகம் பாராட்டுகின்றது. செல்வத்துட் செல்வமாய செவிச்செல்வம் பெற்று, இருமையும் பயக்கும் இருந்தவம் புரிந்து தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்த வீரமாமுனிவர் பெருமை அவர் அருளிய தேம்பாவணி எனும் காவியத்தால் இனிது விளங்குவதாகும். வான் அரசியாய் விளங்கிய மேரி என்பாள் திருவாய் மலர்ந்த வளன் பெருமையைத் தமிழ்மொழியில் எழுதப்போந்த வீரமாமுனிவர் தமிழ்நூல் மரபினைத் தழுவி இறை வணக்கம் பாடியருளினார். அறம் நிரம்பிய மனத்தினராய முனிவர் இருமையும் தரும் பெருமை வாய்ந்த வளன் என்னும் சூசையப்பரது கதையை ஆசைபற்றி அறையுந் திறம், அறிந்து போற்றத்தக்கதாகும். வளன் கதையை வளமார்ந்த பாலாழி யென்றும், அக்கதையை ஆர்வத்தால் பருகலுற்ற தன்னை, ஆசையுற்ற பூசையென்றும், வான மேரி திருவாய்மலர்ந்த வளன் கதையை ஈனமுற்ற தான் எடுத்துரைக்கப் போந்த எளிமையை "ஆசையுற்று ஊமனேனும் அருங்கதை அறையலுற்றேன்" என்றும் முனிவர் அருளிப்போந்தார்.



**விடை எழுதுக :**

1. செல்வத்துட் செல்வமெது?
2. "இருமை" என்ற தெவற்றை?
3. வீரமாமுனிவர் பிறந்தநாடு, தொழில், தொண்டாற்றியவிடம், இயற்றிய ஒரு நூலின் பெயர்—இவற்றை எழுதுக.
4. 'முனிவர்' என்ற பெயர் எக்காரணம் பற்றி வந்தது?
5. கருத்தெழுதுக:—மறை, விரை, பதிகம், தமிழகம், விழுமிய, திரு.
6. பின்வரும் சொற்கள் எத்தனையாம் வேற்றுமையில் வந்தனவென்றும் என்ன பொருளில் வந்தனவென்றும் எழுதுக: வித்தகரால், வளன்கதை, தமிழகத்தில்.
7. எடுத்துரைக்க, ஆசையுற்று, இருந்தவம்—இவற்றைப் பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.
8. அருங்கதை, வளன்கதை, இராப்பகல் — இவை என்ன தொகைநிலைத்தொடர்? விரித்தும் காட்டுக.
9. "வானமேரி" என்ற தொடருக்கு விசேடவுரையெழுதுக.
10. "முனிவர் பெருமை" என்ற விடயத்தைப்பற்றிக் கட்டுரை வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37

இசை அல்லது சங்கீதம் என்று குறிக்கப்படும் நுட்பக்கலை ஒரு குலத்தாருக்கோ, ஒரு சமயத்தாருக்கோ மட்டும் சார்புடையதன்று. அது எல்லா மனிதரையும், எல்லா உயிர்ப்பிறவிகளையும் பொதுவாக உள்ளியக்கவல்ல ஓர் உணர்ச்சிக்கலை ஆகும். தம்முள் மாறுபட்டு நிற்கும் நாட்டினரையோ, சமுதாயத்தாரையோ, மதத்தாரையோ ஒன்றுபடச் செய்யும் வன்மையில் இதினும் மேம்பட்ட ஒருகலை உலகத்தில் இதுகாறும் தோன்றவில்லை யென்று உறுதியாகக் கூறலாம். நமது நாட்டுக் கவியொருவர் :

“ ஓடுங் கொடிய விடப்பாம்பும்
பேயும் இசைகேட் டுள்ளுருகி
யாடுங் கருங்கல் லசைந்துவிடும்
அழுத குழவி குரலடங்கும்
மாடும் இசைகேட் டுழுதுவரும்
வந்த பசுவும் பால்சுரக்கும்
பாடும் இசைகேட் டுருகாரை
என்னென் றுரைப்பேன் பாவலரே !”

என்று சாற்றுகின்றார்.

ஆயின் உலகத்தில் எல்லாருக்கும் சங்கீதத்தில் இயற்கையான ஞானம் அல்லது வாசனையிருக்குமோ என்பதைப்பற்றி ஐயம் நிகழலாம். இயற்கையிலே ஞானமுள்ளார்க்கு, சங்கீதக்கேள்வி எய்தப் பெறுமையாலும், எய்தப் பெறினும் அதிற் கருத்துச் செலுத்தப்படாமையானும் அந்த ஞானம் உண்டோ இல்லையோ என்று உறுதிப்படுத்த



முடியாமலிருக்கலாம். அந்தரங்கத்தில் ஒருவருக்கு இயற்கை ஞானம் இருந்த போதிலும், பயிற்சியில்லாக் குறையால் அது வெளியிற் பிரகாசிக்கமாட்டாமலிருக்கலாம். ஞானமில்லையென்று நாம் ஒருகால் முடிவுகட்டிய ஒருவருக்குப் பிறகு கேள்வி வாய்க்கப்பெற்று ஞானம் வெளிப்படையாய் விளங்கக் கண்டிருக்கிறோம். ஆதலால்; இந்தக் கலையில் புலமை வேண்டுமாகில் பயிற்சி அல்லது கேள்வி இன்றியமையாததென்று திடமாகக் கூறலாம்.

சங்கீதம் மனிதருடைய கவலைகளையும் துன்பங்களையும் ஒருவாறு தீர்க்குமென்பதும், தற்போதுக்காவது அவற்றையெல்லாம் மறப்பித்து, ஆனந்தத்தை நல்குமென்பதும் உலகத்தில் அறிவாளிகளும் அறிவிலிகளும் அறிந்திருக்கக்கூடிய உண்மைகளே. ஏனெனில், சங்கீதம் “ கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளும் ” அதிமதுரத் தன்மையடங்கிய கலையாதலின் என்க. ஆயின், கேவலம் ஆனந்தத்தை விளைப்பதுமட்டுமல்ல சங்கீதத்தின் உண்மையான பயன். அதைவிட மேலான நலப்பாடுகளையும் அது பயக்கின்றது. அவற்றுள் மனிதரின் நெஞ்சத்தைத் தூய்மையாக்குதல், இரக்கத்தை அல்லது சகதாபத்தையுண்டாக்குதல் இவையிரண்டும் அமைவன. உடனுணர்ச்சி அல்லது சகதாபம் உண்டாக்குவதற்குச் சங்கீதம் மிகப் பொருந்திய கலையென்னுங் கொள்கையைப் பெரியார் வெளியிடுகின்றனர். கிரீஸிலிருந்த பிளேற்றோ என்னும் பெரிய ஞானி சங்கீதத்தைப்பற்றி உரைப்பதாவது :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சங்கீதம் இப் பிரபஞ்ச இயக்கத்திற்கு ஓர் ஆன்ம சக்தியையும், மனத்துக்குக் கிளர்ச்சியையும், நிரூபண சக்திக்கு உயர்வையும், துயரத்திற்கு ஒரு சாந்தியையும் எல்லாவற்றிற்கும் களிப்பையும் சீவியத்தையும் அளிக்கின்றது. அஃது ஒழுங்கின் உளமயமாயிருந்து, நல்லதும் நடுநிலையும் சாந்தநிலை அழகும் ஆகிய எவ்வெவற்றிற்கும் ஒரு வழிகாட்டியாயிருப்பதுடன், அவற்றில் மறைந்து கிடக்கும் சிறந்த ஆழ்ந்த என்றும் அழிவுறாத வடிவமுமாகும் " என்பது.

விடை எழுதுக :

1. சங்கீதத்தின் இரு உண்மைப் பயன்களெவை?
2. பிளேற்றோ சங்கீதத்தைப்பற்றி என்ன அபிப்பிராயங் கூறினார்?
3. ஒருவருக்குச் சங்கீதத்தில், இயற்கை ஞானம் இல்லையென்று ஏன் சொல்லலாகாது?
4. நமது நாட்டின் கவியொருவர் சங்கீதத்தின் வன்மையைப்பற்றி என்ன கூறுகின்றார்?
5. கலை, ஐயம், மதம்—ஒவ்வொரு சொல்லும் இரு பொருள்தர வசனங்கள் எழுதுக.
6. மூன்றும் பந்தியின் முதலாம் வாக்கியத்தைச் சிறுவசனங்களாக மாற்றியெழுதுக.
7. 'கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளும் கலை' (a) கருத்தை விளக்குக. (b) உம்மையிடைச் சொல் எப்பொருளில் வந்தன?
8. கருங்கல், கேட்டுருகாரை : பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.



9. 'உண்டு' என்ற சொல்லின் தொடக்கத்திலும் இறுதியிலும் வரும் உகரங்களைப்பற்றி யாதறிவீர்?
10. நீர் சமுகமளித்த ஒரு சங்கீதக் கச்சேரியைப் பற்றிப் பிறவூரில் வாழும் நும் சிநேகிதருக்கு ஒரு கடிதம் வரைக.

---

## 38

ஒரு நாட்டின் சிறப்பினைப் பிற்காலத்தவர்களறியும்படி செய்துவைக்கும் உபகாரிகள் புலவர்களே. அவர்களை ஒருநாடு எவ்வளவு உயர்வாகப் போற்றி வந்ததோ அவ்வளவு நாட்டின் நாகரிகம் சிறந்திருந்தது என்று கூறலாம். பண்டைத் தமிழ்ப் புலவர்கள் அரசர்களினுஞ் சிறந்தவர்களாக மதிக்கப்பெற்றனர். அரசர்கள் அவர்களை ஆசிரியர்களாகக் கொண்டு வழிபட்டு வந்தனர். அரசர்கள் தகுதி யல்லாதவற்றைச் செய்தகாலையில் அவர்களையிடித்து அறிவுரை கூறும் பேராற்றல் புலவர்களுக்கு உண்டு. அவர்கள் தடையின்றி எங்கும் செல்லலாம். பகையரசர் நட்பரசர் என்னும் வேறுபாடு அவர்கட்கு இல்லை. அரசர்கள் புலவர்களைப் போற்றிவந்த பல வரலாறுகளுண்டு. புலவர்களாற் பாடப்பெறுதலைப் பெரும் பாக்கியமாக அக்காலத்து அரசர்கள் எண்ணினர். அந்தப் புகழ் பேரின்பத்தை யீயுமென்பது அவர்கள் கொள்கை. இவ்வளவு உயர் நிலையிற் புலவர்கள் இருந்தமைக்குக் காரணம் அவர்கள்பாலிருந்த பெருந்தன்மையே. அவர்கள் யாரையும் மதியாமல் அற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியே நடந்தனர். நல்லிசைப் புலவர்களென்றும், சான்றோரென்றும் அவர்கள் வழங்கப்பட்டனர். அரசர்கள் தீய நெறியில் நடந்தால் அவர்களைக் கண்டிக்க அஞ்சார்கள். தங்களைக் காத்துக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்று அவர்கள் எண்ணினர். பொய்யாமையும் செய்ந் நன்றியறியுங் குணமும் அவர்கள்பால் மிகவும் சிறந்திருந்தன. உலகியலை அவர்கள் நன்குக அறிந்திருந்தனர். கடவுள் படைப்பிலமைந்த பல வகைப் பொருள்களைக் கண்டு அவற்றின் அழகி லுஞ் செயல்களிலு மீடுபட்டனர். அவர்களுடைய செய்யுட்களில் உவமையாகக் காணப்படுவன இயல் பாக அமைந்த பொருள்களாக இருக்கும். உள் ளதை உள்ளவாறே கூறும் அழகு அவர்களு டைய செய்யுட்கள் தோறும் விளங்குகின்றது. சிறந்த குணங்களும் உயர்ந்த புலமைத் திறனும் அவர்கள்பால் இருந்தமையே அவர்களுக்கு நன் மதிப்பை உண்டாக்கியது.

**விடை எழுதுக :**

1. புலவர்கள் எவ்வகையில் நமக்கு உபகாரிகளாவர்?
2. பண்டைப் புலவர்களின் பெருந் தன்மையை விளக்குக.
3. பழந்தமிழ்ப் புலவர்களின் செய்யுட்கள் சிறந்து விளங்குவதின் காரணம் என்ன?
4. புலவர்களின் நன்மதிப்புக்கு ஏதுவாயுள்ளவை யாவை?



5. உபகாரிகள், போற்றுதல், அறிவுரை, பேரின்பம் அறவழியே, ஈடுபட்டனர் — இவற்றிற்குப் பதி லாக அவ்வவ் இடங்களிற் பிரயோகித்தற்கேற்ற வேறு சொற்கள் தருக.
6. கீறிட்ட இடங்களை நிரப்புக :
அரசர்கள் தகுதியற்ற ____ செய்த வேளையில் அவர்களை ____ புத்திமதி கூறும் ____ புலவர் களுக்கு உண்டு. புலவர்கள் யாரையும் ____ அறவழியே ஒழுகினர். தம் நலம் ____ பிற ருக்கு ____ செய்யவேண்டுமென ____ எண் ணினர். உலக நடைமுறையை அவர்கள் ____.
7. "அரசர்கள் புலவர்களை ஆசிரியர்களாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்." பங்கீகரணம் செய்க.
8. உபகாரிகள், அரசர், வரலாறுகள், சிறந்திருந் தன, விளங்குகின்றது: இவை ஒவ்வொன்றும் என்ன பால்? பால் காட்டும் விகுதிகளைப் பிரித் தெழுதுக.
9. சிறந்திருந்தது, தகுதியில்லாத, அவற்றினழகு, கடற்கரை : இவற்றைப் பிரித்துப் புணர்ந்த விதிகூறுக.
10. நாடு, உண்டு, நட்பு, ஈடு, அழகு : இவை என்னவகைக் குற்றுகரங்களென்று எழுதுக.
11. கீறிட்ட சொற்களுக்கு இலக்கணங் கூறுக.
தடையின்றி, செய்யுட்கள்தோறும், குணங்களும்.
12. இப் பகுதியின் பொருளை மூன்றிலொரு பகுதிக்கு மேற்படாமற் சுருக்கியெழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39

# இரவீந்திரநாதரின் திடசித்தம்

வாழ்க்கையில் சிரிப்பு எவ்வளவு அவசியமென்பதைச் சிரிக்கத் தெரியாதவர்களே நன்கு உணர்வார்கள். வியாதிக்காரனுக்குத்தான் தேக ஆரோக்கியத்தின் ஞாபகம் சதா மனத்தில் தோன்றும். தன் உடம்பைக் கவனித்துக்கொள்ளாமற் பலவீனத்தை வருவித்துக் கொண்டவன் தன் வியாதி முற்றியவுடன் ஆரோக்கியமும் சுத்தமும் தேகத்துக்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பதை நினையாமல் இருப்பதில்லை. இதுவே உலகின் இயல்பு. ஈண்டுச் சிரிப்பு என்ற சொல்லால், பிறரை ஏளனம் செய்வதையோ, அல்லது மனத்தில் ஊறித் தோன்றாமலே அக்கம் பக்கங்களில் உள்ளவர்களின் பரிகாசப் பேச்சிலிருந்து தொற்றி ஏற்பட்டதையோ நான் குறிக்கவில்லை. மனம் கலங்காமல் இருப்பதற்கு மிகுந்த உதவி புரிவதும் உள்ளத்தில் உதிப்பதுமான சிரிப்பையே உயர்ந்த அம்சம் பெற்றதாக நாம் எண்ணவேண்டும். அதையே திடசித்தத்தின் வெளித் தோற்றமாகவும் கொள்வதிற் பிசகில்லை.

சிரிப்பை வாழ்க்கையின் அடிப்படையான தருமமாகக் கொள்ள மிகுந்த பாடுபடவும் வேண்டுவதில்லை. ஏனென்றால் உழுத பூமியிற் பயிரிட்ட செடி தளிர்த்து அரும்புகளை ஈனுவதற்கும் அவ்விதம் நிறைந்த அரும்புகள் மலர்களாக மாறுவதற்கும் மனிதன் தனிப் பாடுபட வேண்டுவதில்லை. இரவீந்திரநாத தாகூர் பல இன்பரசமான



காவியங்களையும் கட்டுரைகளையும் எழுதியவர். வைராக்கியத்தின் அடிப்படையான மனநிலையையும் உணராதவரல்லர். அவரிடம் சாந்தமும் சக்தியும் ஒருங்கே செழித்து வளர்ந்தன. அங்ஙனம் இல்லாவிடில் கீழே குறிக்கும் அற்புதமான சில கவிதைகளை அவர் உலகுக்கு ஈதல் இயலுவதன்று; மனப் புண்ணுக்கு மருந்து நம்மிடமே தான் உள்ளது என்பதைச் சிறந்த முறையிற் காட்டுகிறார்.

அக் கவிதைகள் இவை:

“உனக்கு வேண்டியவர்கள் உன்னைக் கைவிடலாம். ஆனால் மனமே அஞ்சாதே. உன் ஆசையாகிய கொடி பூமியில் விழுந்து புரண்டு சின்னபின்னமாக ஒடிந்து கனி தர வகையற்றுக் கிடக்கும் பொழுதிலும் மனமே தயங்காதே. நீ வாசலை வந்து அடைவதற்கு முன் இரவின் இருட்டு உன்மேற் கவியவும் உன்னாற் பாடுபடினும் விளக்கேற்ற முடியாமல் இருக்கலாம். உன் கை தந்திவாத்தியத்தை மீட்டினதும் வனாந்தரத்திலுள்ள விலங்குகளும் புள்ளினங்களும் உன்னைச் சூழ்ந்து கொள்ளலாம். ஆனால், உன்னைச் சேர்ந்தவர்கள் கொஞ்சமும் உன்பால் மனமிளகாமல் இருப்பார்கள். அதையும் கண்டு கவலை கொள்ளாதே நெஞ்சே!”

‘சுவர்கள் கல்லால் ஆனவை. கதவுகள் தாழிடப்பட்டவை. அடிக்கடி நீ தட்டிப் பார்த்தும் அவை திறக்காமலிருக்கலாம். ஆனால் நெஞ்சே அவைகளைக் கண்டு பதறாதே?’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை எழுதுக :**

1. பின்வரும் பதங்களுக்கு எதிர்ப்பதங் கூறுக : ஏளனம், ஆரோக்கியம், சிரிப்பு, சாந்தம்.

2 பின்வரும் பதங்களை வைத்துத் தனித்தனி வசனம் அமைக்க : காவியங்கள் , வைராக்கியம் கவிதை, சின்னபின்னம்.

3. 'சிரிப்பின் அவசியம் சிரிக்கத் தெரியாதவர்களுக்குத்தான் தெரியும்'. இதனை இவ்வியாசத்தில் இல்லாத வேறோர் உதாரணத்தால் விளக்குக.

4. வெளித் தோற்றமாகிய சிரிப்புக்கு அகக்காரணம் எதுவாதல் வேண்டும்?

5. சிரிப்பு உண்டாவதற்குரிய பிரதான காரணங்களெவை?

6. 'நல்லவரின் சிரிப்புக்கு ஏது தீயவரின் கவலைக்கும், தீயவரின் சிரிப்புக்கு ஏது நல்லவரின் கவலைக்குமாம்'? இதனை விளக்குக.

7 'உள்ளத்தில் உதிப்பதுமான சிரிப்பு' என்றிருப்பதால் உள்ளத்து உதியாத சிரிப்புக்களுமுண்டு. உதாரணங் காட்டி விளக்குக.

8. "உன் ஆசையாகிய கொடி பூமியில் விழுந்து புரண்டு சின்னபின்னமாக ஒடிந்து கனிதர, வகையற்றுக் கிடக்கும்பொழுதிலும் மனமே தயங்காதே" — இத்தொடரின் விளக்கத்தை உமது சொந்த வசனநடையி லெழுதுக.

9. இவ்வியாசத்தில் வந்துள்ள மூன்று இடைச்சொற்களை — அவை சேர்ந்து வந்துள்ள பெயர்களோடு கூறி, அவை எப்பொருளில் வந்தன என்றும் கூறுக.



10. "இரவிந்திரநாத தாகூர்" அவர்களின் நூல்கள், கட்டுரைகள் என்பவற்றினால் நாம் அவரைப் பற்றி உரைக்கக் கூடியன எவை?

11. தாகூரின் குண விசேடத்தை விளக்கி ஒரு பந்தி எழுதுக.

12 திட சித்தத்தினுற் காரியசித்தியடைந்த ஒரு பெரியாரின் சரிதையை எழுதுக.

## 49

திருக்குற்றாலமலையைத் தமிழ் நாட்டின் இயற்கைக் கோயில்களில் ஒன்றென்று சொல்லலாம். குறவஞ்சித் தமிழ் குற்றால வாசத்தின் இன்ப அனுபவத்தை நினைப்பூட்டுகிறது.

மாத்திரைக் கோல் ஏந்திக் கூடை தாங்கிப் பாசிமணியும் குன்றிமணியும் அணிந்து "நடைக்கொரு குலுக்கும்" "வெளிக்கொரு பகட்டு"மாய் வரும் குறத்தி "விழிக்கொரு சிமிட்டும் மொழிக்கொரு பசப்பு"மாய்க் குறி சொல்லி வருகிறாள். கல்வி மணம் வீசப்பெறாத இவளது இயற்கையறிவு நெடுந்தூரப் பிரயாணங்களால் விசாலித்திருக்கிறது. கை பார்ப்பது போல முகக்குறி, விழிக்குறி, மொழிக்குறி முதலானவற்றையும் பார்த்துவிடுவாள். கான் பூத்த மலர்க்கொடி போல் இலங்கும் இக்குறப் பெண் மின்னற்கொடி போலத் துடித்துக்கொண்டிருக்கும் வசந்தவல்லி முன்போய் மலைவளம் பாடுவதைக் கேளுங்கள் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேனருவி திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே."

அம் மலைமீது இயற்கையோடிசைந்து வாழும் குறவரது வாழ்க்கை நலத்தினையும் எடுத்துரைக்கிறாள் :

"முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
[டோடும்,
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினையிடிப்போம்."

நாகரிக வாழ்க்கையின் ஆடம்பரங்களைப் பார்க்கிலும் கை புனைந்தியற்றாத இயற்கைப் பேரழகு வாய்ந்த மலை வாழ்க்கை அதிக அளவில் இன்பமளிக்குமென்று தோன்றுகிறது.

மலைவளம் பாடிய குறப்பெண் மீண்டும் பாடுகிறாள் :

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே."

விடை எழுதுக :

1. குற்றால மலையின் சிறப்பு யாது?
2. குறவர் எதை விரும்புவர்?



3. நாகரிக வாழ்க்கையிலும் குறவர் வாழ்க்கை எவ்விதத்திற் சிறந்தது?
4. மலைபடு திரவியங்களெவை?
5. எவற்றைக் காண்பது இன்பம்?
6. குறத்தி வாழ் நிலத்தின் மரம், பட்சி, மிருகம், கொடி, தானியம் — இவற்றில் வகைக்கொன்று கூறுக.
7. பின்வரும் இணைச் சொற்களைப் பொருள் வேறுபாடு தோன்றத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

   (அ) விளி — விழி (இ) வழி — வளி
   (ஆ) கேள் — கேழ் (ஈ) வாழ் — வாள்.
8. ஒரு பெண்ணின் நடை, இடை, முகம், மொழி, விழி என்பவற்றில் ஒவ்வொன்றிற்கும் எவற்றை உவமை கூறுவர்?
9. இறுதிக் கவியில் "காண்பது" என்னும் சொல் பலவிடத்து வந்தமை எவ்வணியின் பாற்படும்?
10. மின்னார்மருங்கு, கூனலிளம்பிறை, சிற்றில் — இவற்றிற்கு விசேட உரைகள் எழுதுக.
11. "ஓடக் காண்பது" என்ற தொடக்கத்துப் பாட்டின் பொழிப்பை எழுதுக.
12. இப் பகுதியில் வரும் பாடல்களில் அமைந்த ஓசையைப்பற்றி ஒரு சிறு குறிப்புரை வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுட் பகுதி



## 1

## தெய்வங் கொள்கை

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவையென்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி?
அதைநாம் எண்ணிட வேண்டாமோ?

எத்தனை மிருகம் எத்தனைமீன்!
எத்தனை ஊர்வன பறப்பனபார்!
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யுந்தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பதுமெய்.

அந்தப் பொருளை நாம்நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்;
எந்தப் படியாய் எவர்அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம்அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்

— வெ. இராமலிங்கம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அந்த அதிகாரியைப்பற்றி நாங்கள் ஏன் எண்ணிட வேண்டும்?
2. "அத்தனை யுந்தர ஒரு கர்த்தன்" — ஈண்டு அத்தனை என்றது எவைகளை?
3. கடவுளது உண்மையை எவற்றை ஆதாரமாகக் கொண்டு நிரூபிப்பாய்?
4. கடவுளது உண்மையை உணர்ந்த நாம் யாது செய்ய வேண்டும்?
5. அதிகாரம்-அதிகாரி; இதைப்போலப் பின்வரும வார்த்தைகளிலிருந்து வரக்கூடிய பதங்களை எழுதுக.
   வியாபாரம், பரிகாரம், தவம், பூசை, வித்தை.
6. இச்செய்யுளில் வந்துள்ள வியப்பைக் காட்டும் வாக்கியங்கள் மூன்று எழுதுக.
7. வினாவெழுத்துக்கள் எவை? மேற்படி செய்யுட்களில் உதாரணம் எடுத்துக்காட்டி விளக்குக.
8. "இயற்கை யற்புதமும் கடவுள் வழிபாடும்" — இதைப்பற்றி ஒரு சுருக்கமான கட்டுரை வரைக.

## 2

## விடாமுயற்சி

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

— நீதிநெறி விளக்கம்

1. கருமமே கண்ணாயினார் இயல்புகளெவை?
2. பொருள் கூறுக: மெய்வருத்தம், மேற்கொள்ளார், செவ்வியருமை.
3. பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் இரு வேறுவிதமான பொருள்தர உதாரண வசனங்கள் எழுதுக:-
   i மெய் ii கண் iii பார்



4. மேற்படி பாட்டில் கருமமே கண்ணாயினார் இயல்புகள் ஆறும் எதிர்மறை ரூபமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவ்வாறனையும் பொருள் சிதையாமல் உடன்பாட்டு ரூபமாக மாற்றி எழுதுக.
5. மேற்படி பாட்டைப்பங்கிகரணஞ் செய்க.
6. "கருமத்தே கண்ணாயிருத்தல்"—இதனை உதாரணக் கதைமூலம் விளக்குக.

## 3

## மூர்க்கரியல்பு

வானரம் மழைதனில் நனையத் தூக்கணங்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே.

— விவேகசிந்தாமணி

1. வானரத்திற்கு வேறு பெயரென்ன?
2. வானரம் ஏன் மழையில் நனைந்தது?
3. தூக்கணங்குருவியின் வீட்டைப்பற்றி யாதறிவீர்?
4. வானரத்தை நோக்கித் தூக்கணங்குருவி சொன்ன நெறி யாது?
5. "தூக்கணந் தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்"—வானரத்தின் மனநிலை யாது?
6. ஈனருக்கு ஒப்பிடப்பட்டதெது?
7. அறிவுடையோருக்கு அமைந்திருக்கும் குணசீலங்கள் எவை?
8. இச்செய்யுட் கருத்தமைந்த சில முதுமொழிகள் தருக.
9. இடர் — இக்கருத்தமைந்த வேறு சொற்கள் எழுதுக.
10. இச்செய்யுளின் கருத்தை விளக்கும் பஞ்ச தந்திரக் கதை ஒன்றைச் சுருக்கி எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

## தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!

—சுப்பிரமணிய பாரதியார்



1. மக்களை நோக்கிப் பாரதியார் "இங்கு நீரே பிரம தேவன் கலை" என்று புகழ்ந்து கூறுவது எதனால்?
2. "விண்ணினின்றெமை வானவர் காப்பார், மேவிப் பார் மிசை காப்பவர் நீரே" — என்ற அடிகளின் மூலம் கவிஞர் எவ்வுண்மையை ஸ்தாபிக்கின்றார்?
3. "தெய்வமாக விளங்குவிர் நீரே" — எப்பொழுது மக்கள் தெய்வமாக விளங்குவர்?
4. பின்வரும் செய்யுட்பகுதிகளின் பொருளை விளக்குக:-
   (அ) "மேவிப் பார்மிசை காப்பவர் நீரே."
   (ஆ) "நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே"
5. மேற்படி செய்யுட்களிலிருந்து பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் உதாரணங்காட்டுக:
   (அ) நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.
   (ஆ) வேற்றுமைத்தொகை
   (இ) இறந்தகாலத் தெரிநிலைவினை வினையெச்சம்.
6. கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்தியால் நம் நாடு அடையக்கூடிய நன்மைகளெவை?
7. நெசவுதொழிலையே மேன்மையாகக்கொண்ட புலவர் ஒருவரைப்பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.
8. "நான் விரும்பும் வாழ்க்கைத்தொழில்" — இதைப் பற்றி மாணவர் சங்க விரிவுரை எழுதுக.

---

## 5

## பசுவின் துயரம்

தன் உயிர்க் கன்று வீயத்
தளர்ந்தஆ தரியா தாகி
முன்நெருப்(பு) உயிர்த்து விம்மி
முகத்தினிற் கண்ணீர் வார
மன்உயிர் காக்கும் செங்கோன்
மனுவின்பொற் கோயில் வாயிற்
பொன்அணி மணியைச் சென்று
கோட்டினால் புடைத்த(து) அன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கது கேட்ட வேந்தன்
அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக்,
காவலர் எதிரே போற்றி,
"ஈங்(கு)இதோர் பசுவந்(து) எய்தி
இறைவநின்! கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால்
துளக்கிய(து)" என்று சொன்னார்.

மன்னவன் அதனைக் கேளா,
வருந்திய பசுவை நோக்கி
"என் இதற்(கு) உற்ற(து)" என்பான்
அமைச்சரை இகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த எல்லாம்
அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன்
தாளிணை தொழுது சொல்வான்.

"வளவநின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ,
அர(சு)உலாந் தெருவிற் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந்(து) இறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை" என்றான்.

—பெரியபுராணம்

1. முறையிடச் சென்ற பசுவின் தன்மையை எழுதுக.
2. அது யாது செய்தது?
3. காவலர் காவலனிடம் யாது சொன்னார்கள்?
4. அரசன் ஆவினைக் கண்டதும் அமைச்சரை யாது கேட்டான்?



5. "தொன்னெறி அமைச்சன்" எத்தகையவன்? அவன் யாது கூறினான்?
6. அரசனின் குணாதிசயங்களெவை?
7. அரசன் அமைச்சரை ஏன் இகழ்ந்து நோக்கினான்?
8. பின்வரும் சொற்களுக்குப் பதிலாக அவற்றின் பொருளினைத் தரும் வேறு சொற்கள் ஒவ்வொன்றெழுதுக.
(i) வீய, (ii) கொற்றம், (iii) துளக்கியது, (iv) வளவ, (v) ஆன்.
9. பின்வருவனவற்றைப் பிரித்தெழுதுக: பூங்கொடி, தொன்னெறி, தாளிணை.
10. இப்பாடத்தில் வந்துள்ள விளிவேற்றுமைச் சொற்களை எழுதி அவ்வேற்றுமை உருபுகளையும்விளக்கிக்காட்டுக.
11. 'முன்னுற நிகழ்ந்த வெல்லாம்....சொல்வான்"—அப்படி நிகழ்ந்தன எவை?
12. இப்பாக்களிற் கூறப்பட்ட கதைப்பகுதியை 5 வரியிற் கூறுக.

---

## 6

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க — வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

— நன்னெறி

1. உள்ளம் என்பதற்கு வேறு பெயர்கள் என்ன?
2. சினத்தாலுண்டாகும் கெடுதிகள் எவை?
3. சினத்தை எதனால் தடுத்தல் வேண்டும்?
4. கோபத்தை அடக்குவதோ செலுத்துவதோ அரிது?
5. மேற்படி செய்யுளிலமைந்துள்ள தொழிற்பெயர்களை எழுதுக.
6. "கவர்ந்தெழுந்தோங்கு" — தனிச் சொற்களாகப் பிரித்தெழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பின் வரும் வாக்கியத்தைப் பூரணப்படுத்துக:—
"வெள்ளந் தடுத்தல் அரிது," அதுபோல........
8. இச்செய்யுள் எவ்விஷயத்தைப்பற்றிக் கூறுகின்றது?
9. "குணம்" என்ற பெயர்ச்சொல் எட்டுவேற்றுமைகளிலும் வரத் தனித்தனி வசனங்களாக்குக.
10. சினங்காத்தலின் சிறப்பை விளக்கும் குறட்பாவை எழுதுக.

---

## 7

## அவரவர் கடமை

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களி(று)எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

— புறநானூறு

1. இச்செய்யுளிற் கூறப்பட்டவர் யாவர்?
2. பின் வருபவர்களுடைய கடமைகளை எழுதுக:—
தாய், தந்தை, கொல்லன், வேந்தன், காளை.
3. இது யாருடைய கூற்று?
4. எந்தச் சந்தர்ப்பத்திற் கூறப்பட்டதாகலாம்?
5. "எறிந்து என்பதன் பொருள் யாது? வேறு சொல்லை வழங்காமல் "எறிந்து" என்று சொன்னதனால் என்ன புலப்படுகின்றது?
6. இச்செய்யுட் கருத்தை ஒரு முற்றுவினை கொண்ட வாக்கியமாக எழுதுக.
7. ஒவ்வொருவரும் தனக்குச் செய்த கடமைகளைக் காளை கூறியதுபோல ஒவ்வொரு வசனத்தில் எழுதுக.
உ-ம்: எந்தாய் என்னை ஈன்று புறந்தந்தாள்.
8. பொருளிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவ்வகை ஒவ்வொன்றினைப்பற்றியும் சுருக்கமாய் விளக்குக.



## 8

## குருட்டுப் பையன்

இப்பிறப்பில் ஒருபொழுதும் எனக்கறிய முடியா
திருக்குமொளி என்பதென்னை இருவிழியி னடையும்
ஒப்பரிய நன்மைகள்இக் கண்கெட்ட சிறியேன்
உணரும்வண்ணம் உரைத்திடுவீர் உற்ற உறவினரே.

அனுதினமும் கண்காட்சி அற்புதங்கள் பேசி
அகங்களிப்பீர் ஆதித்தன் சோதிமயம் என்பீர்
எனதளவில் வெம்மையெனத் தோற்றுமிவன் செயலால்
இரவுபகல் மாறிவரல் எங்ஙன்அறி யேனே.

பாடிவிளை யாடுபொழு துறங்குபொழு தல்லால்
பகற்பொழுதி ராப்பொழுதிப் பகுப்பெனக்கு முண்டோ
நாடியுணர்ந் திருக்கநிதம் கூடுமெனில் எனக்கிந்
நானிலத்தில் ஓயாத பகலாகு மன்றே.

மைபடியும் வானமென்றும் வில்லென்றும் வர்ண
வகையென்றும் மனமகிழ்ந்து வனப்புரைகள் தருவீர்
ஐவகையில் பொறியிருக்க வேறுபொறி யுறுமேல்
அறிவுலக மாட்சியெலாம் அளவிடவும் எளிதோ.

ஒருகாலும் நீக்கமுடி யாதகுறை வந்தென்
உளத்திலெழும் பெருங்களிப்பை அழித்திடலாகாதே
வருபாடல் இதுவழுத்து பொழுதேதழைக் குருட்டு
வாலிபனு யிருப்பினுமோர் மகராசன் யானே.

1. அந்தப் பையன் உறவினரை நோக்கி, எவற்றை உரைக்கும் வண்ணம் கேட்கிறான்?
2. குருட்டுப் பையன் தனதளவில் ஆதித்தன் எப்படிப் பட்டதெனக் கூறுகிறான்?
3. அப்பையனுக்கு உள்ள — இல்லாத — பொழுதுகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எப்பொழுது அப்பையனுக்கு இப்பூமியில் ஓயாத பகலாகும்?
5. உலகமாட்சி எப்பொழுது அளவிடற்கரியதாகும்?
6. நீக்கமுடியாத குறைகள் அவனுடைய பெருங்களிப்பை அழிக்க முடியுமோ? ஏன்?
7. அந்தக் குருட்டு வாலிபன் எதனால் மகராசன் ஆகின்றான்?
8. பின்வரும் பகுதிகட்குப் பொருளெழுதுக:—
   (அ) இரு விழியினடையும்
   (ஆ) நாடியுணர்ந்திருக்க நிதம் கூடுமெனில்.
   (இ) வருபாடல் இதுவழுத்து பொழுது.
9. பின் வருவனவற்றுக்கு வகைக்கோர் உதாரணம் கூறுக.
   i பால்பகா அஃறிணைச் சினைப்பெயர்.
   ii. உயர்திணை ஆண்பாற் சுட்டால் வருபெயர்.
   iii. வினையெச்சம்.
10. மேற்படி செய்யுட்களின் பொருளை உதவியாகக் கொண்டு குருட்டுப் பையன் ஒருவனுடைய சுவ சரிதையை எழுதுக.

## 9

"பாலர்வந் தூரிற் புக்கார்
பானுவும் கடலிற் புக்கான்
மாலைவந் திறுத்த பின்னர்
வழியினை நோக்கி அன்னை
பாலன்வந் திலன்என் றேங்கிப்
பரிதபித் திருகண் டாரை
காலநொந் துருகி வாயிற்
கடைத்தலை வந்து பார்த்தாள்."

"வணங்கிய கரத்தாள் சால
வாடிய வதனத் தாள்முன்
இணங்கியும் முடனே வந்த
வென்மக னெங்கே யென்றாள்
மணங்கமழ் குழலாய் உன்றன்
மைந்தனை யரவு தீண்டி
உணங்கியே யிறந்தா னென்று
ருயிர்த்திலண் மறுகி வீழ்ந்தாள்."

— அரிச்சந்திர புராணம்

1. பாலர் ஊரை அடைந்த நேரம் என்ன? ஏன்?
2. வழியினை நோக்கியவர் யாவர்?
3. கடைத்தலை வந்து பார்க்கும்போது அவளுடைய நிலை என்ன?
4. அங்கே வந்த சிறுவர்களை என்ன கேட்டாள்?
5. அப்பொழுது அவளுடைய கோலம் என்ன?
6. சிறுவர் கூறிய விடையைப் பிறர்கூற்றாக மாற்றுக.
7. முதலாம் செய்யுளை வசன நடையில் எழுதுக.
8. பொருள் கூறுக:—
   பானு, வதனம், கண்டாரை, உணங்குதல்.
9. பிரித்தெழுதுக:—
   என்றேங்கி, கடைத்தலை, மணங்கமழ்.
10. மேற்படி செய்யுட்கள் கூறும் கதைப்பகுதியைச் சுருக்கமாக அழகிய நடையில் எழுதுக.

## 10

முறைமுறை பணிக ளெல்லாஞ்
செய்தற முடித்துப் பின்னர்
மறையவன் தன்னை யேத்தி
வாய்புதைத் தழுது விம்மி
இறைவகே ளரவந் தீண்டி
யென்மக னிறந்தான் யானச்
சிறையிலே சேறற் குன்றன்
றிருவுள மறியே னென்றாள்.

—அரிச்சந்திர புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 இச்செய்யுள் யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
2. மறையவனுடைய தொழில்களெவை?
3. பணி, மறையவன், வாய்புதைத்து, இறைவ, அரவம், அச்சிறை:—
இச்சொற்களின் கருத்தென்ன?
4. மேற்படி சொற்களை ஒவ்வோர் வசனத்தில் அமைத்துக் காட்டுக.
5. இப்பெண்ணின் விசேட குணங்களை விளக்குக.
6. எழுவாய் – பயனிலை கூறுக.
7. இச்செய்யுளிலுள்ள நயப்பகுதியை எடுத்துக் காட்டுக.
8. பின்வரும் வாக்கியங்களைச் சேர்த்து ஒரே முற்று வினைகொண்ட வாக்கியமாக அமைக்க:—

அரிச்சந்திரன் தன் நாடு நகரத்தை இழந்தான். தன் மனைவியையும் ஒரேயொரு மகனையும் இழந்தான். ஆயினும் சத்தியத்தையே விரதமாகக் கொண்டொழுகினான். அதனால் கடைசியில் இன்பவாழ்வெய்தினான்.

## 11

"மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்படவேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்



பெரியகடவுள் காக்க வேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்."

— சுப்பிரமணிய பாரதியார்

1 'மனதிலுறுதி வேண்டும்' ஏன்? எப்பொழுது?
2. 'வாக்கினிலே யினிமை வேண்டும்'—இக்கருத்தமைந்த குறட்பா ஒன்று எழுதுக.
3 இச்செய்யுளுக்கு ஒரு தலையங்கங் கூறுக.
4. காரியசித்தியின் இரகசியங்கள் எவை?
5. உண்மை நிலைபெற என்ன செய்வீர்?
6. மேற் சொன்னவற்றுள் நீர் வேண்டுவது எதனை?
7. 'கண் திறந்திட வேண்டும்'—கருத்தை விளக்குக.
8. பெண் விடுதலையைப்பற்றிப் பாரதியார் கருத்தென்ன?
9. பாரதியார் சுதந்திர உணர்ச்சி மிக்கவர் என்பதை எங்ஙனம் அறியலாம்?
10. "ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும்'—என்ற தொடக்கத்தையுடைய பாடலுக்கும், மேற்கூறப்பட்ட பாடலுக்கும் உள்ள தொடர்பு யாது?

## 12

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

—வாக்குண்டாம்

1. இச்செய்யுளை நான்கு முற்றுவினை கொண்ட வாக்கியங்களாக எழுதுக.
2. "நுண்மை": எதிர்ச்சொல் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குலம், குணம்: தனித்தனி வசனத்திலமைக்க
4. "செல்வம்": இருபொருள் தருமாறு வசனம் அமைக்க.
5. எழுவாய், பயனிலை கூறுக.
6. பெயரெச்சச் சொல் இரண்டு எழுதுக.
7. 'கற்ற' இதன் பகுதி ரூபத்தைப் பெயராகவும் வினையாகவும் வைத்து வசன மமைக்க.
8. நுண்ணறிவு: நிலைமொழி யாது?
9. (அ) "தான்" எவ்வகைப் பெயர்?
   (ஆ) "அளவு" எவ்வகை உகரம்? ஏன்?
10. நீராம்பல் – நூலளவு – மேலைத்தவம்: சொற்றொடர்களைப் பிரித்தெழுதுக.

---

## 13

## மலையும் அணிலும்

'அற்பத் திருடா' என்றெனை அழைத்த
வெற்பே! யானும் விளம்பக் கேளாய்:
'அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும்வளந்தருவண்மையும்' உனக்கென்(று)
உரைமொழி முற்றும் உண்மையே ஆயின்,
ஒருவகைப் பொருளின் ஒருல காமோ?
ஒருவெயில் மழையினுண் டொன்று தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்றாய்க் கூடினே உலகம் ஆண்டாம்;
ஆதலின் யானிவ் வகிலமீ துதித்தே
இருப்பதை இழுக்கா எண்ணவும் மாட்டேன்;
என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்?
உன்பே ருருளனக் கில்லை, உனக்கும்
என்சிறு வடிவிலை; மேலும் என்றன்



உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளத் தனையும் உனக்கிலை இலையே;
அணிற்பிளை சாடி ஓடி அலைந்து
விளையா டற்கு விரிவிடம் பெறுவாய்;
ஐய மிதற்கிலை; அடலும் ஆற்றலும்
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு விதமாம்;
அறத்தொடும்முறையொடும் ஆழ்ந்தஅறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின;
வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லைநீ யாயின் மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னா லாகுமோ?
யாவரே பெரியர்? யாவரே சிறியவர்?
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்
ஆதலின் அற்பர் ஆகா தவரென
ஓதுதல் மடமையின் சாதனை யாமே.

—தேசிகவிநாயகம்பிள்ளை

1. இப்பாட்டில் வரும் கதையை உரைநடையில் எழுதுக.
2. இப்பகுதியில் வரும் மெய்ப்பாடுகளை யெடுத்தெழுதி வகைக்கோர் உதாரணங் காட்டுக
3. எதுகை, மோனை என்பவற்றிற்கு மேற்குறித்த பகுதியிலிருந்து உதாரணங் காட்டி விளக்குக.
4. வன்மை – வண்மை, துலக்கல் - துளக்கல், உரு – உறு, சாதனை – சோதனை :— பொருள் எழுதி வாக்கியங்கள் அமைக்க.
5. பெயரெச்ச வினையெச்சங்கட்கு முறையே மும்மூன்று உதாரணங்கள் தருக.
6. "யாவரே பெரியர்? யாவரே சிறியர்?"—இதைப் பற்றி உமது கருத்தென்ன?
7. "என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு விதமாம்"
இப்பகுதியை உரைநடையிலெழுதி நிறுத்தக் குறிகள் இடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

நாராய்! நாராய்!! செங்கால் நாராய்!!!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் பெடையுந்
தென்திசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட ஏகுவி ராயின்
சத்திமுற் றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
வரவுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டெங்
கோமான் வழுதி கூடன் மன்றத்(து)
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ
அலகு திறந்த பல்லின னாகிப்
பேழைசெய் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே.

— சத்திமுற்றப்புலவர்

1. இச் செய்யுளுக்கு ஏற்றதோர் தலையங்க மிடுக.
2. புலவர் எங்கே இருந்தார்?
3. நாரைகள் எத்திசை நோக்கிச் சென்றன? அவர் ஊர் எத்திசைக்கண்ணது?
4. புலவர் யாரிடம் தூதாக அனுப்பினர்?
5. புலவன் தன் நிலைமையை நாரைக்கு எவ்வாறு கூறினன் என்பதை வசனநடையிற் சுருக்கி எழுதுக
6. புலவன் நாரையைச் சத்திமுற்றவாவியிற் செல்லச் சொன்னது எதற்காக இருக்கலாம்?
7. பொருள் கூறுக: — பவளக்கூர்வாய்; வரவு பார்த்திருக்கும்; வழுதி — கூடல்.



8. விளிப்பெயர், அளபெடை, குற்றியலுகரம், இவற்றிற்கு மேற்குறித்த செய்யுளிலிருந்து உதாரணந் தருக.
9. தொடரிலக்கணம் கூறுக: நனைசுவர் — பவளக்கூர் — கூர்வாய் — கோமான் — வழுதி.
10. உவமைகளை விளக்குக.

---

## 15

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

—திருக்குறள்

1. அறிவு எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது எது?
2. மேற்படி பாட்டுக்குப் பதவுரை எழுதுக.
3. 'மெய்ப் பொருள்' இதற்குத் தொடர்மொழியிலக்கணம் புணர்ச்சியிலக்கணங் கூறுக.
4. கேட்பினும் – இதிலுள்ள உம்மையைப்பற்றி யாது அறிவாய்?
5. திருவள்ளுவர் எக்காலத்தில் இருந்தவர்? அவரோடிருந்த புலவர் யார்?

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.

—திருக்குறள்

1. இக்குறளின் கருத்து யாது?
2. 'ஊருணி' இதன் பொருள் கூறுக
3. "ஒப்புர வறிதல்" இக்கருத்துக்கொண்ட ஔவையாரின் வாக்கு ஒன்றை எழுதுக
4. பேரறிவாளனுக்கு உவமானம் எது?
5. அறிவுடையவன் செல்வத்தை ஊருணிக்கு ஒப்பாகக் கூறியதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

### தமிழர் அஞ்சா நெஞ்சம்!

நெற்றிக்கண் காட்டிடினுங் குற்ற மென்ற
நிகரில்லா நக்கீரர் நிலவு நாட்டீர்
கொற்றச்சிவ னடிக்கல்லாற் குனியோ மியார்க்குங்
குடியல்லோம் கூற்றஞ்சோம் எனுஞ்சொற் கோனைப்
பெற்றதமிழ் நாட்டீர்காள் பிள்ளை ஞானப்
பெரியமறை தந்துதமிழ்ப் பெருமை நாட்டக்
கற்றதமிழ் நாட்டீர்காள் கலங்கா துள்ளம்
கடமையினைப் போற்றிடுவோம் கடவுள் காப்பே.

இன்னமுதத் தமிழர்களே யிசைந்து வாரீர்
ஏங்காம லேமாந்து தூங்கி டாமல்
உன்னதமாய்த் தலைநிமிர்ந்து நடப்போ மிந்த
வுலகினிலே பிறநாட்டார் உழைப்பா லுற்ற
மன்னிசையை நாமடைய மயக்க மேனோ
மனிதனியற் றியதையொரு மனிதன் செய்வான்
அன்னைவெறி பிடித்திடுமின் ஆண்மை கொண்டோர்
அடைவார்கள் வெற்றியிதி லைய முண்டோ.

—சுத்தானந்த பாரதி

1. இரண்டாம் செய்யுளின் பொழிப்பெழுதுக.
2. சிறு குறிப்பெழுதுக: நெற்றிக்கண், அமுது, நக்கீரர்.
3. பிறநாட்டாரிடமிருந்து கற்கவேண்டிய முறை யென்ன?
4. இப்பாட்டுக்கள் எதைச் செய்யும்படி ஏவுகின்றன? (ஒரு வாக்கியத்தில்)
5. "கொற்றச் சிவனடிக் கல்லாற்......கூற்றஞ்சோம்" என்ற தொடர்ப்பொருளை நிலைநாட்டிய ஒரு பெரியார் பெயர் — அவர் செய்த ஒரு வீரச் செயல் — இவற்றைத் தருக.



6. இப்பாட்டுக்கள் எச்சுவையின் பாற்படும்?
7. (அ) தமிழ்ப் பெருமை நாட்டும் இருவரின் பெயர்களைக் கூறுக.
   (ஆ) பெருமை நாட்டிய இரு தமிழரின் பெயர்களைத் தருக
8. எதில் ஐயம் வேண்டா என்கிறார்?
9. எதிர்ப் பதங்களைத் தருக:—குனி, தூங்கு, ஆண்மை, அன்னை, வெற்றி, மயக்கம்.
10. "ஆண்மை கொண்டோர் அடைவார்கள் வெற்றி"—இதைப்பற்றி பதினைந்து வரிகளுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

## 17

### பாஞ்சாலி சபதம்

1. தோல்வி லைக்குப் பசுவினைக் கொல்லும்
துட்ட னிவ்வுரை கூறுதல் கேட்டே,
தூல்வி லக்கிய செய்கை களஞ்சும்
நோன்பி னேனுள நொந்திவை கூறும்:
'தேவ லப்பெயர் மாமுனி வோனும்
செய்ய கேள்வி யசிதனு முன்னர்
காவ லர்க்கு விதித்ததந் நூலிற்
கவறு நஞ்செனக் கூறினர் கண்டாய்.'

2. 'வஞ்ச கத்தினில் வெற்றியை வேண்டார்
மாயச் சூதைப் பழியெனக் கொள்வார்,
அஞ்ச லின்றிச் சமர்க்களத் தேறி
யாக்கும் வெற்றி யதனை மதிப்பார்,
துஞ்ச நேரினும் தூயசொல் லன்றிச்
சொல்மி லேச்சரைப் போலொன்றும் சொல்லார்,
மிஞ்சு கீர்த்திகொள் பாரத நாட்டில்
மேவு மாரியர்" என்றனர் மேலோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 'ஆத லாலிந்தச் சூதினை வேண்டேன்
ஐய, செல்வம் பெருமை யிவற்றின்
காத லாலர சாற்றுவ னல்லேன்;
காழ்த்த நல்லற மோங்கவு மாங்கே
ஓத லாலு முணர்த்துத லாலும்
உண்மை சான்ற கலைத்தொகை யாவும்
சாத லின்றி வளர்ந்திடு மாறும்,
சகுனி, யானர சாளுதல், கண்டாய்.

4. 'என்னை வஞ்சித்தென் செல்வத்தைக் கொள்வோர்
என்ற னக்கிடர் செய்பவ ரல்லர்,
முன்னை நின்றதோர் நான்மறை கொல்வார்,
மூது ணர்விற் கலைத்தொகை மாய்ப்பார்,
பின்னை யென்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை யழைப்பார்;
நின்னை மிக்க பணிவொடு கேட்பேன்
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி' யென்றான்.

—சி. சுப்பிரமணிய பாரதியார்

1. பின்வரும் பதங்கட்குப் பொருள் கூறுக:—நோன்பு, கவறு, கலி, கலை.
2. பின்வரும் பதங்கட்கு எதிர்மொழி கூறுக:—பழி, சாதல், செல்வம், விதித்த.
3. நூல்கள் விலக்குகின்ற செயல்கள் ஐந்து கூறுக.
4. கவறாடலின் தீமையை விளக்கும் ஒரு செய்யுள் கூறுக.
5. 'ஆரிய மாதர்களுமே சமர் விருப்புடையர்"—இதனைக் குறிக்கும் ஒரு கதையைச் சுருக்கிக் கூறுக.
6. "ஆதலால் இந்தச் சூதினை வேண்டேன்" — இது யார் யாருக்குக் கூறியது?
7. "நெஞ்சிற் கொள்கையை நீக்குதி"—இதில் நெஞ்சிற் கொண்ட கொள்கை என்ன?



8. இச் செய்யுட்களில் வந்துள்ள மூன்று வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் கூறி, எத்தனையாம் வேற்றுமை என்றும் கூறுக.
9. பின்வருவன என்ன தொடரெனக் கூறுக:— செய்ய கேள்வி, தூய சொல், பீடை செய்யும்.
10. தமிழ்நாட்டில் அறங்கருதாது; செல்வம், பெருமை இவற்றைக் கருதி அரசாண்ட மூன்று அரசர்களின் பெயர் கூறுக.
11. மேற்படி செய்யுட்கள் கூறும் வரலாறு பாரதக் கதையில் எச்சந்தர்ப்பத்தின்கண் உள்ளது?
12. பாரதியார் பாடல்கள் எங்ஙனம் மக்கட்குப் புத்துணர்ச்சியையும் இன்பத்தையும் ஊட்டுகின்றன?

## 18

### பஞ்ச தந்திரம்

"பஞ்சதந் திரங்கள் என்னும்
பான்மையே துரைத்தீர்," என்ன,
"வஞ்சமாம் மித்ர பேதம்,
மருவிய சுகிர்லா பம்,சீர்
விஞ்சுமா நிலத்திற் சந்தி
விக்ரகம், அர்த்த நாசம்,
அஞ்சலில் அசம்பி ரேக்ஷ்ய
காரித்வ மாம்:அ வற்றுள்

மித்திர பேதம் நட்பை
விலக்கியே பகையுண் டாக்கல்;
ஒத்தவர் நட்புக் கூட்டல்
ஓதிய சுகிர்லா பந்தான்;
மெத்தவும் பகைத்து ளாரை
விரும்பிநட் பாக்கிப் பின்னர்ச்
சத்துரு நாசம் பண்ணல்
சந்திவிக் கிரகம் ஆமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்ததை அழியப் பண்ணல்
கெழுமிய அர்த்த நாசம்;
திடப்பட விசாரி யாமல்
செய்யுங்கா ரியத்தின் நாமம்
கடைப்படும் அசம்பி ரேக்ஷிய
காரித்வம் என்ப தாகும்
தடப்பெருந் தோளீர்!'' என்றான்
சதுர்மறைக் குரிய கோமான்.

—வீரமார்த்தாண்டதேவர்

1. பஞ்சதந்திரங்களுமெவை? அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாய் விளக்குக.
2. சதுர்மறைகள் எவை?
3. மேற்படி செய்யுட்களில் வந்துள்ள வடசொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ப் பதங்கள் குறிப்பிடுக.
4. பின்வரும் சொற்களின் பொருள்தரும் வேறுசொற்கள் எழுதுக:—கோமான், மித்துரு, சத்துரு, அஞ்சல்.
5. தொடரிலக்கணங் கூறுக:—
அர்த்தநாசம், தடப்பெருந்தோளீர், சதுர்மறை, ஒத்தவர் நட்பு.
6. இறுதிச் செய்யுளைப் பங்கீகரணஞ் செய்க.
7. இச் செய்யுட்களின் பொருளமைப்பின் சிறப்பு யாது?
8. பஞ்சதந்திரங்களுள் ஒன்றினைக் கதைமூலம் விளக்குக.



## 19

"பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்."

1. நாம் எதைப் பாராட்டுதல் வேண்டும்?
2. 'பதடி' — பொருள் கூறுக.
3. 'எனல்' என்னும் இரு சொற்களும் இங்கு என்னென்ன பொருளில் வந்துள்ளன.
4. இக் குறட்பா திருக்குறளில் எவ்வதிகாரத்தின்கண் உள்ளது? அந்த அதிகாரத்தின் மூலம் வள்ளுவர் போதிப்பன யாவை?
5. "பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ" — இதனைத் தலையங்கமாகக் கொண்டு பதினைந்து வரிக்கு மேற்படாத கட்டுரை எழுதுக.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

1. இச் செய்யுளிலுள்ள இரண்டு எதிர்ப்பதங்கள் கூறுக
2. 'இன்பம்' – 'புகழ்':— இவை யார் யாருக்கு உண்டாகின்றன? இவற்றுள் எது சிறந்தது?
3. "பொன்றுந்துணையும் புகழ்'—இப்பகுதியின் கருத்தை விளக்குக.
4. திருவள்ளுவர் இக் குறட்பாவின் மூலம் மக்கட்கு எந் நீதிமார்க்கத்தை எடுத்துப் போதிக்கின்றார்?
5 இக் குறட்பா எடுத்தோதும் நீதியை நீவிர் விரும்பும் பெரியார் ஒருவரின் சரிதையிலிருந்து உதாரணங்கள் காட்டி விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாசம்
அலர்ந்ததேங் கோதையாள் ஆழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது.

—நளவெண்பா

1. இச் செய்யுளின் கருத்தை உரைநடையி லெழுதுக.
2. பொழுது புலர்கையில் தோற்றுங் காட்சிகளுள் இங்குக் குறிப்பிடப்படாத மூன்று எழுதுக.
3. காசினியுந் தாமரையுங் கண்விழித்த தெவ்வாறு?
4. 'தாமரை" இரு பொருள் தருமாறு வசனம் அமைக்க.
5. காசினி, தாமரை, இவை எவ்வாகு பெயர்கள்?
6. தேங்கோதை, ஆழ்துயரம்:— என்ன தொடர்கள்?
7. உடம்படுமெய்க்கோர் உதாரணம் தருக.
8. தேங்கோதை, கைம்மலர், அற்றைப்பொழுது, பூங்குமுதம்:— பிரித்துப் புணர்ந்தமைக்கு விதி காட்டுக.
9. புலர்ந்ததே என்பதிலுள்ள ஏகாரம் எப்பொருள் தந்தது?
10. "துயரத்தோடு" என்பதிலுள்ள 'ஓடு';— இதைப் பற்றி யாதறிவீர்?
11. "அலர்ந்த தேங்கோதையாள் ஆழ் துயரத்தோடு"— இதிற் குறிப்பிட்ட வரலாற்றின் சுருக்கத்தைச் சந்தர்ப்பம், காரணம் முதலிய தொடர்பு விளங்க எழுதுக.
12. தமயந்தியின் குணதிசயங்களை ஆராய்க.



## 21

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

—நளவெண்பா

1. இதன் கருத்தை ஒரு முற்றுவினை கொண்ட வாக்கியத்தி லமைக்க.
2. "மாலை":— இரு பொருள் தருமாறு வசனமமைக்க.
3. வில்லி:— இதனோடு தொடர்புற்ற மோனைச் சொல் எழுதுக.
4. முல்லை என்பதோடு இங்குக் குறிப்பிடாத மூன்று தொகைநிலைத்தொடர் எழுதுக.
5. (அ) "ஊத" எவ்வாய்பாட்டெச்சம்? என்ன காலம்? (ஆ) "மெல்ல" எவ்வகை யெச்சம்?
6. 'கணை தெரிந்து' எவ் வேற்றுமை? இதனோடு ஒத்த வேறொரு தொடர் எழுதுக.
7. வெவ்வேறினமான குற்றியலுகரச் சொற்கள் மூன்று எழுதுக.
8. பங்கீகரணஞ் செய்க.
9. "காலைக் காட்சியோ, மாலைக் காட்சியோ ஆனந்திக்கத் தக்கது" என்னும் பொருள் பற்றி சியாமளா — வனஜா என்னு மிருவருக்கிடையில நடந்த சம்பாஷணையை எழுதுக.
10. "நைஷதம் புலவர்க்கு ஔஷதம்" என்னும் பழமொழியை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22

### நட்பின் சிறப்பு

1. " ........ ........................................................

சான்றகுணத் தாய்! நின்னைச்
சந்ததமும் நினைந்திருப்பேன்;
தோன்றவனே கம்பெறினும்
தொன்னட்பின் சிறந்தனவோ?

2. " ஆயின்மறை முதற்கலைக
ளனைத்தும்உணர்ந் தறம்மறம்பாத்(து)
ஏயின் இது நன்றிதுதி(து)
என்றுணர்த்தும் அவர்நட்பை
வீயினுந்தான் மறப்பர்களோ
மேதையோர்? மறப்பரேல்
நாயினுங்கீழ்ப் பட்டவர்கள்
அவர்காண் இந் நானிலத்தே.

3. " பேயோடு பழகுறினும்
பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால்;
தூயோரும் புகழ்தூயோர்
ஆயோர்கள் பெருநட்பை
அருந்தவத்தால் பெறலன்றி
ஏயோஎண் மையிற்கிடைப்பின்
இகழ்வரோ இகழ்வில்லார்?

4. " கூடுதற்குக் கூடாத
கூட்டத்துப் படும்நட்பு
விடுதற்குத் தக்கதாய்
நாடோறும் மெலிந்தொழியும்;



நீடுதற்குத் தக்கதுநன்
னெறிநின்றோர் நட்பொன்றே;
தேடுதற்குக் கிடையாத
திரவியமும் அஃதாமால்.

5. " முத்திக்கு வித்தாகும்
முழுதுணர்ந்தோர் பெருநட்பே;
தித்திக்கும் நாடோறும்;
தேவர்பெறற் கருந்திருவும்
சித்திக்கும் படிஅருளும்
செப்பரிதால்; அதுநிற்க;
எத்திக்கும் புகழுநினக்
கியல்மணநன் காயிற்றே?

—குசேலோபாக்கியானம்

1. நட்பின் சிறப்பைக் குசேலர் எச்சந்தர்ப்பத்தில் கண்ண பிரானுக்குக் கூறுகின்றார்?
2. மேதையோர் எதை மறக்கமாட்டார்?
3. தூயோர் நட்பைப் பெறின் அடையும் பயன்களெவை?
4. பின்வரும் சொற்களுடன் அவற்றின் எதிர்ச் சொற்களும் வர வசனங்களெழுதுக:

   புகழ், தூயோர், முத்தி, தித்திக்கும், சித்தி.
5. நூல், கலை, மணம் :- ஒவ்வொரு சொல்லும் இரு பொருள்கள் தர வசனங்கள் எழுதுக.
6. 'அரிதரிது' என ஒரு சொல்லை இரு முறைகூறியதேன்?
7. நட்பு, தீது, அஃது — ஒவ்வொன்றும் எக் குற்றியலுகரத்தின் பாற்படும்?
8. பேயோடு, நட்பை — இவை எவ்வேற்றுமை? எப்பொருளைத் தருகின்றன?
9. குசேலரின் விசேட குணங்களை விளக்குக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 குசேலர் சரித்திரத்தில் எப்பாகம் நடிப்பதற்கு விசேடமா யமைந்துள்ளது? நாடகபாத்திரங்களையும் இடம் காலம் இவற்றையும் வரைக.

11. 'முழுதுணர்ந்தோர் பெருநட்பு முத்திக்கு வித்தாதல்' எங்ஙனம்?

12. "நன்னெறி நின்றோர் நட்பு தேடுதற்குக் கிடையாத திரவியம்." இதனை வேண்டிய உதாரணங்களுடன் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதுக.

## 23

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே.

பாவின் சுவைக்கட லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே—நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவமே.

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே.

—திரு. தேசிகவிநாயகம்பிள்ளை

1. "திரு" என்னுஞ் சொல் இரு பொருள்கள் தர வசனங்கள் அமைக்க.
2. 'தமிழ்' என்ற சொல்லுக்கு அடைமொழி வரைக.
3. "தமிழ்மறையைப் போற்றுவமே" ஏன்? ஆசிரியர் கூறிய காரணங்களை விளக்குக.



4. கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள்:- என்னும் சொற்கள் ஒவ்வொன்றிலும் உள்ள எழுத்துக்களால் நான்கு சொற்களுக்குக் குறையாமல் ஆக்குக.
5. நன்னயம், செந்தமிழ், சிலப்பதிகாரம் :- இத்தொடர்ச் சொற்களைப் பிரித்தெழுதுக.
6. இரண்டு பெயரெச்சங்கள் தெரிந்தெடுத்து, அவை முக்கால வாய்பாடுகளிலும் வர வசனங்களிலமைக்க.
7. வேற்றுமை மயக்கத்திற்கு நீர் அறிந்த நூலிலிருந்து உதாரணம் காட்டுக.
8. "வள்ளுவர் தந்த திருமறை" என்ற நூலில் ஒரு பாட்டெழுதுக.
9. (அ) கம்பன் பாடிய இராமாயணத்தில் வரும் பத்துக் கதைப்பாத்திரங்கள் கூறுக.
   (ஆ) ஒவ்வொரு காண்டத்தைப் பற்றியும் விளக்கிச் சுருக்கமா யெழுதுக.
10. சிலப்பதிகாரம் யாரால் இயற்றப்பட்டது? அக்கதை நிகழ்ச்சிக்குரிய நாடுகள் எவை?
11. சிலப்பதிகாரக் கதையோடு தொடர்புபட்ட வேறு பெருங்காப்பியம் யாது? அது கூறும் பொருளைச் சில வரிகளிற் சுருக்கி எழுதுக.
12. சீதை, திலகவதியார், கண்ணகி: இவர்களுடைய கற்பின் மகத்துவ வேறுபாட்டை எடுத்து விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

### கன்னன் நன்றியுரை

1. "மருவார்வண் தாரான் மணிமுடியான் செய்த
அருள்தான் அறியாதார் இல்லை ;—தெருளா
அழிகொடா வாறே அடுகளிற்றாற்(கு) ஆகில்
பழிகள்தாஞ் சாலப் பல.

2. "மதமா மழகளிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவி உலகறியும் அன்றே ?—உதவிதனை
நன்றுசெய்தோர்தங்களுக்கு நானிலத்தில்நல்லோர்கள்
குன்றுவரோ செய்ந்நன்றி ; கூறு.

3. மைத்தடங்கண் மாதேவி வார்துகிலையான்பிடிக்க
அற்று விழுந்த அருமணிகள்—மற்றிவற்றைக்
'கோக்கேனோ!' என்றுரைத்த கொற்றவர்க்(கு)
என் ஆருயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு.

4. உந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீர் ;
இன்றென்மேல் ஆசை இலையுமக்கு ;—அன்று
வடுவஞ்சிப் போவிட்டீர் ; மாண்டேனேல் இன்று
'நட'வென்பீர் யாரை நயந்து ?

5. "நன்றாக மன்னன் எனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தான் ;—என்றாலும்
ஈண்டவன் செய்த உதவியினை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து?"

—பாரதவெண்பா

1. கன்னன் மறுத்துக் கூறிய காரணங்களெவை ?
2. 'கொற்றவன்' கன்னனுக்குச் செய்த நன்றிகளுள் ஒன்றினை விரித்துக் கூறுக.
3. நான்காம் செய்யுளை வசனநடையில் எழுதுக.



4. பின்வரும் தொடர்களுக்கு விசேடவுரைகள் தருக :—
தாமரையாள், மைத்தடங்கண், மாதேவி, மருவார், வண்தாரான், அடுகளிற்றான்
5. "மா" என்னுஞ் சொல் நான்கு பொருள்கள் தருமாறு வசனங்களமைக்க.
6. "நானிலம்" என்றதெதை? ஏன்?
7. இடைக்குறை, கடைக்குறை என்பவற்றிற்கு இங்கே உதாரணங்கள் தெரிந்தெழுதுக.
8. வினைத்தொகைக்கு இரண்டு உதாரணங்கள் இச் செய்யுளிலிருந்து எழுதுக.
9. கன்னனிடம் காணப்பெற்ற சிறப்பியல்புகளை மேற்கோள்களுடன் நிறுவுக.
10. "நன்றி மறவேல்" என்ற விடயத்தைப் பற்றிப் பதினைந்து வரிகளுக்கு மேற்படாத கட்டுரை வரைக.

---

## 25

### விபீடணன் அடைக்கலம்

கரங்கள்மீச் சுமந்து செல்லும்
கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களும் உருக நோக்கும்
காதலன் கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும்
இருநிலத் திறைஞ்சு கின்றான்
வரங்களின் வாரி அன்ன
தாளிணை வந்து வீழ்ந்தான்.

அழிந்தது பிறவி என்னும்
அகத்தியல் முகத்துக் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணில்
மார்புற வணங்கி னானைப்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிந்ததோர் கருணை தன்னால்
புல்லினன் என்று தோன்ற,
"எழுந்தினி திருத்தி" என்னு
மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.

ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந் துவகை தூண்ட
"ஏழினோ டேழாய் நின்ற
உலகும்என் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும்
வாள்எயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன்" என்றான்.

—கம்பராமாயணம்

1. வாள், எயிற்றரக்கர், மலர்க்கை கருணை வள்ளல்: இவற்றில் வரும் அடைகளின் விசேடங்களை விளக்குக.
2. விபீடணன் செய்கையை விபரி.
3. "தாளில் வீழ்ந்தானை" இராமபிரான் எங்ஙனம் வரவேற்றான்?
4. தன் கூற்று வாக்கியங்கள் இரண்டு கூறுக.
5. அடைக்கலம் என்ற கருத்தமைந்த வேறு சொற்கள் தருக.
6. கதிர், வாள் என்னுஞ் சொற்கள் ஒவ்வொன்றும் இரு பொருள் தர வசனங்களமைக்க.
7. மூன்றுஞ் செய்யுளைப் பங்கீகரணஞ் செய்க.
8. பின்வரும் செய்யுட்பகுதிகளின் பொருளை விளக்குக.
   (அ) வரங்களின் வாரி அன்ன தாளிணை வந்து வீழ்ந்தான்.
   (ஆ) அகத்தியல் முகத்துக் காட்ட.
9. இச் செய்யுட்களின் கருத்தை எளிய நடையில் 12 வரிக்கு மேற்படாமற் சுருக்கி எழுதுக.



10. சரித்திரத்திலோ இலக்கியத்திலோ அடைக்கல மார்க்கத்தைத் தழுவியவர் வேறு யாவர்? எவரை?
11. ஐம்பெருங் காப்பியங்கள் எவை? ஒவ்வொன்றினைப் பற்றியும் சுருக்கமாக ஒரு பந்தி எழுதுக.
12. 'விபீடணன் அடைக்கலம்' என்ற கதைப் பகுதியை நாடகமாக வரைக.

## 26

1. பாரடியோ வானத்திற் புதுமை யெல்லாம்
பண்மொழீ! கணந்தோறு மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்த லின்றி
உவகையுற நவநவமாத் தோன்றுங் காட்சி
யாரடியிங் கிவைபோலப் புவியின் மீதே
யெண்ணரிய பொருள்கொடுத்து மியற்ற வல்லார்
சீரடியாற் பழவேத முனிவர் போற்றுஞ்
செழுஞ்சோதி வனப்பையெல்லாம் சேரக்
[காண்பாய்,

2. கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்
கணந்தோறும் நவநவமாங் களிப்புத் தோன்றும்
கருதிடவுஞ் சொல்லிடவு மெளிதோ ஆங்கே
கணந்தோறு மொருபுதிய வண்ணங் காட்டி
காளிபரா சக்தியவள் களிக்குங் கோலம்
கணந்தோறு மவள்பிறப்பா ளென்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை யிங்குக் காண்பாய்

3. அடிவானத் தேயங்கு பருதிக் கோலம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
யெடுத்தவற்றை யொன்றுபட வுருக்கி வார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவான வட்டத்தைக் காளி யாங்கே
மொய்குழலாய் சுழற்றுவதன் மெய்ம்பு காணய்
வடிவான தொன்ருகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்.

4. அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே, பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு ; முன்னே
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய்
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை யுண்டோ ?

— சி. சுப்பிரமணிய பாரதியார்.

1. பின்வரும் பதங்கட்குப் பொருள் கூறுக:— நவம், வனப்பு, வண்ணம், கோலம், பகுதி, மொய்ம்பு.
2. பின்வரும் பதங்களை வைத்து இரு பொருள்தரத் தனித்தனி வசனம் அமைக்க: யாரடி, முனிவர், கணம், கோடி.
3. (அ) மேற்படி செய்யுட்களை வாசித்து ஏற்றதோர் தலையங்கம் இடுக.
(ஆ) சூரியனைக் குறிப்பதற்கு எடுத்துக்கொண்ட சொற்றொடர்களைக் குறிப்பிடுக
4. செழுஞ்சோதி வனப்பை முனிவர், அல்லது புலவர் புகழ்ந்து பாடிய செய்யுட்களில் ஒன்று கூறுக.
5. "காளி பராசக்தி கணந்தோறும் பிறப்பாள்"—இவ் வுண்மையை விளக்குக.
6. தற்குறிப்பேற்ற அணியாவது யாது? இதனை மேற் படி பாட்டில் ஒரு உதாரணம் எடுத்துக் காட்டி விளக்குக.
7. தொடரிலக்கணம் கூறுக — இடிவானம், பண்மொழி மொய்குழல், பத்துக்கோடி.
8. புணர்த்தி விதிகூறுக: ஒன்று + அடி, உவகை + உற. வேறு + வேறு.



9. 'அந்தி வானக் காட்சி': இதனை விளக்கி ஒரு பந்தி வரைக.
10. "கடற்கரையில், சாந்திமயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோகவயப்படுத்தி நீலக்கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனு கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் கவிஞர் பாரதியார் தன்னுடைய கம்பீரமான குரலிற் பாடினர்"—இவ்வுண்மையை வேண்டிய உதாரணங்கள் மூலம் ஆராய்க.

---

# 27

## இரங்கற் பாக்கள்

1. நாரார் பொருள்க ணனிவிளக்கு
நல்ல ஞாயி றதுமறைந்து
வாரா தொழியின் வையமெலாம்
வருந்தா திருக்க வழக்குண்டோ
காரார் கொடையிற் கண்ணனைய
கனமாப் பெருநாற் கதிர்பரப்பிச்
சீரா ரொளிசெய் திருள்சீத்துச்
சொன்னய் சாமி நாதவள்ளால்.

2. பாட்டிற் களித்தா யிசையமுதைப்
பருகிக் களித்தாய் பைந்தமிழைக்
காட்டிக் களித்தாய் நல்லுரையைக்
கருதிக் களித்தாய் கலைபலவும்
ஊட்டிக் களித்தா யிவைதகுமா
லொருவிச் சாமி நாதமுகில்
வீட்டிற் களித்தா யெமைத்துயரில்
வீழ்த்திக் களித்தல் முறையேயோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மைந்தா வருக வருகவென
வாணி வாரி யெடுத்தனளோ
எந்தாய் வருக வருகவென
வெழில்வான் புலவ ரெதிர்ந்தனரோ
முந்தூர் கபிலர் பரணர்முதன்
முன்னே ரெதிர்கொண் டுவந்தனரோ
நந்தா மகிழ்வான் புகுநாளில்
நங்கள் சாமி நாதனையே.

— மகாவித்துவான் ரா. இராகவையங்கார்

1. பதப்பொருள் கூறுக: நார், கார், ஒருவுதல், சீத்தல், வாணி, நந்தா.
2. "பாட்டிற்களித்தாய்", "ஊட்டிக்களித்தாய்", "வீட்டிற்களித்தாய்": இத்தொடர்கள் செய்யுளில் இரு பொருள் பயக்குமாற்றை விளக்குக.
3. பின்வரும் சொற்றொடர்கள் இருபொருள் தரும்படி வசனமமைக்க:

வருந்தாது, கண்ணனைய, எந்தாய், மகிழ்வான்.

4. சாமிநாத வள்ளலை ஞாயிற்றுக்கு ஒப்பிட்டதன் ஏதுக்கள் எவை?
5. சாமிநாத வள்ளல் மக்கள் பயனடையுமாறு செய்தவை எவை?
6. "சாமிநாதன் வான்புகுநாளிற் சிலரைக் குறித்து அவர் வரவேற்றனரோ எனக் கூறப்பட்டது":

இவர்களை மாத்திரம் குறிப்பிடப்பட்டதன் காரணம் யாது?

7. பின்வரும் பதங்களைப் புணர்த்தி விதி கூறுக:

வருந்தாது + இருக்க, கொண்டு + உவந்தவர், பசுமை + தமிழ்.



8. தொடரிலக்கணங் கூறுக: கதிர்பரப்பி, இசையமுது, பைந்தமிழ், வருகவருக, எழில்வான்.
9. சாமிநாத வள்ளலை நீத்த தமிழ்த்தாய் எங்ஙனம் புலம்பி அவருடைய தமிழ்த்தொண்டை மெச்சுகிறாள்?
10. நீவிர் விரும்பிய ஒரு பெரியாரைக் குறித்து ஒரு இரங்கற்பா எழுதுக.

---

# 28

## படர்க்கைப் பரவல்

மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக்காண்பார்தங்கண்ணென்னகண்ணே!

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்(து)ஆ ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்னா நாவென்ன நாவே!

— சிலப்பதிகாரம்

1. திருமாலைச் சுட்டும் மறுநாமங்க ளெவை? அங்ஙனம் வழங்கப்படுவதற்குக் காரணங் காட்டுக.
2. 'வஞ்சங் கடந்தான்"— யாருடைய வஞ்சம்? கடந்தவன் யாவன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான உவமைச் சொற்கள் வைத்தெழுதுக:— உதாரணம்: மதிமுகம். இடை, நடை, மொழி, கண்.

4. அடியால், பஞ்சவர்க்கு, தம்பியொடு — ஒவ்வொன்றும் எத்தனையாம் வேற்றுமையில் வந்ததென்றும் என்ன பொருள் குறிக்கின்றதென்றும் எழுதுக.

5. வேற்றுமைத் தொகைக்கு இரண்டு உதாரணங்கள் தெரிந்து எழுதி, விரித்தும் விளக்குக.

6. பிரித்தெழுதுக:— சேவடி, மூவுலகு, தொல்லிலங்கை நாற்றிசை.

7. கடந்தானை, நடந்தானை என்னும் சொற்கள் எவ்விதப் பெயர்கள்?

8. இச்செய்யுள்கள் எவ்விதச் சுவையைக் கொடுக்கின்றன?

9. பின்வரும் ஒவ்வொன்றினையும் விரித்துக் கூறுக:— பஞ்சவர், பஞ்சாங்கம், பஞ்சவர்ணம், பஞ்சப்புலன், பஞ்சகாவியம்.

10. 'படர்க்கைப் பரவல்'— பொருள் விளக்குக.

11. மேற்படி செய்யுட்களின் திரண்ட கருத்தைப் பத்து வரிகளில் எழுதுக.

12. பின்வரும் தொடர்களிற் குறிப்பிடப்பட்ட வரலாறுகளின் சுருக்கத்தைச் சந்தர்ப்பம் காரணம் முதலிய தொடர்பு விளங்க எழுதுக: — "தூது நடந்தானை" "தொல்லிலங்கை கட்டழித்த சேவகன்"



## 29

1. மீட்டுமுரை வேண்டுவன வில்லையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனனெ னாநெடிய கையாற்
காட்டினனோ ராழியது வாணுதலி கண்டாள்.

2. இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலி நன்னுதலி செய்கை.

3. இழந்தமணி புற்றரவெ திர்ந்ததென லானாள்
பழந்தனமி ழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டா
ளுழந்துவிழி பெற்றதொ ருயிர்பொறையு மொத்தாள்

— உருக்காட்டுபடலம் - சுந்தரகாண்டம்

1. பின்வரும் செய்யுட்பகுதிகளின் பொருளை விளக்கு:—
   (அ) "செவ்வே நீட்டிதென நேர்ந்தனன்"
   (ஆ) "திறந்தெரிவ தென்னைகொலி நன்னுதலி செய்கை".
   (இ) "இழந்தமணிபுற்றரவு எதிர்ந்ததென லானாள்"
   (ஈ) "குழந்தையை யுயிர்த்த மலடி".

2. அசோக வனத்தில் சீதையைக் கண்ட அநுமன் மனநிலை எப்படி இருந்திருக்கும்?

3. அநுமன் சீதாபிராட்டியிடம் கணையாழியைக் கொடுக்கும்போது யாது கூறிக்கொண்டு கொடுக்கின்றான்?

4 "திறந்தெரிவ தென்னை கொல்"— என்று சீதாபிராட்டியின் செயலைப் புலவன் வியக்கக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கணையாழியைப் பெற்ற சீதாபிராட்டிக்கு உவமையாகக் கூறப்பட்டன யாவை? அவற்றுக்கும் சீதாபிராட்டிக்கும் உள்ள பொதுத் தன்மைகளைக் கூறுக.

6. பின்வரும் சொற்களின் பொருள் விளங்க உமது நடையில் தனித்தனி வசனங்களாக்குக :—

நேர்ந்தனன், திறம், எதிர்ந்தது, உயிர்த்த.

7. சொல்லிலக்கணங் கூறுக : வேண்டுவன, என, நுதலி, இழந்த

8. "திறந்தெரிவது என்னை கொல்"— ஈண்டு 'கொல்' எப்பொருளில் வந்தது?

9. மேற்படி செய்யுட்களிற் குறிப்பிட்ட கதையைச் சந்தர்ப்பத்துடன் அழகிய நடையில் எழுதுக.

10. கம்பர் கதாபாத்திரங்களைச் சிருட்டிப்பதில் இணையற்றவர் : இதனை, அநுமன், சீதாபிராட்டி என்னும் இரு கதா பாத்திரங்களில் ஒன்றை எடுத்து ஆராய்க

---

## அநுபந்தம் I

### வியாசத்திற்குரிய தலைப்புக்கள்

ஆறுமுகநாவலர்.
கைத்தொழில்.
வெள்ளச் சேதம்.
கடற் பிரயாணம்.
மலைநாடு.
புதினப்பத்திரிகையின் நன்மை.
மேல்நாட்டு நாகரிகம்.
உயர்தரக் கல்வி.
ஆகாயவிமான வீழ்ச்சி.
இலங்கையின் பெரிய துறைமுகம்.
கைலஞ்சம்.
நட்பின் மகத்துவம்.
மின்சார விளக்குத் தன் சுயசரிதை சொல்லல்
மதுரை நகரம்.
பாரதியார்.
இலவசக் கல்வி.
யுத்தத்தின் பின் உலகம்.
அரசாங்கத் தேர்தல்.
பாராளும்மன்றம்
உம் சீவியத்தில் மறக்கக் கூடாத ஓர் சம்பவம்.
தேசத் தொண்டு.
நீர் வீழ்ச்சி.
வியக்கத்தக்க ஒரு பெண்.
ஒரு புராதன ஆலயம்.
மாலைக்காட்சி.
சூரியோதயம்.
துறவியர் பெருமை.
நல்வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லினச் சேர்க்கை.
பொதுசனச் சேவை.
இன்சொற் கூறல்.
தன்னலமறுத்தல்.
வறுமையில் மனவுறுதி.
பத்திரிகைத் தொழில்.
நூல் நூற்றல்.
பாஷாபிமானம்.
தேசாபிமானம்.
ஒரு பரிசளிப்பு விழா.
தமிழ்ச் சங்க வருஷோத்ஸவம்.
இந்திய சுதந்திரம்.
யான் வாழும் ஊர்.
அன்னை கஸ்தூரிபாய்.
மகாத்மா காந்தி.
சரோஜினி தேவியார்.
அக்பர் சக்கரவர்த்தி.
கம்பர் கவித்திறம்.
காளிதாசர்.
மாணிக்கவாசகர்.
அயல்நாட்டுப் பிரயாணம்,
நீர்மூழ்கிக் கப்பல்.
நீர் விரும்பிய ஒரு புலவர்.
"ஐயமிட்டுண்."
குழந்தைப் பருவம்.
இயற்கை யழகு
சீவகாருண்யம்.
தொழிலாளர் எதிர்ப்பு.
பூத உடம்பு அழியும், புகழ் உடம்பு அழியாது.
தற்காலப் போர்முறை.
தமிழிசை இயக்கம்.



இலங்கை அரசியல்.
நாகரிகம்.
நகர பரிபாலன சங்கம்.
புத்தகங்களும் அவற்றால் வரும் பயனும்.
தமிழ் மொழி.
தமிழ் நாடு.
திருவள்ளுவர்.
நீர் வாணிகம்.
நுண் கைத்தொழில்.
கலைப்பெருக்கம்.
பட்டமளிப்பு விழா.
உடல் நலம்.
நாட்டு வாழ்க்கை.
வறுமையிற் செம்மை.
வாய்மை.
விஞ்ஞானக்கலை வளர்ச்சி.
இசையின்பம்.
சமுதாயத் தொண்டு.
ஒலிபரப்பலின் நன்மைகள்.
உலக ஒற்றுமை.
கல்வி முறைகள்.
உலகப் புதுமைகள்
கூட்டுறவுக் கழகம்.
உழைப்பின் சிறப்பு.
ஓழிவுநேரத்தைப் பயன்படுத்தல்.
வானொலி.
சிக்கனத்தின் நன்மை.
விளையாட்டின் அவசியம்.
நிழற்படக்காட்சியின் பயன்.
பௌதிக சாஸ்திர நுட்பங்களும் நாட்டின்
முன்னேற்றமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைத் தமிழ்ச் சிற்பங்கள்.
பண்டைத் தமிழர் வாணிகம்.
நாட்டின் பொருளாதாரம்.
நூல் நிலையம்.
காலந் தவறுமை.
காலத்தின் மாறுதல்.
அஜந்தா ஓவியங்கள்.
மேல்நாட்டு யாத்திரை.
வசன நூல் ஆராய்ச்சி.
நம்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக உம் கையிற் பத்துக் கோடி ரூபாயிருந்தால் எப்படி அப்பணத்தைச் செலவு செய்வீர்.
சமுகத்தைச் சீர்திருத்தும் பூரண அதிகாரம் உமக்குக் கிடைத்தால் அதனை எவ்வழியிற் சீர்திருத்துவீர்.
முற்காலப் போர்ப் படைகளும், இக்காலப் போர்ப் படைகளும்
நன்முறையிலே புதிய தொரு கிராமத்தை எங்ஙனம் அமைக்கலாம்.
வறியாரே இல்லாதிருக்க என்ன முறையை மேற் கொள்ளலாம்?
விஞ்ஞான சாஸ்திரியார்கள் கண்ட அற்புத இரகசியங்கள்.
செய்யுள் நயம் அறிதல்.

# அநுபந்தம் II

## விளக்கி எழுதுதல்

பின் வரும் பழமொழிகளை வாசித்து அவற்றில் அடங்கிய கருத்துக்களை விளக்கி எழுதுதல்.

**உதாரணம்:** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? (43)

மகாத்மா காந்தி சொல்லுகிறர்:—

"அக்காலத்தில் நான் கையெழுத்தைக் கவனிக்க வில்லை. அஃது இப்போது கோழி கிண்டியது போலிருக்கிறது. இராசேந்திரப்பிரசாதர் எழுத்து மணிமணியாயிருக்கிறது. அவரைப்போல் நான் எழுத முடியாது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அக்கரை மாட்டிற்கு இக்கரை பச்சை.
3. அடாத செய்தவர் படாத படுவர்.
4. அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்.
5. அளகேசனுனாலும் அளவறிந்து செலவு செய்ய [வேண்டும்.
6. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
7. அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத் [திரியிற் குடைபிடிப்பான்.
8. அன்பான சிநேகிதனை ஆபத்தி லறி.
9. அன்னநடை நடக்கப்போய் தன் நடையும் [கெட்டாற்போல.
10. அன்னமிட்டவர் வீட்டிற் கன்ன மிடலாமா?
11. ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்க [வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஆத்திரகாரனுக்குப் புத்தி மட்டு.
13. ஆரால் கேடு வாயால் கேடு.
14. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற்
[கண்ணாயிரு.
15. ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும்
[இரண்டும் சொல்லுக்குறுதி.
16. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
17. ஆறு கடக்கிற வரை அண்ணன் தம்பி
[ஆறு கடந்தால் நீயார் நானார்.
18. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.
19. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒருகாலம்.
20. ஆனைக்கும் அடி சறுக்கும்.
21. ஆனைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே.
22. இட்டுக் கெட்டார் எங்கு மில்லை.
23. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
24. இரும்புபிடித்த கையும் சிரங்கு பிடித்த
[கையும் சும்மாவிரா.
25. இளங் கன்று பயம் அறியாது.
26. இறைத்த கிணறு ஊறும், இறையாத
[கிணறு நாறும்.
27. இனம் இனத்தைக் காக்கும் வேலி பயிரைக்
[காக்கும்.
28. இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக்
[குலை அறுப்பான்.
29. இன்றைக் கென்பதும் நாளைக்கு என்பதும்
[இல்லை என்பதற்கு அடையாளம்.
30. ஈக்கு விடம் தலையில் தேளுக்கு விடம்
[கொடுக்கில்.
31. ஈர நாவிற்கு எலும் பில்லை.
32. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
33. ஊர் வாயை மூட உலை மூடி இல்லை.



34. ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடேல்.
35. எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?
36. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.
37. எருமை வாங்கு முன்னே நெய் விலை கூறுதே.
38. எலிவளை யானாலும் தனி வளை வேண்டும்.
39. எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத்
[தெய்வம் அடிக்கும்.
40. எறும்பு ஊரக் கல்லுந் தேயும்.
41. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
42. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்.
இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
43. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
44. ஐந்தும் மூன்றும் அடுக்காயிருந்தால்
அறியாப் பெண்ணும் கறியாக்குவாள்.
45. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
46. ஓட்டைச் சட்டியானாலும்
கொழுக்கட்டை வெந்தாற் சரி.
47. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம்
ஆகுமா?
48 கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
49. கண்டது கற்கப் பண்டித னாவான்.
50. கண்டதே காட்சி கொண்டதே கோலம்.
51. கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார்
[உண்டோ?
52. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
கூழானாலும் குளித்துக் குடி.
53. கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும்
அபயக்குரலை அன்றி அங்கொன்று மில்லை.
54. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு.
55. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. கிட்டா தாயின் வெட்டென மற
57. கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பம் ஏன்?
58. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
59. குண்டுமணி குப்பையிற் கிடந்தாலும்
[குன்றுமா நிறம்.
60. குரு இல்லார்க்கு வித்தை யில்லை,
முதல் இல்லார்க்கு ஊதிய மில்லை.
61. குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமா?
62. கெட்டாலும் செட்டி செட்டியே,
கிழிந்தாலும் பட்டுப் பட்டே.
63. கேட்ட தெல்லாம் நம்பாதே,
நம்பின தெல்லாம் சொல்லாதே.
64. கோத்திர மறிந்து பெண்ணைக் கொடு,
பாத்திர மறிந்து பிச்சை யிடு.
65. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும்
[நாப்பழக்கம்.
66. சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி
[முக்காற்பணம்.
67. சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம்
[எழுத வேண்டும்
68. தன்வினை தன்னைச் சுடும்,
ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.
69. திரைகடலோடியும் திரவியம் தேடு.
70. தேசத்தோ டொத்து வாழ்.
71. துணை போனாலும் பிணை போகாதே.
42. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்.
73. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று
[நினைக்கும்.
74. நித்தம் போனால் முத்தம் சலிக்கும்.
75. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.



76. நோய் அற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்.
77. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
78. பனை ஏறி விழுந்தவனை
மாடு ஏறி மிதித்ததுபோல்.
79. பொறுத்தார் பூமியாள்வார்,
பொங்கினார் காடாள்வார்.
80. போதும் என்ற மனமே
பொன் செய்யும் மருந்து.
81. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.
82. முதற் கோணல் முற்றும் கோணல்.
83. மெல்லெனப் பாயும் தண்ணீர்,
கல்லையும் உருகப் பாயும்.
84. மேழிச் செல்வம் கோழை படாது.
85. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோளத்தொடர்

# பூமிசாஸ்திரம்

இலங்கைப் பாடசாலைகளின் புதிய பாடத்திட்டத்திற்கமைய நான்காம் - ஐந்தாம் வகுப்புகளின் உபயோகத்திற்காக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய தலைமை ஆசிரியர். உடுவில், வே. மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்களால் எழுதப்பட்டது.

நான்காம் புத்தகம் சதம் 80
ஐந்தாம் புத்தகம் ரூபா 1-00

கிடைக்குமிடம் :-

சுன்னுகம்

தனலக்குமி புத்தகசாலை

---

V. Maha

...rsity of Ceylon
19-7-48.

உ

திருத்தணிகை
விசாகப்பெருமாளையர் அவர்கள்
இயற்றிய

# அணியிலக்கணம்

ஈ கல்யாணசுந்தரம் கம்பெனி
சிரபல புத்தக வியாபாரிகள்
124, செட்டியார் தெரு, கொழும்பு

ஈழகேசரி அதிபர்
திரு. நா. பொன்னையா அவர்களால்
வெளியிடப்பட்டது.

தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம் : இலங்கை

All Rights Reserved.

1939

விலை சதம் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED AT
THE THIRUMAKAL PRESS
CHUNNAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்

திருமகள் அழுத்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org